






# பொருளியல் நோக்கு

நவம்பர்
1985












## தீர்வையற்ற கடைகள்







# குடிமையங்களின் பெயர்ச்சியும் குடித்தொகை வளர்ச்சியும்




: ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சர்வதேச பொருளாதார, சமூக விவகாரங்கள் பிரிவின் தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

## வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து வளர்முக நாடுகளை நோக்கிய குடிமையங்களின் பெயர்ச்சி




இந்த ஐ. நா. வின் புள்ளிவிவர மதிப்பீடுகள் இதுவரை காலமும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் செறிந்திருந்த பிரதான குடிமையங்கள் இப்பொழுது வளர்முக நாடுகளை நோக்கி பெயர்ந்து வருவதனை காட்டுகின்றன. இதில் இலங்கைக்கு முக்கியமான விஷயம் என்னவெனில், கி. பி. 2000 ம் ஆண்டில் உலகின் மூன்று பிரதான குடிமையங்கள் எமது அயல் நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் அமைந்திருக்கும் என்பதாகும். மேலும், 2025 ம் ஆண்டளவில் இந்தியாவின் சனத்தொகை சீனாவின் சனத்தொகையை மிஞ்சி விடும் என்றும் இம்மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

# பொருளியல் நோக்கு

இதழ் 11 மலர் 8 நவம்பர் 1985



மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11-வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை


## நிரல்கள்


| | | |
|---|---|---|
| நிகழ்ச்சிக்குறிப்பேடு | 2 | நவம்பர் 1985 |
| விவசாயம் | 23 | நெல் விளைச்சல் போக்கு |
| நிதி | 24 | அபிவிருத்தி நிதிப்படுத்தலின் வளர்ச்சியும் பிரச்சினைகளும் |


## விசேஷ அறிக்கை


3 தீர்வையற்ற கடைகள்


## சிறப்புக்கட்டுரை


பிரேமசந்திர அத்துகோரளே 28 இலங்கையின் பொருளாதார தாராளமயமாக்கல் தொடர்பான கொள்கை சீர்திருத்தங்கள்

அவற்றின் தாக்கம் பற்றிய ஒரு பரிசீலனை


## அடுத்த இதழில்

- ★ வரவு செலவுத்திட்டம் 1986 - அதன் பொருளாதார பின்னணி, வருவாய், செலவுத்துறைகளில் அதன் தாக்கம்; சமூக - பொருளாதார அம்சங்கள் என்பன பற்றிய ஒரு பரிசீலனை
- ★ கடன் சுமையில் சிக்கியுள்ள மூன்றாவது மண்டல நாடுகள் சிலவற்றின் நிலை
- ★ இலங்கையில் மாவட்ட எல்லைகளை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியம்
- ★ நெல் விளைச்சலில் அமோக சாதனை

அட்டைப்படம்

வடிவமைப்பு: பாலித்த கன்னங்கரா


பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும்; எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதன் சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

## நிகழ்ச்சிக்குறிப்பேடு

**நவம்பர்**

1 1985 அக்டோபர் மாதத்திற்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 550.0 என குடிசனமதிப்பீட்டு, புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்தது.

5 பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 1986 ஆம் நிதியாண்டுக்கான வருமான, செலவின வரைவு மதிப்பீடுகள் 6,700 கோடி ரூபா செலவையும்; 3725.6 கோடி ரூபா வருமானத்தையும் காட்டின. உற்பத்தி, செலவினம் ஆகியவற்றிற்கான வரிகளே வருமானத்தில் மிகப் பெரிய பங்கை ஈட்டும் அம்சமாகும் (67%) அரசாங்க கடன் செல்வுகளுக்கான வாக்குப் பணமே (24%) மிகக் கூடிய செலவுக்குரிய அம்சமாகும்.

8 தொடர்ந்து நட்டத்தில் நடைபெற்றுவரும் ஏழு அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும், வர்த்தகத் தாபனங்களும் "புனருத்தாரணம்" செய்யத்தக்க கட்டத்தைத் தாண்டிவிட்டமையால் அவை மூடப்படல் அல்லது விற்கப்படல் வேண்டும் என்று அபிவிருத்திச் செயலாளர் மாநாடு சிபார்சு செய்திருப்பதாக ஒரு பத்திரிகைச் செய்தி கூறியது. இவையாவன: அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தகத்தாபனமான சோ இண்டஸ்ட்ரீஸ் அண்ட் விஜயா டைல்ஸ், உர உற்பத்திக் கூட்டுத்தாபனம், உருக்குக் கூட்டுத்தாபனத்தின் ii ஆம் கட்டம், கடற்றொழில் கூட்டுத்தாபனம், அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தகத் தாபனமான சினோர் அபிவிருத்தி நிறுவனம், சியாற்ரே (அரசாங்கத்திற்குச் சொந்தமான கைத்தொழில் வேலைக்களம்) என்பனவாகும்.

நாடு முழுவதிலும் உள்ள ஏறத்தாழ 4,00,000 கமக்காரர்களுக்குப் பயனளிக்கத்தக்கதான ஓர் ஓய்வூதியத் திட்டத்தை கமத்தொழில் அமைச்சு தயாரித்துள்ளது. இத்திட்டம், 18 வயதுக்கும் 54 வயதுக்கும் இடைப்பட்ட கமக்காரர்களை, ஓய்வுகால நன்மைகளுக்கும் மரணம், வலதுகுறைவு ஆகியவற்றுக்கெதிரான காப்புறுதிக் கட்டணங்களுக்கும் உரித்துடையவர்களாக்கும் என்று கமத்தொழில் அமைச்சு அறிவித்தது. உதவு தொகை வழங்கத்தக்க இவ்வோய்வூதியத் திட்டத்தில் சேரும் 18 வயதுடைய கமக்காரர் ஒருவர், 84 தவணைக் கட்டணங்களைச் செலுத்தியதும் 24,000 ரூபாவை அரையாண்டு ஓய்வூதியமாகப் பெற்றுக் கொள்ளலாம். கமக்காரர் 60 வயதை அடைந்த பின்னர் ஓய்வூதியம் வழங்குவதற்கு ஆரம்பிக்கப்படும்.

11 கொழும்பின் இரு போட்டி பங்குத்தொகுதி நிறுவனங்களான கொழும்பு தரகர் சங்கமும் வரையறுத்த பங்குத் தொகுதி தரகர் (உத்தரவாத) சங்கமும் டிசம்பர் 2 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஒரே வர்த்தக தளத்தில் தம் கொடுக்கல் வாங்கல்களை நடாத்தும் என்று அறிவிக்கப்பட்டது.

13 நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் தொடர்ந்து தமது 9வது வரவு செலவுத்திட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.


14 கொழும்பிலுள்ள சுங்க மோசடித் தடுப்பு அலுவலகம், சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்காவுக்கு வந்த மரத்தளபாடப் பொதி ஒன்றின் போலி அடிப்பாகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 15,000 கைக் கடிகாரங்களைக் கண்டுபிடித்து, அதனை வரவழைத்த கொழும்பு வர்த்தகர் ஒருவருக்கு இரண்டு இலட்சம் ரூபா அபராதம் விதித்தது.

15 1985 அக்டோபர் மாதத்தில் இலங்கையில் 15703,069 கிலோகிராம் தேயிலை உற்பத்தியாயிற்று என்றும், முந்திய ஆண்டு அக்டோபரில் 14943,753 கிலோகிராம் உற்பத்தியானதென்றும் இலங்கைத் தேயிலைச் சபை அறிவித்தது. இவ்வாண்டு அக்டோபர் வரை உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை 178,151,057 கிலோகிராமாகும். 1984 அக்டோபர் வரை 172,254,165 கிலோகிராம் தேயிலை உற்பத்தியானது. இவ்வதிகரிப்பு ஏறத்தாழ 3 சதவீதமானதாகும்.

19 பெருந்தெருக்கள் அபிவிருத்திக்கான ஒரு தொழினுட்ப உதவிக் கொடையாக (2.2 கோடி டொலர்களுக்குச் சமனான) 20,698 விசேஷ எடுப்பனவு உரிமைகள் சலுகைக் கடனை ஆசிய அபிவிருத்தி வங்கி அங்கீகரித்தது. இது, நடைபாதைகள் நலிவுறுவதைத் தடுப்பதற்கும், நாட்டின் மத்திய உலர் வலயத்திலுள்ள இரண்டு முக்கிய பிரதான பாதைகளின் (305 கி. மீ) மேற்பரப்பைத் திருத்துவதற்கும் பயன்படுத்துவதற்காக வழங்கப்படுகிறது என்று ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்தது. இத்திட்டத்திலடங்கும் பாதைகளில் ஒன்று தென்-மேற்கில் அம்பேபுஸ்ஸையுடன் திருக்கோணமலையையும் மற்றது தெற்கில் மாத்தளையையும் வடக்கில் அநுராதபுரத்தையும் இணைக்கும் பிரதான பாதைகளாகும்.

20 உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாண அமைச்சர், 1. 1. 1984ல் இருந்து இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்கு. மொத்த விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலகளிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றார். அதே தினத்தில் டோக்கியோ சிமெந்து லிமிட்டெட் தாபனத்துக்கும், லங்கா சிமெந்து லிமிட்டெட் தாபனத்துக்கும் மொத்த விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. அதிகரித்த உற்பத்திச் செலவுகள் காரணமாக இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் மொத்த விற்பனை வரி செலுத்த முடியாதிருந்தது. அத்துடன், லங்கா சிமெந்து லிமிட்டெட், டொக்கியோ சிமெந்து லிமிட்டெட் ஆகிய போட்டித் தாபனங்களுக்கு விலக்களிக்கப்பட்டமையால், மொத்த விற்பனை வரிச்சுமையை கூட்டுத்தாபனம் நுகர்வோர் மீது சுமத்த முடியாத நிலையிலிருந்தது.

கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர், சோளம் இறக்குமதியில் எண்ணெய், கொழுப்புக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நடத்தை ஈடு செய்வதற்காக 17228,517 ரூபாவைத் திறைசேரியிடம் பெறுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றார். 1982 முதல் கூட்டுத்தாபனம் உள்நாட்டுக் கமக்காரர்களிடமிருந்து சோளத்தைக் கொள்வனவு செய்து, கிராமக் கமத்தொழில் துறைக்குப் பெருந்தொகையான பணம் கிடைக்கச் செய்தது. எவ்வாறாயினும், 1984/85 பெரும்போக காலம் சோளப் பயிரிக்கு மோசமான காலமாக இருந்தது. இதனால் கூட்டுத்தாபனம் ஒரு மெட்றிக் தொன் சோளத்துக்கு 4,000 ரூபா என்ற உயர்ந்த விலையில் 5000 தொன்னை மட்டுமே கொள்வனவு செய்ய முடிந்தது. இவ்வுற்பத்திக் குறைவினால், கூட்டுத்தாபனம் உயர்ந்த விலையில் சோளம் இறக்குமதி செய்ய வேண்டியதாயிற்று. இடையறாது கமக்காரர்களுக்குக் கால்நடைத் தீனி வழங்கும் பொருட்டே இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டது. இவ்விறக்குமதி காரணமாகக் கூட்டுத்தாபனத்துக்கு 1.7 கோடி ரூபா மேலதிக செலவு ஏற்பட்டது.




ஜூன் 1982 லிருந்து மே 1983 வரையான 12 மாத காலத்தில் தீர்வையற்ற கடைகள் இறக்குமதி செய்த பொருட்களின் இறக்குமதிப்பெறுமதியும் செலுத்த வேண்டிய தீர்வையும்

# தீர்வையற்ற வர்த்தகம்

1960 க்களின் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு, 1970 க்களின் ஆரம்பத்தில் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவந்த இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கை, 1977 இல் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த வேளையில் பல வழிகளிலும் தோல்வி கண்டிருந்தது. புவியியல் ரீதியாக இலங்கை ஒரு சிறிய நாடாகவும், குறைந்த மூலப்பொருட்களைக் கொண்டிருப்பதும் இத் தோல்விக்குரிய அடிப்படைக் காரணமாகும். ஆகையால், பெரும்பாலான பொருட்களை உள்ளூரில் தயாரிக்கின்ற அபிவிருத்திமுறை காரிய சாத்தியமானதாக இருக்கவில்லை.

பிழைப்பூதிய மட்டத்திற்கு மேல், பொருளாதார ரீதியில் நாடு முன்னேறிச் செல்வதற்கு ஏற்றுமதி, இறக்குமதித் துறைகளில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்பது உணரப்பட்டது. பொருளாதாரத்திற்குப் புத்துயிரூட்டுவதற்கு விவசாய, கைத்தொழில், வர்த்தகத் துறைகளின் வெளியீடு அதிகரிக்கப்படல் வேண்டும் என புதிய அரசாங்கம் அதன் முதல் வரவு செலவுத் திட்டத்தில் (நவம்பர் 1977 ல்) வலியுறுத்தியது. இந் நோக்கத்தினை அடைவதற்கு இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்கி, வர்த்தகத்தையும், நாணயமாற்றுக் கொடுப்பனவுகளையும் தாராளமயமாக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. சந்தைச் சக்திகளின் மீது பெருமளவுக்குத் தங்கியிருப்பதும் போட்டித் தன்மையிலிருந்து பொருளாதாரம் அனுகூலமடைவதற்கு வழிவகுப்பதும் இதன் நோக்கங்களாகும். சுதந்திர வர்த்தகம், சுதந்திர துறைமுகங்கள், ஏற்றுமதிப்பதப்படுத்தல் வலயங்கள் என்பவற்றுடனை ஏற்றுமதி சார்ந்த 'திறந்த' பொருளாதாரக் கொள்கை இதன் ஒரு பிரதான அம்சமாகும். இயல்பாகவே தீர்வையற்ற வர்த்தகம் இதன் ஒரு அத்தியாவசியமான அங்கமாக அமையும்.

1981 அக்டோபரில் கொழும்பில் திறக்கப்பட்ட தீர்வையற்ற வர்த்தகக் கடைத்தொகுதி இலங்கைக்குப் புதியதொன்றல்ல; அரசுக்குச் சொந்தமான பீ.சீ.சீ. நிறுவனத்தின் ஒரு துணை நிறுவனமான ஓரியன்ட் கம்பனி (சிலோன்) லிமிட். 1972 இல் கட்டுநாயக்காவில் ஒரு விமான நிலயக் கடையைத் திறந்தது. பின்னர் இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனம் கோட்டையில், சதாம் வீதியில் இத்தகைய ஒரு கடையை ஆரம்பித்தது. சதாம் வீதியில் ஆரம்பிக்கப்பட்ட கடை முழுமையாகத் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்ய வில்லை; இதில் 25 சதவீத இறக்குமதித் தீர்வையுள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. ஆனல், விமான நிலயக் கடை முழுமையாகத் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்தது. உல்லாசப் பிரயாணிகள், இறங்கு பிரயாணிகள், விடுமுறையைக் கழிக்க வருகின்ற சுதேசிகள், வெளிநாட்டவர்கள் என்பவரைக் கவருவதனை இவை நோக்கமாகக் கொண்டிருந்தன.

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது விதிக்கப்படுகின்ற தீர்வைப்பளு இன்றி சர்வதேசப் பிரயாணிகள் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு உதவுவதே இதன் வழிகாட்டல் தத்துவமாகும். அரசாங்க வருமானத்தை அதிகரித்தல், உள்ளூர்க் கைத்தொழில்களைப் பாதுகாத்தல் ஆகிய இரு அடிப்படைக் காரணிகளுக்காக இறக்குமதி வரி விதிக்கப்படுகின்றது. எனவே இவ்வரிக் கொடுப்பனவுகளை சர்வதேச பிரயாணிகள் தவிர்க்க விரும்புவது நியாயமே.

சுதந்திர வர்த்தகம் தொடர்பாக அரசாங்கங்கள் கொண்டுள்ள கொள்கைகளிலேயே இறக்குமதித் தீர்வையின் அளவு தங்கியுள்ளது. இறக்குமதி வரிகளை விதிப்பதில் ஒத்ததன்மை காணப்படுவதில்லை. சில நாடுகள் சிறிதளவு இறக்குமதி வரிகளை விதிக்கின்றன; சில நாடுகள் இறக்குமதிகள் மீது எத்தகைய வரிகளையும் விதிப்பதில்லை; இன்னும் சில நாடுகள் ஒப்பீட்டுரீதியில் அதிகரித்த வரிகளை விரிவாக மேற்கொள்கின்றன. இறக்குமதி வரிகளை விதிக்காத நாடுகளுக்குச் சிறந்த உதாரணம், சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகிய நாடுகளாகும். இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் விரிவான இறக்குமதி வரிகளை விதிக்கின்றன.

சர்வதேச தீர்வையற்ற வர்த்தகத்தின் பெரும் பகுதி நாட்டினுள் இடம்பெறுது துறைமுகம் போன்ற நுழைவாயில்களிலேயே இடம்பெறுகின்றன; ஆனால் கொழும்பில் காணப்படுவது ஹொங்கொங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள தீர்வையற்ற கடைத் தொகுதியைப் போன்ற ஒரு அமைப்பாகும். விமானத் தளங்கள், விமானங்கள், கப்பல்கள், தேச எல்லைகள் போன்ற நாட்டின் சாதாரண வர்த்தகச் சட்டங்கள் செல்லுபடியாகாத இடங்களிலேயே தீர்வையற்ற வர்த்தகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. தீர்வையற்ற வர்த்தகம் இன்று உலகளாவிய ஒரு பாரிய வியாபார நடவடிக்கையாக இருப்பதுடன் 1984 இல் இதன் பெறுமதி 500 கோடி டொலர்களுக்கும் அதிகமாக இருந்தது.

இலங்கையில் தீர்வையற்ற வர்த்தகத்தின் வரலாறு காலனியாட்சி காலம்வரை பின் செல்கிறது. இக் காலப்பகுதியில் கப்பல் களஞ்சியங்களுக்கு மாத்திரம் இவ் வர்த்தகம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இக் கப்பல்களுள் பெரும்பாலானவை வெளிநாட்டுக் கம்பனிகளுக்குச் சொந்தமாக இருந்ததனுல் இலங்கை இதன் மூலம் கூடுதலான பயனை அடையவில்லை. டொமினியன் அந்தஸ்து கிடைத்த பின்னர், வெளிநாட்டுத் தூதுவராலயங்களின் எண்ணிக்கை அதிகரித்ததனுல் தீர்வையற்ற பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தது. ஆரம்பத்தில் பெரும்பான்மையான ஸ்தானீகராலயங்கள் இந்தியாவிலிருந்து இயங்கியதனுல் சுதந்திரத்தின் பின்னர் முதல் பத்து வருட காலத்தினுள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்படவில்லை.

1950 களின் பிற்பகுதியிலும் 1960 க்களின் ஆரம்பப் பகுதியிலும் கோஷலிச நாடுகள் இலங்கையில் ஸ்தானீகராலயங்களைத் திறந்ததனுல் சுதந்திர வர்த்தகம் மேலும் செழிப்புற்றது. 1956 இல் சுயெஸ் கால்வாய் மூடப்பட்டதனைத் தொடர்ந்து தீர்வையற்ற கப்பற் களஞ்சிய வர்த்தகத்திற்குப் புத்துயிரளிக்கப்பட்டது. கப்பல்கள் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிப் பிரயாணம் செய்ய வேண்டி இருந்ததனுல், கொழும்பில் நிறையப் பொருட்களை ஏற்ற வேண்டியிருந்தது.

1960 களின் முற்பகுதியில் கொழும்பில் ஐ. நா. தொழினுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டம் அங்குரார்ப்பனம் செய்து வைக்கப்பட்ட பின்னர் தீர்வையற்ற வர்த்தக வளர்ச்சியின் இன்னெரு கட்டம் ஆரம்பித்தது எனலாம். இதனைத் தொடர்ந்து பெருந்தொகையான ஐ. நா. ஆளணியினர் இலங்கைக்கு வந்தனர்; இவர்களுக்குத் தீர்வையற்ற வர்த்தகச் சலுகையைப்பெறும் உரித்து இருந்ததனுல் தீர்வையற்ற வர்த்தகம் இலங்கையில் மேலும் உந்துதலைப் பெற்றது.

1967 இல் கொழும்பு சர்வதேச விமான நிலையம் ஸ்தாபிக்கப்பட்டதுடன் தீர்வையற்ற வர்த்தக வரலாற்றின் இன்னெரு பிரதான கட்டம்' ஆரம்பித்தது எனலாம்; இங்கு மதுபானமும் புகையிலைப் பொருட்களும் தீர்வையற்ற விலையில் விற்பனை செய்யப்பட்டன. 1981 இல் கொழும்பு நகரத்தில் ஒரு தீர்வையற்ற வர்த்தக நிலையம் திறக்கப்பட்டதுடன் சர்வதேச தரம் வாய்ந்த தீர்வையற்ற வர்த்தகம் இலங்கையில் ஆரம்பமாகியது.

இலங்கை இந்தியாவிற்கு அண்மையில் இருப்பது, இலங்கையின் தீர்வையற்ற வர்த்தக வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு பிரதான காரணியாகும். தனது முற்றுமுழுதான பொருளாதாரத் தந்திரோபாயத்தின் பாகமாக இந்தியா கணிய ரீதியிலும், பண்பு ரீதியிலும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இக் கட்டுப்பாடுகள் கடந்த முப்பது வருடங்களாக அமுலில் இருந்து வந்துள்ளன. இந்தியா பெரும்பாலும் சகல வகைப் பொருட்களையும் உற்பத்தி செய்தபோதிலும், பொதுவாக இந்தியரிடையே இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு தனி மவுசு உண்டு. கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்ட தீர்வையற்ற கடைத்தொகுதியின் ஆரம்பகால வளர்ச்சிக்கு இக்காரணி பெரும் தூண்டுதலாக விளங்கியது.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, 1970 களில் சதாம் வீதியில் ஹோட்டல் கூட்டுத்தாபனம் நிறுவிய 25 சதவீத தீர்வையுடன் கூடிய கடை, பிரதான

மாக சுற்றுலாப்பயணிகளின் நன்மை கருதியே நிறுவப்பட்டது. விமான நிலையத்தில் இருந்த முழுமையான தீர்வையற்ற கடை சுற்றுலாப்பயணிகள், வெளிநாட்டார், இறங்கு பயணிகள், விடுமுறையில் வருகின்ற பிரயாணிகள் என்போரை கருத்தில் கொண்டதாக இருந்தது. எனினும், இது வாடிக்கையாளரிடையே கூடிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை; வாடிக்கையாளர்கள் இதனை விடவும் கவர்ச்சிகரமான இடங்களையே நாடினர்.

1970 க்கள் பூராகவும் இலங்கையின் தீர்வையற்ற கடை, ஹொங்கொங், சிங்கப்பூர், பினாங், கராச்சி, டுபாய் போன்ற நாடுகளின் தீர்வையற்ற வர்த்தக வசதிகளுடன் போட்டியிடக் கூடிய நிலையில் இருக்கவில்லை. புவியியல் ரீதியாக இலங்கை வாய்ப்பான அமைவிடத்தில் இருந்த போதிலும், சர்வதேச ரீதியாக மிக உறுதியாக வளர்ச்சி கண்டுவந்த தீர்வையற்ற வர்த்தகத்திலிருந்து ஒரு சிறு பகுதியையேனும் பெற்றுக்கொள்ளத் தவறிவிட்டது. அத்துடன் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டும் வாய்ப்பினையும் அது தவறவிட்டது.

மேலும், நடைமுறையிலிருந்த கடைகளிலிருந்து பெற்ற மொத்த வருமான, இலாப மட்டம் மிகச் சொற்பமாக இருந்தது. சதாம் வீதியிலிருந்த கடை 1979 இல் 254,274 ரூபாவும் (ஏறக்குறைய 16,950 அ. டொலர்), 1981 இல் 380,435 ரூபாவும் (21,135 அ. டொலர்) இலாபம் உழைத்தது. ஒப்பீட்டு ரீதியில் இது குறிப்பிடத்தக்க ஒரு தொகை அல்ல.

1980 களின் ஆரம்பத்தில் மத்திய கிழக்கு வேலைவாய்ப்புச் செழிப்பின்போது இலங்கை இன்னொரு வாய்ப்பினையும் இழப்பதாக உணரப்பட்டது. ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் வளைகுடா நாடுகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றனர். பாரம்பரிய உயர் வருமான வகுப்பினரைப் போலில்லாது இவர்கள் நுகர்வுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் கூடிய நாட்டமுடையவர்களாக இருந்தனர். தம்மது சேமிப்புக்களிலிருந்து வானொலிகளையும், கஸட் பதிவு கருவிகளையும், மின்சார உபகரணங்களையும் கொள்வனவு செய்த இவர்கள் இவற்றைக் கொள்வனவு செய்வதற்காக சிங்கப்பூருக்குச் சென்றனர்.

### கொழும்பு தீர்வையற்ற கடைத்தொகுதி

இலங்கைக்குத் திரும்புகின்ற குடிப்பெயர்ந்த தொழிலாளர்களின் சம்பாத்தியங்களைக் கவர்வது ஒருபுறமிருக்க, இலங்கையில் தீர்வையற்ற கடைத் தொகுதிக்குப் புத்துயிரூட்டுவதற்கு சார்பாக மேலும் பல காரணங்கள் முன்வைக்கப்பட்டன. அயல் நாடுகளிலிருந்து - குறிப்பாக இந்தியாவிலிருந்து - கூடுதலான பிரயாணிகள் வந்தமையும், இவர்களுக்குக் கூடுதலான செலாவணிக் கோட்டா அளிக்கப்பட்டமையும் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு இலங்கைக்கு இன்னொரு வாய்ப்பினை அளித்தது. வெளிநாட்டு உதவியுடன் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டதனைத் தொடர்ந்து கூடுதலான வெளிநாட்டார் தீவிற்கு வந்தனர். மேலும், பிரயாண விதிகள் தளர்த்தப்பட்டதனால் பெருந்தொகையான இலங்கையர்கள் தாய் நாட்டுக்கு விஜயங்களை மேற்கொண்டனர். இத்துடன் தீர்வையற்ற வர்த்தக நிலையங்கள் இயங்கிய ஏனைய நாடுகளில் வேதனங்களும், ஏனைய செலவுகளும் இலங்கையை விடவும் கூடுதலாக அதிகரிக்கத் துவங்கின. ஆகையால் எமது குறைந்த கூலி, வேதனம் என்பவற்றிலிருந்து கூடுதலான அனுகூலங்களைப் பெறுவதற்கு வாய்ப்பிருந்தது.

நவீனமானதும், போட்டியிடக் கூடியதுமான தீர்வையற்ற வர்த்தக நிலையமொன்றை நிறுவுவதற்கு ஆதரவாக திடமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதனை அமுலாக்குவதற்கு வர்த்தக கப்பல் துறை அமைச்சுக்கு அரசாங்கத்தின் அங்கீகாரமும் கிடைத்தது. கட்டடத் தொகுதிக்கு ஏறக்குறைய 35,000 சதுர அடி பரப்புள்ள இடம் தேவைப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது. கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இந்த அளவு இடம் இருக்கவில்லை; ஆகையால் கொள்ளுபிட்டியில் இருந்த ஐந்து மாடிக் கட்டடம். தெரிவு செய்யப்பட்டு 1981 அக்டோபர் 30 ஆம் திகதியன்று கொழும்பின் ஒரு மைய இடத்தில் தீர்வையற்ற கடைத் தொகுதி திறந்து வைக்கப்பட்டது.

1970க்களின் நடுப் பாகத்திலிருந்தே தீர்வையற்ற கடைத் தொகுதி திட்டம் பற்றி ஆலோசிக்கப்பட்டது; இறக்குமதி தொடர்பாக அரசாங்கம் மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றியதனால் இது பற்றித் தீர்மானிக்க இயலாத நிலையிலிருந்தது. இதனை எங்கு ஆரம்பிப்பது என்பது தொடர்பாக இரு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. முதலாவது ஆலோசனையின்படி கொழும்பிலும், இரண்டாவது ஆலோசனையின்படி நான்கு சுற்றுலா மையங்களில் நான்கு கடைகளும் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது. அப்போது நிலவிய பொருளாதாரக் கொள்கை இதற்குத் தடையாக இருந்தது.

1977 இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தாராளமய பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடித்தது. முதற் படியாகப் பொருளாதாரத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் ஒழிக்கப்பட்டன. திறந்த பொது உத்தரவுப் பத்திரத்தின் கீழ் ஒருவர் குறித்த அளவு பெறுமதியுள்ள பொருட்களை இறக்குமதி செய்யக் கூடியதாகவிருந்

தது. கட்டுநாயக்காவில் சுதந்திர வர்த்தக வலயம் ஆரம்பிக்கப்பட்டமை இத் துறையை நோக்கி மேற்கொள்ளப்பட்ட இன்னொரு நடவடிக்கையாகும். தீர்வையற்ற வர்த்தகத்தொகுதி திறக்கப்பட்டமை தாராளப் பொருளாதாரக் கொள்கையை நோக்கி வைக்கப்பட்ட இன்னொரு படி எனலாம்.

நுகர்வோர் திருப்தி வர்த்தக ஊக்குவிப்பு, வெளிநாட்டுச் செலாவணி உழைப்பின் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு உதவுதல் என்பன தீர்வையற்ற வர்த்தகத் தொகுதியின் பிரதான நோக்கங்களாகும் என அப்போதைய வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டார். இன்னொரு தடவை அமைச்சர் இது பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார். ''உலகின் எப் பாகத்திலும் இது சுதந்திர சந்தையின் துணிவுள்ள ஒரு நினைவுச் சின்னமாக விளங்குகின்றது; வெளிநாடுகளுக்குப் பிரயாணம் செய்வோர் தமது வெளிநாட்டுச் செலாவணியின் மூலம் தீர்வையற்ற விலைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்யலாம். சிங்கப்பூரில் அல்லது மாலைத்தீவில் அல்லது உலகின் வேறு ஏதாவது ஒரு இடத்தில் செலவிடப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை எமது நாட்டுக்குத் திசை திருப்புவதே தீர்வையற்ற வர்த்தகத்தொகுதியின் நோக்கமாகும்.''

''கூடுதலான பொருட்களை மிக மலிவான விலையில் விற்பனை செய்வதே இதன் பிரதான நோக்கமாகும் என இதனைத் திறந்து வைக்கையில் அமைச்சர் குறிப்பிட்டார். இதனைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் இலாபமோ அல்லது நட்டமோ இல்லாத அடிப்படையில் வசதிகளை அளித்தது. கடை உரிமையாளர்களின் செலவினைக் குறைப்பதே இதன் பிரதான நோக்கமாகும். குறைந்த விலைகளை உறுதிப்படுத்தும் வகையில் கடை உரிமையாளர்கள் ஒரே ரகப் பொருட்களைப் போட்டியிட்டுக் கொண்டு விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டனர். மேலும், தீர்வையற்ற விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்வோரின் கவனத்தைத் திருப்பும் வகையில் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தீவிரமாக விளம்பரம் செய்யப்பட்டது. ''அஞ்சல் கட்டளை'' அடிப்படையில் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்வதற்கும் திட்டமிடப்பட்டது; எனினும், இது இன்றும் அமுலாக்கப்படவில்லை.

## நோக்கு

அரசாங்கத்திற்கும் தனியார் துறையினருக்கும் இடையிலான ஒரு முன்னோடிக் கூட்டு முயற்சி என தீர்வையற்ற கடைத் தொகுதியை அழைக்கலாம். அரசாங்கம் பொது வசதிகளை அளிக்கையில் தனியார் துறை வர்த்தகத்தை மேற்கொள்கின்றது. 1981 இல் இக் கடைத் தொகுதி திறக்கப்பட்டதன் பின்னர், நாடு திரும்புகின்ற இலங்கையர்களிடையிலும் வெளிநாட்டவர்களிடையிலும் இது பிரபல்யம் அடைந்தது. தீர்வையற்ற பொருட்களின் விலைகள் மிகவும் குறைவாக இருந்தன; உள்ளூர்த் திறந்த சந்தை விலைகளை விட மிகவும் மலிவாக இருந்ததுடன் சில சந்தர்ப்பங்களில் சிங்கப்பூர் விலைகளிலும் குறைவாக இருந்தன. கடைகள் வாரத்தில் ஆறு நாட்கள் மு.ப. 9.00 - பி.ப. 6.00 வரை சிறந்து வைக்கப்பட்டிருந்தன; வாடிக்கையாளர்கள் வெளிநாட்டுச் செலாவணியைச் செலுத்தி எத்தகைய கஷ்டங்களுமின்றி பொருட்களை நேரடியாகக் கொள்வனவு செய்ய முடிந்தது. ஆரம்பத்தில் நுழைவாயிலில் எத்தகைய கட்டுப்பாடுகளும் இருக்கவில்லை; வெளிநாட்டுச் செலாவணி வைத்திருந்தோரும் அல்லாதோரும் இங்கு செல்லக்கூடியதாக இருந்தது. முன்னர் சிங்கப்பூர் அல்லது பாங்கொங்கிற்குப் பிரயாணம் செய்தோர் இதனால் கவரப்பட்டனர்.

1983 ஜனவரியிலிருந்து ஏப்ரல் வரை மாதாந்தம் சராசரியாக 31,000 பேர்கள் இக் கடைத் தொகுதியினுள் நுழைந்ததாகப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இக்காலப் பகுதியில் மாதாந்தச் சராசரி விற்பனை 13 கோடி 26 லட்சம் ரூபாவாக விருந்தது; சில கடைகள் ஒரு நாளில் 70,000 அமெரிக்க டொலர் விற்பனையைப் பதிவு செய்துள்ளன.

12 - 26'' அளவுள்ளதும், 600 ஐ. அ. டொலர் பெறுமதியானதுமான பல்வேறு ரக தொலைக்காட்சிப் பெட்டிகள் வீடியோ டெக், ஒலிப்பதிவு கருவி, அரைக்கும் பொறிகள், விசிறிகள், புகைப்படக் கருவிகள், குளிரூட்டிகள், மின்சார சவரக் கருவிகள் கணக்கீட்டுக் கருவிகள், இசைக் கருவிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள்; கம்பளங்கள், வாசனைப் பொருட்கள், புடைவைகள், மேலங்கிகள், காற்மீரப் போர்வைகள், மென் விளையாட்டுப் பொருட்கள், விஸ்கி போன்ற மதுபானங்கள், வெளிநாட்டு சிகரட்டுகள், புகையிலை, ப்ளாஸ்டிக் பொருட்கள், சமயலறைப் பொருட்கள் போன்றன இங்கு விற்பனை செய்யப்பட்டன.

இதனை உருவாக்கியோரின் நோக்கங்களுக்கு அமைய ஒருசில மாதங்களே இது இயங்கியது. போலி நபர்களின் ஊடுருவலால் இக்கடைத் தொகுதியின் இயக்கும் பாதிப்புற்றது. கள்ளக்கடத்தல், சட்டரீதியற்ற செலாவணி வர்த்தகம் என்பவற்றில் பல வர்த்தகர்கள் ஈடுபட்டிருந்தனர். கள்ளக்கடத்தல் இலங்கைக்குப் பழையதாகும்; எனினும், அண்மைக் காலத்தில் இதன் பரிமாணம் அதிகரித்துள்ளது. இந்த உள்ளூர் வர்த்தக சக்திகள் கொள்ளுபிடியில் தீர்வையற்ற கடைத்தொகுதி ஸ்தாபிக்கப்படவிருந்ததனை எதிர்த்தன. எனினும், இறுதியில் இது செயற்படத் துவங்கியதன் பின்னர்,

இதனை எதிர்த்த வர்த்தக சக்திகள் 'தோல்வியைத், தவிர்க்க இயலாவிடில், வெற்றி பெறுவோருடன் இணைந்து செல்' என்ற தத்துவத்தைப் பின்பற்றி தீர்வையற்ற வர்த்தகத்தில் ஈடுபடத் தொடங்கின. இவர்கள் சட்டத்தில் இருந்த இடுக்குகளைக் கண்டறிந்து தமது நன்மைக்காக அவற்றைப் பயன்படுத்தினர். வெளிநாட்டுச் செலாவணிக்கு விற்பனை செய்ய இறக்குமதி செய்யப்பட்ட தீர்வையற்ற பொருட்கள் உள்ளூர்ச் சந்தைக்கு வந்தன; இவற்றை உள்ளூர் நாணயத்தில் கொள்வனவு செய்ய முடிந்தது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தீர்வையற்ற வர்த்தகத் தொகுதி ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் சட்டத்தை வேண்டுமென்றே தமக்குச் சார்பாகப் பயன்படுத்திய மூன்று கடை உரிமையாளர்கள் வர்த்தக அமைச்சினால் எச்சரிக்கப்பட்டனர். இம் மூன்று கடைகளும் சர்வதேசத் தொடர்புகளைக் கொண்டனதாகவும், பிரபல்யம் மிக்க பெயரைக் கொண்டனவாகவும் இருந்தன.

ஆனால் இது ஆரம்பம் மட்டுமேயாகும். கடைத் தொகுதியிலிருந்து சட்டரீதியற்ற முறையில் மோசடிக்காரர்களால் பொருட்கள் கடத்தப்படுவதனை 1982 அளவில் யாவரும் அறிந்திருந்தனர். சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையில் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டிருந்தோர் தமது கவனத்தை இதன் மீது செலுத்தி எத்தகைய தடைகளும் இன்றி இயங்கினர். இம் மோசடிக்காரர்களின் மூலம் இலகுவாகப் பொருட்களைச் தீர்வையற்ற வர்த்தக நிலையத்திலிருந்து எவரும் பெற முடிந்தது. இவர்கள் தீர்வையற்ற வர்த்தக நிலையத்திற்கு முன்னால் உள்ள பிரதான வீதியில் தமது உதவியாளர்களை வைத்து இயங்கினர். இவ்வுதவியாளர்கள் விலைப் பட்டியலுடன் கணக்கீட்டுக் கருவியையும் வைத்துக் கொண்டு கொள்வனவாளர்களிடம் இருந்து பொருட்களுக்கான கட்டளைகளைப் பெற்றனர்.

இவ் வர்த்தகத் தொகுதியின் நிர்வாகம் தொடர்பாக குறை தெரிவித்து ஒருவர் பத்திரிகையில் எழுதியபோது, இத்தகைய ஒரு நிலைமை நிலவுவதனை கடைத்தொகுதி நிர்வாகத்தின் உதவிப் பொதுசன தொடர்பு அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார். இது 1982 - 03 - 26 திகதி 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டது. 1982 இல் இவ் வர்த்தகத் தொகுதியில் நுழைவது தொடர்பாகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டபோது ஒரு கடை உரிமையாளர் பின்வருமாறு குற்றம் சுமத்தினர்: ''ஒரு கடையினுள் நுழைவதற்குக் கட்டணம் செலுத்துமாறு உலகில் எந்தவொரு வாடிக்கையாளரும் கேட்கப்படுவதில்லை. ஒரு வாடிக்கையாளர் தனது மனைவியுடன் ஒரு கடையினுள் நுழைவதற்கு உலகில் எங்குமே மறுப்புத் தெரிவிக்கப்படுவதில்லை.'' இக் குற்றச்சாட்டுக்குப் பொதுசன தொடர்பு அதிகாரி பின்வருமாறு பதிலளித்தார்: ''இவ்விரு குற்றச்சாட்டுக்களும் தொடர்பாக நான் அவரிடம் ஒரு கேள்வி கேட்கின்றேன். மோசடிக்காரர்களால் சூழப்பட்டும், முரடர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டும், கறுப்புப் பணம் புழக்கத்தின் மத்திய நிலையமாகவும் விளங்கி, மோசடிக்காரர்களின் சுவர்க்கம் எனப் பெயரெடுத்த ஒரு தீர்வையற்ற கடைத் தொகுதி உலகின் எப்பாகத்திலும் உண்டா? 1982 - 03 - 01 வரை இலங்கையில் இத்தகைய ஒரு இடம் இருந்தது.''

இம் மோசடிக்காரர்களைக் கட்டுப்படுத்தும் வகையில், அதிகாரிகள், தீர்வையற்ற கடைத் தொகுதியினுள் நுழைகின்ற ஒருவரிடமிருந்து ரூபா 20 கட்டணம் அறவிட்டனர். இத்துடன் கடவுச்சீட்டு வைத்திருப்போர் மாத்திரமே அனுமதிக்கப்பட்டனர். உலகிலுள்ள வேறு தீர்வையற்ற கடைத் தொகுதிகளில் இத்தகைய கட்டுப்பாடு இல்லை எனவும், இது தீர்வையற்ற வர்த்தகச் சித்தாந்தத்தைப் பாதிக்கும் எனவும் வர்த்தகர்கள் வாதிடுகின்றனர். எனினும், மோசடிக்காரர்களுக்கு உதவுவோரைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகளுக்கு இதனைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

அலவன்சுடன் கூடிய கடவுச்சீட்டு வைத்திருப்போர் மாத்திரமே அனுமதிக்கப்பட்டதனால் உண்மையான வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டனர். இதன் விளைவாக, ஒரு கணவன், வெளிநாட்டில் தான் உழைத்துச் சம்பாதித்த பணத்திற்கு வீட்டுப் பாவனைப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குத் தனது மனைவியுடன் இங்கு செய்ய முடியாது. வழமையாக இத்தகைய பொருட்கள் ஒரு மனைவியாலேயே கொள்வனவு செய்யப்படுகின்றன. இது நாளாந்த வீட்டு வேலைகளிலிருந்து பெண்களுக்கு ஓய்வு அளிக்கின்ற ஒரு கருமமாகும். இக் கட்டுப்பாட்டின் மூலம் கணவன், தனது மனைவியுடனும் பிள்ளைகளுடனும் பொருட்களைக் கொள்வனவு செய்கின்ற வாய்ப்பினை இழக்கின்றான்.

இக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கு முன்னர், கொள்ளுப்பிட்டி தீர்வையற்ற கடைத் தொகுதியின் ஐந்து மாடிகளும் வாடிக்கையாளர் அல்லாதோரால் நிரம்பி வழிந்தன; இதன் விளைவாக உண்மையான வாடிக்கையாளர்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டது. இவ்விரு புதிய கட்டுப்பாடுகளும் இந் நிலைமைக்கு நிவாரணம் அளித்தன.

செலவுகளும் நலன்களும்

இரு அடிப்படைக் காரணிகளைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் இறக்குமதிகள் மீது வரிகளை

( 9 - ம் பக்கம் பார்க்க)

# இறக்குமதி கொள்வனவு கொடுப்பனவு ஒழுங்குவிதிகள்

தீர்வையற்ற கடை வைத்திருப்பேர் கடன் சிபார்சுக் கடிதங்களுடன் அங்கீகாரத்தின் மேல் ஆவணங்கள் நிபந்தனைகளின் பேரில் 180 நாட்களில் தங்களுடைய தேவைகளை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவார்கள். எனினும், நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாடு அனுமதிக்குமிடத்து, அங்கீகரிப்பின் பேரிலான ஆவணங்கள் கடன் சிபார்சுக் கடிதங்களின்றி அனுமதிக்கப்படும். இத்தகைய இறக்குமதிகள் கண்டிப்பாக தீர்வையற்ற கடைகளிலேயே விற்கப்பட வேண்டும். தீர்வையற்ற கடைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் சாமான்கள் பந்தகப் பதிவுகள் மீது மட்டுமே தீர்வையகத்திலிருந்து அப்புறப்படுத்தப்படவேண்டும். எவரும் இந்த நிபந்தனைகளுக்கிணங்க நடக்கத்தவறியதாகக் கண்டுபிடிக்கப்பட்டால், அவருடைய அங்கீகரிப்பின் பேரிலான ஆவணங்கள் நீக்கப்படும். கடைக்காரர்கள் வர்த்தக அமைச்சு அனுமதிக்கும் இடாப்பிலுள்ள பொருள்களை மட்டுமே இறக்குமதி செய்யமுடியும். ஒவ்வொரு பொருளுக்கும் வங்கி உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு கடையும் தங்கள்கடைக்கு 50,000/- ரூபாவுக்கான வங்கி உத்தர வாதத்தையும், தீர்வை மீட்டும் பண்டசாலைக்கு 10,00,000/- ரூபாவுக்கான வங்கி உத்தரவாதத்தையும் பெறுகிறது. இச்சலுகை தீர்வையற்ற கடைச் சொந்தக்காரர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது.

மேற்குறித்த அங்கீகரிப்பின் பேரிலான ஆவணங்கள் நிபந்தனைகளின்படி இலங்கையிலுள்ள தீர்வையற்ற கடை இறக்குமதியாளர்கள் தங்களுடைய இறக்குமதிகளிலிருந்து 180 நாட்களுக்கு அல்லது ஆறு மாதங்களுக்குக் கடன் வசதி அனுமதிக்கப்படுகிறார்கள். ஆதலால், அவர்களுக்குக் கொடுக்கப்படும் வெளிநாட்டு நாணயத்தை அக்காலத்துக்குச் சேமிக்கலாம். இது வெளிநாட்டு நாணயத்தில் ஒரு பெரிய இலாபமாகும். கடைச் சொந்தக்காரர்களும் தங்களுடைய இறக்குமதிகளை விற்ற சிறிது காலத்துக்குப் பின்பு கொடுப்பனவைத் தீர்க்கலாம்.

## கொள்வனவுகளுக்கான கொடுப்பனவு

தீர்வையற்ற கடைகளில் செய்யப்படும் எந்தக் கொள்வனவுகளுக்கும் கீழ்க்கண்ட வகைக்கொப்பனவு மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்:

1. வெளிநாட்டு நாணயத்தாள் (ரொக்கம்).
2. பிரயாணிகள் காசோலைகள்.
3. வதிவற்ற வெளிநாட்டு நாணயத்தாள் கணக்குகள், வெளிநாட்டுக் கணக்குகள் மீது எழுதப்பட்ட காசோலைகள்.
4. நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டாளர் குறித்துரைக்கும் கொடுகடன் அட்டைகள்.

வேறெந்தச் சொந்தக் காசோலைகளும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டாளர் விதிக்கும் சில நாணயத்தாள்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இவை காலத்துக்குக் காலம் அறிவிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு கடைக்கும் நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டாளரால் வெளிநாட்டு நாணயத்தாள் முற்பணமாகக் கொடுக்கப்படுகிறது. வாடிக்கையாளர்கள் தாங்கள் வாங்கிய பொருள்களுக்குப் பணம் செலுத்தியபின் அவர்களுக்கு மீதிப்பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு உதவியாகவே இம் முற்பணம் கடைக்காரருக்கு வழங்கப்படுகிறது. கடைக்காரர்கள் தங்கள் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி ஒவ்வொரு மாதமும் நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டாளருக்கு ஒரு மாதாந்த அறிக்கை அனுப்ப வேண்டும்.

## வெவ்வேறு வகை வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதற்குரிய நிபந்தனைகள்

1. இங்கு இடாப்பிலுள்ள ஆளணியினரின் வேறெந்த வகையினரின் கீழும் தீர்வையற்ற சலுகை கோராத சகல வெளிநாட்டு பாஸ்போர்ட் வைத்திருப்போரும்.
2. இராஜதந்திர அதிகாரிகள்.
3. இலங்கையில் அபிவிருத்தித்திட்டங்களில் வேலைக்கமர்ந்துள்ள வெளிநாட்டினர்.
4. வதிவு விசா வைத்திருக்கும் வெளிநாட்டினர்.
5. நாட்டுக்கு வரும் குடிமக்கள் (இலங்கை பாஸ்போர்ட் வைத்திருப்போர்).

இலங்கையின் தீர்வையற்ற கடைத் தொகுதியில் கடைகளை நடத்த விரும்பி, தென்னாசியாவிலும் கிழக்காசியாவிலும் உள்ள சில நாடுகளிலுள்ள கடை நடத்துவோர் விசாரித்தனர். ஆனால், இங்கு கடைகளை நடத்த வெளிநாட்டினரை அனுமதிப்பதில்லையென முடிவு செய்யப்பட்டது.

## உல்லாசப் பயணிகள்

தீர்வையற்ற கடைத் தொகுதியில் உல்லாசப் பிரயாணிகளுக்கு நுகரவொண்ணாத பொருள்களை ஒரு நிபந்தனையின் பேரில் விற்க அனுமதிக்கப்படுகின்றன. அதாவது, அவர்கள் நாட்டை விட்டுச் செல்லும்போது அப்பொருள்களை அவர்கள் தங்களுடன் கூட எடுத்துச் சென்றுவிட வேண்டும். எனினும், அவர்கள் நாட்டில் தங்கியிருக்கும்போது அப்பொருள்களை உபயோகிக்கலாம். இத்தகைய பொருள்களின் விற்பனைகள் அவர்களுடைய பாஸ்போர்ட்டுகளில் குறிக்கப்படவேண்டும்.

விமான நிலையத்தில் ஒப்படைப்பதற்காக விற்கப்படும் பொருள்கள் சம்பந்தமாக அளவைப் பொறுத்த கட்டுப்பாடுகளோ அல்லது வேறு கட்டுப்பாடுகளோ இல்லை.

## இராஜதந்திர அதிகாரிகள்

இராஜதந்திர அதிகாரிகள் எப்பொருளையும் வாங்க அனுமதிக்கும் சான்றிதழை வெளிநாட்டு விவகார அமைச்சிலிருந்து பெற்றிருந்தால், கட்டுப்பாடுகளின்றி எப்பொருளையும் வாங்க அனுமதிக்கப்படுகிறார்கள். கடைத் தொகுதியிலுள்ள சுங்க அதிகாரிகள் எந்த ஊழல் பழக்கங்களும் நடைபெறுகின்றனவாவெனச் சோதிப்பதற்காக இராஜதந்திர அதிகாரிகள் வாங்கும் பொருள்களைப் பற்றிய பதிவேடொன்றை வைத்திருக்கிறார்கள்.

## திட்டங்களில் வேலைக்கமர்ந்துள்ள வெளிநாட்டினர்

இவர்கள் ஆறு மாதகாலத்துக்கும் அதற்கு மேற்பட்ட காலத்துக்கும் வதிவு விசா வைத்திருந்தால், நாட்டுக்குள் வரும் இலங்கை வாசிகளைப் போன்றே இவர்களும் நடத்தப்படுகின்றனர். நாட்டுக்குள் வரும் இலங்கைவாசிகளுக்கு வழங்கப்படும் ஆகக்கூடிய பொருள் பொதிச் சலுகை இவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இத்தகைய நபர்கள் தாங்கள் நாட்டைவிட்டுச் செல்லும்போது தங்களுடன் கொண்டுபோவதற்காகப் பொருள்களை வாங்க விரும்பினால், இத்தகைய விற்பனைகள் உல்லாசப் பயணிகளுக்குச் செய்த விற்பனைகளாகக் கருதப்படுகின்றன.

## இலங்கை பாஸ்போர்ட்டுகளுடன் நாட்டுக்கு வரும் இலங்கை வாசிகள்

இலங்கை பாஸ்போர்ட்டுகளுடன் நாட்டுக்கு வரும் சகல இலங்கை வாசி

களும் தங்களுடைய பாஸ்போட்டுகளில் தீர்வையற்ற பொதிச் சலுகைக்குச் சுங்கத்திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டியதவசியமாகும். இச் சலுகைகளுக்கெதிராக முன்பு தீர்வை கட்டிய சகல பொதிகள் சம்பந்தமாகவும் கழிவுகள் வழங்கப்படுகின்றன. தீர்வையற்ற கடைத் தொகுதியில் பொருள்களை வாங்க உரிமையுள்ள நிகரத் தொகையை மட்டுமே உபயோகிக்கலாம்.

### தற்காலிக விஜயத்தின் பேரில்வரும் இலங்கை பாஸ்போர்ட் வைத்திருப்போருக்கு விற்பனைகள்

தீர்வையற்ற படிகள் இல்லாத இத்தகைய நபர்கள் கடைத் தொகுதியில் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம். ஆனால், அவர்கள் நாட்டைவிட்டுப் புறப்படும்போது விமான நிலையத்தில்தான் அவர்கள் வாங்கிய பொருள்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. எனினும், சுங்கப்பகுதியின் அங்கீகாரத்தின் கீழ் உல்லாசப் பயணிகளுக்குப் பொருந்தும் நுகர் பொருள்களைக் கொண்டு செல்ல அவர்களுக்கு உரிமையுண்டு.

### 6 மாதங்களுக்கும் அதற்கு மேற்பட்டகாலத்துக்கும் வதிவு விசாக்களைக் கொண்ட வெளிநாட்டினருக்கு விற்பனைகள்

இங்குள்ள திட்டங்களில் வேலை செய்வதற்காக வசித்துவரும் வெளிநாட்டினரைப்பொறுத்தவரை, ஒரு குடும்பத்தின் வயது வந்த இரு அங்கத்தவர்களில் ஒவ்வொருவருக்கும் 20,000 ரூபா தீர்வையற்ற பொதிப்படி அனுமதிக்கப்படுகிறது. அவர்கள் வாங்கும் பொருள்கள் பற்றி அவர்களுடைய பாஸ்போர்ட்டில் குறிக்கப்படுகின்றது. விமான நிலையத்தில் அவர்களுடைய தீர்வையற்ற பொதிப் படியின் ஒரு பகுதியை அவர்கள் ஏற்கெனவே உபயோகித்திருந்தால், அப்பொழுது மட்டுமே தீர்வையற்ற கடைத்தொகுதியில் பொருள்களை வாங்க அவர்கள் எஞ்சிய பகுதியை உபயோகிக்கலாம்.

### தீர்வையற்ற கடைத் தொகுதியின் பொதிப்படி மீதுள்ள வரையறை

அ. தொண்ணூறு (90) நாட்களுக்குக் குறைவாக வெளிநாட்டில் தங்கிவிட்டு இலங்கைக்குத் திரும்பும் நபர்களின் பொதிக்கு 2500 ரூபா படிவரை பெற உரிமையுண்டு. இந்தப் படி மீது அவர் எதையும் கொண்டுவரவில்லையானால், கொழும்பு தீர்வையற்ற கடைத் தொகுதியிலிருந்து 3,750 ரூபா வரை பொருள்களை வாங்க அவருக்கு உரிமையுண்டு.

ஆ. தொண்ணூறு (90) நாட்களும் அதற்கு மேலும், ஆனால் முந்நூற்றறுபத்தைந்து (365) நாட்களுக்குக் குறைவாக வெளிநாட்டில் தங்கியிருந்துவரும் ஒருவருக்கு தீர்வையற்ற கடைத் தொகுதியில் 12,500 ரூபா பெறுமதியுள்ள வரை பொருள்களை வாங்க அவருக்கு உரிமையுண்டு.

இ. முந்நூற்றறுபத்தைந்து நாட்களும் அதற்கு மேலும் வெளிநாட்டில் தங்கிவிட்டுவரும் ஒருவருக்கு 25,000 ரூபா பெறுமதியுள்ள வரை தீர்வையற்ற கடைத் தொகுதியில் பொருள்களை வாங்க உரிமையுண்டு.

வெளிநாட்டுக்குச் செல்லும் இலங்கையர்கள் வெளிநாட்டில் 90 நாட்களுக்குக் குறைவான காலம் தங்கிய பின் நாடு திரும்பினால், முன்பு அவர்களுக்குப் பொதிப் படியாக 1,000 ரூபா அனுமதிக்கப்பட்டது. 90 நாட்களுக்கு மேல் ஆனால் 180 நாட்களுக்குக் குறைவாக வெளிநாட்டில் தங்கியபின் திரும்புபவருக்கு 5000 ரூபா பொதிப்படி அனுமதிக்கப்பட்டது. 180 நாட்களிலிருந்து 365 நாட்கள் வரை வெளிநாட்டில் தங்கியபின் திரும்புபவருக்கு 10,000 ரூபாவும், 365 நாட்களிலிருந்து 730 நாட்கள்வரை வெளிநாட்டில் தங்கியபின் திரும்புபவருக்கு 15,000 ரூபாவும், 730 நாட்களுக்கு மேல் வெளிநாட்டில் தங்கியபின் திரும்புபவருக்கு 20,000 ரூபாவும் பொதிப்படி அனுமதிக்கப்பட்டது. ஆனால், அதற்குப்பின், தீர்வையற்ற கடைத் தொகுதியிலிருந்து பொருள்களை வாங்க அதிக தூண்டுதல்கள் அளிப்பதற்காக அனுமதிக்கப்பட்ட படிகள் இந்த மட்டங்களுக்கு அதிகரிக்கப்பட்டன.

தீர்வையற்ற கடைத் தொகுதி திறக்கப்பட்ட ஆரம்ப கட்டங்களில் இலங்கையர்கள் மட்டுமன்றி வெளிநாட்டினரும் பிரயாணிகள் காசோலைகளுக்கும் அமெரிக்க டொலர், ஸ்டர்லிங் பவுண் போன்ற வெளிநாட்டு நாணயத்தாள்களுக்கும் தீர்வையற்ற கடைத் தொகுதியில் பொருள்களை வாங்க முடிந்தது. ஆனால், சில கடைச் சொந்தக்காரர்களும் மற்றும் நேர்மையற்ற நபர்களும் கடைகளிலிருந்து தீர்வையற்ற பொருள்களை வாங்கி அதிக இலாபத்துக்கு வெளியே அவற்றை விற்பதற்காக கள்ளக் கையெழுத்திட்ட 'கறுப்பு' வெளிநாட்டு நாணயத் தாள்களை உபயோகிக்கத் தொடங்கியவுடனே, அரசாங்கம் இலங்கையிலிருந்து பிரயாணிகள் காசோலைகளை மட்டுமே ஏற்றுக் கொள்ளலாம் எனக் குறித்துரைத்து, புதிய ஒழுங்கு விதிகளை அமுலுக்குக் கொண்டுவந்து விட்டது.

இந்த விதிகள் 1982 மார்ச் மாதத்திலிருந்து அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன. தீர்வையற்ற கடைத் தொகுதி திறக்கப்பட்டு ஐந்தே ஐந்து மாதங்களுக்குப் பின் புதிய விதிகள் அமுலுக்கு வந்துவிட்டன. கடைத் தொகுதி வளவுக்குள் பிரவேசிக்க விரும்பும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பிரவேசக்கட்டணமாக 20 ரூபா விதிக்கப்பட்டது. எனினும், வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வெளிநாட்டு நாணயத் தாள்களை உபயோகித்து, கொடுப்பனவுகளைச் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

முன்பு தீர்வையின்றிப் பொருள்களை வாங்க இலங்கையர்களுக்கு அனுமதிக்கப்பட்ட இலவச பொதிப் படி 180 நாட்களுக்குச் செல்லுபடியாயிருந்தது: ஆனால், இதை நிதியமைச்சர் 1985ம் ஆண்டுக்கான தமது வரவு செலவுத்திட்டப் பிரசங்கத்தில் 90 நாட்களாகக் குறைத்து விட்டார். முன்பு குறிப்பிட்டதுபோல, ஓர் உல்லாசப் பயணி நுகர் பொருள்களை மட்டுமே - மதுபானம், சிகரெட்டுகள், சுருட்டு, புகையிலை, வாசனைத்தைலங்கள், சொக்கலேட்டுகள் முதலியன - வாங்கலாம். உல்லாசப் பயணிகள் வேறெந்த நீடித்துழைக்கக் கூடிய பொருள்களை வாங்கினால், அவர்கள் நாட்டை விட்டுச் செல்லும்போது, அவற்றைக் கூடவே கொண்டுபோய்விட வேண்டும். அப்படிச் செய்யவில்லையானால், அந்தக் குறிப்பிட்ட பொருள்மீது சாதாரணமாக விதிக்கப்படும் தீர்வையைச் செலுத்த வேண்டியிருக்கும்.

( 7 - ம் பக்கத் தொடர்ச்சி)

விதிக்கின்றது. அரசாங்க வருமானத்தைத் திரட்டுதல் முதலாவது அம்சமாகும்; உள்ளூர்க் கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் இரண்டாவது அம்சமாகும்.

ஒரு அரசாங்கம் சுதந்திர வர்த்தகத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையிலேயே இறக்குமதி வரிகளின் அளவு தங்கியிருக்கும். அதிக இறக்குமதித் தீர்வை விதிக்கப்பட்டு, அதிகரித்த அரசாங்க வருமானம் பெறுவதற்கு உதவுகின்ற பொருட்களே தீர்வையற்ற வர்த்தக நிலையங்களில் வேகமாக விற்பனையாகின்றன. ஆகையால், இறக்குமதித் தீர்வையிலிருந்து இழக்கின்ற வருமானத்தை, தீர்வையற்ற வர்த்தகத் தொகுதியிலிருந்து பெறுகின்ற வெளிநாட்டுச் செலாவணியின் மூலம் ஈடுசெய்யலாம் என்ற கவனமான ஒரு கணிப்பீட்டின்

அடிப்படையிலேயே அரசாங்கம் இத்தகைய ஒரு தீர்மானத்தை எடுத்தது. ஒரு இலங்கையர் அல்லது வெளிநாட்டவர் தீர்வையற்ற கடைத் தொகுதியிலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்த ஒவ்வொரு தடவையும் நாட்டுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. நுகர்வோன் திறந்த சந்தையில் இப் பொருட்களைக் கொள்வனவு செய்திருப்பின் செலுத்துகின்ற இறக்குமதித் தீர்வையே இதுவாகும்.

திறந்த சந்தைக்கு இறக்குமதி செய்திருப்பின், நூறு சதவீதம் அல்லது கூடுதலான தீர்வை அறவிடப்படுகின்ற பொருட்களே பெருமளவுக்கு தீர்வையற்ற வர்த்தகத் தொகுதியில் உள்ள கடைகளால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. 1984 இல் இக் கடைத் தொகுதிக்கு 82.9 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன; இவற்றுள் 75 சதவீதமான பொருட்களுக்கு இறக்குமதித் தீர்வை அறவிடப்பட்டிருப்பின், 64.2 கோடி ரூபா அரசாங்க வருமானத்தைப் பெற்றிருக்கலாம். இக் கடைத் தொகுதிக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் பெறுமதியை, விற்பனையுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க இலாபமும் வெளிநாட்டுச் செலாவணியும் உழைக்கப்படுகின்றது என மறுபுறத்தில் நாம் விவாதிக்கலாம். பின்வரும் கணிப்பு இதனைச் சிறப்பாக விளக்குகின்றது.

1984 இல் தீர்வையற்ற வர்த்தகத் தொகுதியில் இடம்பெற்ற மொத்த விற்பனை 104.8 கோடி ரூபாவாகும். இதன் மூலம் ரூபா 42.6 கோடி ரூபா இலாபம் பெறப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணி வடிவில் இது 51.4 சதவீத இலாபமாகும்.

எனினும், இத்தகைய இலாபத்தைத் தோற்றுவித்த விற்பனைகள் யாவும் ''உண்மையானவையா'' என ஆராய்தல் வேண்டும். கொள்வனவாளர்கள் உண்மையானவர்களாகவும், சட்டப்படி வர்த்தகம் இடம்பெற்றும் இருப்பின், நாட்டின் பொருளாதாரம் நன்மை அடைந்திருக்கும். ஆனால், தீர்வையற்ற வர்த்தகத் தொகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற நேர்மையீனங்கள் உண்மையாக இருப்பின், பொருளாதாரம் அடைந்த நன்மைகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். (தமது சொந்தப் பாவனைக்குத் தமது வெளிநாட்டுச் செலாவணியிலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்கின்ற வெளிநாட்டாரும், வெளிநாட்டிலிருந்து வருகின்ற இலங்கையருமே உண்மையான கொள்வனவாளர்களாவர்; சட்டரீதியற்ற பணத்திற்கும் வர்த்தக நோக்கங்களுக்கும் பொருட்களைக் கொள்வனவு செய்வோர் உண்மையான கொள்வனவாளர்கள் அல்ல).

1984 இல் சில தீர்வையற்ற வர்த்தக நிலையங்களில் இடம்பெற்ற விற்பனைப் புள்ளி விவரங்களை ஆராய்கையில் பெருமளவுக்கு சட்டரீதியற்ற விற்பனை இடம் பெற்றிருப்பதற்கு வாய்ப்பு இருப்பது போன்று தென்படுகின்றது. இரு வேறுபட்ட காலங்களுக்குரிய புள்ளி விபரங்களை இவை அளிக்கின்றன.

1. கடைத் தொகுதியின் கரும்பீடத்தின் மூலம் விற்பனையும் வினியோகமும் இடம்பெற்ற காலப் பகுதி.

2. 1984 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர், துறைமுகக் கட்டடத்தில் மாத்திரம் விற்பனையும் வினியோகமும் இடம்பெற்ற காலப் பகுதி.

ஏனைய சாதாரண விற்பனை நிலையங்களில் போன்று தீர்வையற்ற கடைத் தொகுதியிலும் பகிரங்கமாக விற்பனை இடம் பெற்றது. 1984 ஆகஸ்ட் மாதம் வரையிலும் இங்கு விற்பனையும் வினியோகமும் திறந்த சந்தையிற் போன்று இடம் பெற்றன. இத் 'திறந்த முறைமை' துஷ்பிரயோகம் செய்யப்பட்டதனுல் இதில் மாற்றம் செய்யப்பட்டது.

1981 அக்ரோபரில் இது செயற்படத் துவங்கியதிலிருந்து ஒழுங்கீனங்கள் இடம்பெற்றன. பொதுவாக எங்கும் இடம் பெறுவது போன்று, கடைத் தொகுதி இயங்கத் துவங்கிய சில மாதங்களுக்குள் சில கட்டுப்பாடுகள் அமுலாக்கப்பட்டன. நுளைவாயிலில் கடவுச்சீட்டைக் காட்டுதல், கடவுச் சீட்டில் உரிய நாணயமாற்றினைக்

**1984 இல் தீர்வையற்ற கடைத் தொகுதியில் உள்ள சில கடைகளில் இடம்பெற்ற விற்பனையின் பெறுமதி**
**(ரூபா.'000)**

| | கடை 'அ' | கடை 'ஆ' | கடை 'இ' | கடை 'ஈ' | கடை 'உ' |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 3,356 | 3,338 | 3,326 | 1,246 | 3,992 |
| பெப்ரவரி | 3,905 | 3,327 | 2,817 | 995 | 3,245 |
| மார்ச் | 2,364 | 2,219 | 2,627 | 1,024 | 1,655 |
| ஏப்ரல் | 2,932 | 3,715 | 2,549 | 1,017 | 1,787 |
| மே | 2,507 | 2,563 | 3,201 | 1,175 | 2,426 |
| ஜூன் | 2,225 | 1,853 | 2,741 | 686 | 4,065 |
| ஜூலை | 1,496 | 1,860 | 3,010 | 713 | 2,691 |
| ஆகஸ்ட் | 769 | 916 | 2,460 | 479 | 1,305 |
| செப்ரம்பர் | 36 | 396 | 249 | 76 | 125 |
| அக்ரோபர் | 203 | 1,467 | 2,199 | 359 | 1,038 |
| நவம்பர் | 1,275 | 748 | 2,180 | 297 | 441 |
| டிசம்பர் | 441 | 457 | 1,421 | 292 | 493 |

குறித்தல், ரூபா 20 அனுமதிக் கட்டணம் என்பனவே இவையாகும். முன்னர் அளிக்கப்பட்டிருந்த சுதந்திர அனுமதி முறையைத் துஷ்பிரயோகம் செய்தோர் இக்கட்டுப்பாடுகளை மீறுகின்றவரிகளை விரைவாகக் கண்டறிந்தனர். இவர்கள் தீர்வையற்ற வர்த்தகத் தொகுதிக்கு வந்து சில கடை உரிமையாளர்களதும், சில உத்தியோகத்தர்களினதும் உதவியுடன் தமது சட்டரீதியற்ற வர்த்தகத்தைத் தொடர்ந்தனர்.

இதற்கு எதிராகப் பொது சன அபிப்பிராயம் உருவெடுத்ததனால் உத்தியோகபூர்வமான முறையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன; வர்த்தக அமைச்சும் சுங்கத் திணைக்களமும் சில கடை உரிமையாளர்களை எச்சரித்ததுடன், சட்டரீதியற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட சில கடைகளை மூடியது. இவற்றை முழுமையாக அழிப்பதற்கு எடுக்கின்ற நடவடிக்கைகள் வர்த்தகத்தைத் தீவரமாகப் பாதிக்கக் கூடியதாகவிருந்தது. இதன் விளைவாக அதிகாரிகள் இரு தீவிரமான நிலைமைகளை எதிர்நோக்கினர். ஒன்றில் இவ்வர்த்தகத் தொகுதியை மூடிவிடுதல் அல்லது நகருக்கு வெளியே விமான நிலையத்திற்கு இதனைக் கொண்டு செல்லல்; அல்லது கடைத்தொகுதி உள்ள இடத்தில் அதனை இயங்கவிட்டு அங்கு நடைபெறுகின்ற சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாகப் பாராமுகமாக இருத்தல். இறுக்கமான கட்டுப்பாடுகளை மேற்கொள்வது இவை இரண்டிற்கும் இடைப்பட்ட நிலைமையாக விளங்கியது. 1984 ஆகஸ்ட் மாதத்திலிருந்து மூன்று கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1. தீர்வையற்ற கடைகளில் விற்பனை செய்யப்படுகின்ற பொருட்கள் யாவற்றையும் கொழும்புத் துறைமுகத்திற்கு

## நோக்கங்கள்

தீர்வையற்ற கடைத் தொகுதியின் குறிப்பான நோக்கங்களையும், அதை ஒழுங்குபடுத்தியமைப்பதற்கான விவரங்களையும் அமைச்சின் மேலதிக செயலாளர் அதன் திறப்புவிழாவில் விடுத்த அறிக்கையொன்றில் கீழ்க்கண்டவாறு தெளிவாக்கினர்:

"தீர்வையற்ற சாமான்களை வாங்க வருவோருக்குப் பரந்த அளவிலான வெவ்வேறு உற்பத்திப்பொருள்களை மிக மலிவானவிலைகளில் விற்பதன் மூலம் தீர்வையற்ற சாமான் கொள்வனவாளர்களைக் கவர்வதே எங்கள் குறிக்கோள்.

இந்த இலட்சியத்தைச் சாதிக்க, சகல பிரசித்திபெற்ற பொருள்களும் மிக மலிவான விலைகளில் விற்பனைக்குக் கிடைப்பதை நாம் முதலில் உறுதிப்படுத்த வேண்டும். எனவே, பிரசித்திபெற்ற பொருள்களின் தனி முகவர்களுக்கு அல்லது தனி விநியோகஸ்தர்களுக்குக் கடைகளை ஒதுக்குவதென முடிவுசெய்யப்பட்டது. அவர்களே மிகக் கவர்ச்சியான போட்டி விலைகளில் சாமான்களை விற்க முன்வரக்கூடிய நிலையிலிருப்பார்கள். ஏனென்றால், தனி முகவர்கள், தனிவிநியோகஸ்தர்கள் என்ற முறையில் அவர்கள் வழங்குநர்களிடமிருந்து சிறந்த விலைகளைப் பெறுகிறார்கள். இந்த அடிப்படையிலேயே பிரஸ்தாப முடிவு எடுக்கப்பட்டது.

கடைத் தொகுதிக்கான உள்ளமைப்பை அரசாங்கம் இலாபமோ அல்லது நஷ்டமோ இல்லாத அடிப்படையில் வழங்கும் கடைகளை ஒதுக்கப் பெற்றவர்களின் பொதுச் செலவுகள் மிகக் குறைந்த அளவில் இருப்பதை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம்.

வெளிநாட்டு நாணயத்துக்குத் தீர்வையற்ற கடைத் தொகுதியில் விற்கப்படுவதற்காக, சரக்குகளை வழங்குநர்களிடமிருந்து விசேஷ சலுகைக் கடன் நிபந்தனைகள்மீது இறக்குமதி செய்யும் வசதியை அனுமதிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தீர்வையற்ற கடைத் தொகுதிக்காக இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகள் வெளிநாட்டு நாணயத்துக்கு மட்டும் விற்கப்படுவதையும், அதுவும் தீர்வையற்ற நலஉரிமையைப்பெற அருகதையுள்ளவர்களுக்கு மட்டும் விற்கப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்காக, சவிஸ்தாரமான கட்டுப்பாட்டுக்கு இசைவாக கடுமையான சுங்கப்பகுதிச் சம்பிரதாயங்களும், நடைமுறைகளும், நணயப்பரிவர்த்தனைக்கட்டுப்பாட்டு விதிகளும் ஆகக் குறைந்த அளவிலேயே வைக்கப்பட்டுள்ளன.

வர்த்தக அளவிலான சரக்குகள் சாதாரணமாகக் கொள்வனவாளர்களுக்குக் கடையடியிலேயே கையளிக்கப்படமாட்டா. ஆனால், நேரடியான மறு ஏற்றுமதிக்காக விமானநிலையத்திலோ அல்லது துறைமுகத்திலோ ஒப்படைக்கப்படும்.

மறு ஏற்றுமதிக்காக விற்கப்பட்ட சரக்குகளைக் கொள்வனவாளர்கள் மறு ஏற்றுமதி செய்வதை உறுதிப்படுத்துவதற்காக விமானநிலையத்திலும் துறைமுகத்திலும் சுங்கப்பகுதி அதிகாரிகள் சோதனை செய்வர். உத்தியோக பூர்வமான நடைமுறைகளையும் சம்பிரதாயங்களையும் துரிதப்படுத்துவதற்காகவும் மேற்பார்வையிடுவதற்காகவும் தீர்வையற்ற கடைத் தொகுதியிலேயே ஒரு சுங்கக் காரியாலயம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குவரும் இலங்கை வாசிகளைப் பொறுத்தமட்டில், தீர்வையற்ற கடைத் தொகுதியில் சாமான் வாங்குவதற்காக அவர்களுக்குத் தீர்வையற்ற உரிமை 1,000 ரூபாவிலிருந்து 2,000 ரூபாவுக்கு இரட்டிக்கப்பட்டுள்ளது. அதாவது, நாட்டுக்கு வரும் இலங்கை வாசியொருவர் வெளிநாட்டில் சாமான் வாங்கினால், அவருக்குத் தீர்வையற்ற உரிமை 1,000 ரூபாவாக இருக்கும். ஆனால், அவர் இலங்கையிலுள்ள தீர்வையற்ற கடைத் தொகுதியில் சாமான் வாங்கினால், அவருக்குத் தீர்வையற்ற உரிமை 2,000 ரூபாவாக இருக்கும்.

வெவ்வேறு புகழ்பெற்ற வர்த்தகக் குறியுள்ள பொருள்களுக்கு முகவர்களாயிருப்போரைப் பெருந் தொகையாகத் தெரிவுசெய்து, அவர்களுக்குக் கடைகளை ஒதுக்கினால், போட்டியிடும் நிலைமையொன்று உருவாகும். அதன் பயனாக, உபயோகிப்பாளர்கள் வெவ்வேறு விலைகளில் தெரிவுசெய்ய, பரந்த அளவிலான சரக்குகள் இருக்கும். இதனால் கடைகளை நடத்துவோர் ஓர் ஆதாயமுள்ள விலைகளை அறவிட வேண்டிய நிலைமை தோன்றுவதுடன், அவர்கள் இலாபங்களுக்கு "மொத்த வியாபாரத்தையே" சார்ந்திருக்க வேண்டியும் வரும்.

தீர்வையற்ற கடைத் தொகுதிக்குச் சாமான் வாங்குவதற்காகத் தனிநபர்களை ஈர்ப்பதற்கு மட்டுமன்றிக் கட்டளைகளைப்பெற்று, சரக்குகளைத் தபால் மூலம் அனுப்பும் வியாபாரத்தைக் கவர்வதற்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நிலையான விளம்பர இயக்கமொன்று ஆரம்பிக்கப்படும். கட்டளைகளுக்குச் சரக்குகளைத் தபால் மூலம் அனுப்பும் துறையில் நிறைய வாய்ப்புகள் உண்டு.

வழங்கி, கொள்வனவு செய்தோர் அலற்றை அங்கு பெறுதல்.

2. முன்னர் கடை உரிமையாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த களஞ்சியசாலைகள், சுங்கத் திணைக்களத்தினதும் கடை உரிமையாளர்களதும் கூட்டுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன.

3. வியாபாரிகளுக்கிடையில் பொருள்கள் மாற்றப்படுவதனை தடுத்தமை.

1984 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் விற்பனையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதனை மேலே உள்ள விற்பனைப் புள்ளி விபர அட்டவணை காட்டுகின்றது. ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னருள்ள விற்பனைகள் உண்மையான விற்பனைகள் இல்லை எனவும், வீழ்ச்சியடைந்த 50 சதவீத விற்பனையும் சட்டரீதியற்ற விற்பனைகளே எனவும் சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் கொள்வனவாளரைக் கடைகளுக்கு வராது தடுத்தது என்பது இன்னொரு கருத்தாகும். இதற்கு மேலாகக் கடை உரிமையாளர்கள் தமது கட்டுப்படுத்தப்பட்ட பண்டகசாலைகளிலிருந்து தாம் விரும்பியவாறு பொருட்களை எடுத்துச் செல்ல இயலாமை, சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி, மந்த கதியில் குடிப்பெயர்வுத் தொழிலாளர்கள் நாடு திரும்பியமை போன்ற காரணிகளும் விற்பனை வீழ்ச்சிக்குக் காரணமாக விருந்தன.

கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் பின்னர், தமது 36 அங்கத்தவர்களுள் 30 அங்கத்தவர்களின் விற்பனை 40 சதவீதத்திற்கும் கூடுதலாக வீழ்ச்சி அடைந்ததாக தீர்வையற்ற வர்த்தகர் சங்கம் தெரிவித்தது. இவற்றுள் 13 கடைகள் 60 சதவீதத்திற்கும் கூடுதலான வீழ்ச்சியையும், 7 கடைகள் 80 சதவீதத்திற்கும் கூடுதலான வீழ்ச்சியையும் காட்டுகின்றன. கட்டுப்பாடு விதிக்கப்படுவதற்கு முன்னரும் விதிக்கப்பட்ட பின்னரும் கடைகளுக்கு விஜயம் செய்தோர் தொடர்பான ஒரு அட்டவணையையும் இச் சங்கம் வெளியிட்டது. தமக்குப் பெரு நட்டம் ஏற்பட்டதனை இது குறிப்பிடுகின்றது எனவும் இவர்கள் கூறினர்.

இதன்படி உள்ளூர் வாடிக்கையாளர்களின் வருகை 50 சதவீதத்தினாலும், வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் வருகை 60 சதவீதத்தினாலும் வீழ்ச்சி அடைந்துள்ளது. எனினும்,

(14 - ம் பக்கம் பார்க்க)

### செலுத்த வேண்டிய தீர்வைகள் (மதிப்பிடப்பட்டது) 1982 - 1983

*01 - 06 - 82 விருந்து 31 - 05 - 83 வரை ஒரு வருட காலத்தில் தீர்வையற்ற கடைகளால் இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளின் பெறுமதியும் செலுத்த வேண்டிய தீர்வையும்.*

| | (ரூபா '000) மொத்த பெறுமதி | செலுத்த வேண்டிய தீர்வை |
|---|---|---|
| மதுபானம் | 13,960 | 26,111 |
| சிகரட், புகையிலை | 6,650 | 33,252 |
| கைக்கடிகாரம், சுவர்க்கடிகாரம் முதலியன | 56,673 | 53,107 |
| வானொலி, டி. வி. பெட்டிகள் | 414,457 | 317,678 |
| வீடியோ பதிவு கருவிகள் | 106,126 | 63,675 |
| மின்சார உபகரணங்களும், வீட்டுபயோக பொருட்களும் | 147,865 | 147,990 |
| காஸ் குக்கர்கள் | 32,355 | 11,324 |
| கண்ணடிப் பொருட்கள் | 16,236 | 16;236 |
| இசைக்கருவிகள் | 4,195 | 2,517 |
| துணிகள், ஆடைகள் | 38,084 | 81,826 |
| கணக்கீட்டு யந்திரங்கள் | 12,919 | 7,692 |
| கெமராக்களும், புகைப்பட கருவிகளும் | 10,177 | 6,330 |
| படச் சுருள்களும், ஒலிப்பதிவு நாடாக்களும் | 31,512 | 18,374 |
| நறுமணங்கள் | 8,475 | 42,374 |
| இனிப்புப் பண்டங்கள் | 894 | 894 |
| (போலி) நகைகள் | 197 | 197 |
| சிகரட் லைட்டர்கள், பிளாஸ்குகள் என்பன | 2,877 | 1,814 |
| மொத்தம் | 901,652 | 831,390 |

01. 06. 1982 விருந்து 31. 05. 1983 வரையுள்ள 12 மாதங்களின் போது கொழும்பு தீர்வையற்ற கடைத் தொகுதிக்காக இறக்குமதி செய்யப்பட்ட தீர்வையற்ற சரக்குகளின் உத்தியோகபூர்வமான பெறுமதி மொத்தம் 90,16,52,000 ரூபாவாகும்; இவ்வருடத்தில் இந்த இறக்குமதிகள் மீது செலுத்த வேண்டிய தீர்வை 83,13,90,000 ரூபாவாகும். எனவே 90 கோடி 17 இலட்சம் ரூபா பெறுமதியான சமான்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. ரேடியோ ஒலிவாங்கிகள், தொலைக் காட்சிப் பெட்டிகள் தொடர்பாகவே ஆகக்கூடிய பெறுமதியான 41 கோடி 45 இலட்சம் ரூபா பதிவுசெய்யப்பட்டது. இரண்டாவதாக மின்சார உபகரணங்கள், வீட்டுச் சாமான்கள் சம்பந்தமாக 10 கோடி 61 இலட்சம் ரூபா பெறுமதி பதிவு செய்யப்பட்டது. மற்றும் துறைகளுடன் ஒப்பிடுகையில், கைக்கடிகாரங்கள் மற்றும் மணிக்கூடுகளும் அத்துடன் நெய்த துணிகளும் ஆடைகளும் அதிக அளவு இறக்குமதிகளைப் பதிவுசெய்தன. தீர்வையற்ற வாசனைத் தைலங்களின் இறக்குமதியால் அரசாங்க வருமானத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் 4 கோடி 24 இலட்சம் ரூபா போன்ற பெருந்தொகையாகும். இப்பொருள் சம்பந்தமாகச் செலுத்த வேண்டிய தீர்வைதான் எந்த எளிய இனத்துக்கும் செலுத்த வேண்டிய தீர்வையில் ஆக உயர்ந்ததாகும். செலுத்த வேண்டிய மொத்தத் தீர்வையில் அரசாங்க வருமானத்துக்குப் போய்ச் சேராத தொகை 83 கோடி 14 இலட்சம் ரூபாவாகும். இது 1985ம் ஆண்டில் ஆஸ்பத்திரி - சுகாதார சேவைகளுக்கு அரசாங்கம் செலவிட்ட மொத்தத் தொகையைவிட அதிகமாகும். 1986 ஆண்டுக்கான அரசாங்கத்தின் வருமானம் செலவுகள் பற்றிய மதிப்பீட்டின்படி ஆஸ்பத்திரி - சுகாதார சேவைகளுக்குச் செலவிடப்பட்ட தொகை 80 கோடி 60 இலட்சம் ரூபாவாகும்.

# தீர்வையற்ற வர்த்தகர்கள் ஆட்சேபிக்கின்றனர்

முறையற்ற செயல்களைக் குறைப்பதற்கும், கட்டுப்பாடுகளை இறுக்குவதற்குமான நோக்கத்துடன் 1984ம் ஆண்டிலிருந்து தீர்வையற்ற கடைத் தொகுதியின் நடை முறைகளில் மூன்று மாற்றங்கள் செய்யப்பட்டன. இவற்றில் (அ) தீர்வையற்ற கடைத் தொகுதியில் வாங்கப்பட்ட சரக்குகளைத் துறைமுகத்திலுள்ள சுங்கவளவில் கொடுப்பதும், சேகரிப்பதும் (ஆ) தீர்வையீட்டுப் பண்டசாலைகளை இரட்டைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல் (இ) தீர்வையீட்டுச் சரக்குகளை எடுக்காமல் நிறுத்திவிடல். இந்த மூன்று புதிய ஒழுங்குவிதிகளும் தீர்வையற்ற கடைத் தொகுதி வர்த்தகர்களுக்கு எரிச்சலூட்டியுள்ளன. இது பற்றி அவர்கள் ஆட்சேபித்தனர். அவர்களுடைய ஆட்சேபனைகளுக்குரிய காரணங்கள் கீழே தரப்படுகின்றன:

முதலாவது மாற்றத்தைப் பொறுத்தவரை, இவ்விதியிலிருந்து எழும் பிரதான பிரச்சினை என்னவென்றால், கொள்வனவு செய்யப்பட்ட சரக்கு சுங்க வளவிலுள்ள ரி-2 பண்டசாலையில் மட்டுமே ஒப்படைக்கப்படும் என்பதாகும். பல வாடிக்கையாளர்கள் இந்த மேலதிக பயணத்தை மேற்கொள்ளும் அசௌகரியத்துக்குள்ளாகவும், காலவிரய நடை முறைகளைப் பின்பற்றி, அவசியமான ஆவணங்களைக் காட்டிக் கொண்டிருக்கவும் தயாராயில்லை. மேலும், வாடிக்கையாளர்களிடம் ஒப்படைக்கப்படும் சரக்குகள் ஒன்றில் சேதமடைந்துள்ளன அல்லது அவற்றில் சில களவாடப்பட்டுள்ளனவென்று பல புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்தச்சேதம் சரக்கேற்றும்போதும் சரக்கிறக்கும் போதும் சுங்கவளவில் ஒப்படைப்பதற்காகக் கலஞ்சியப் படுத்தும் போதும் ஏற்படுகிறது. பீங்கான்கள் அல்லது கண்ணாடிச்சாமான்கள் போன்ற எளிதில் உடையத்தக்க சரக்குகள் விஷயத்தில் இப்படி நடக்கிறது. சொக்கலேட் பெட்டிகள், சிகரெட்டுகள், சுருட்டுகள், பியர், மதுவகைகள் போன்ற சரக்குகள் சம்பந்தமாகக் களவுகள் நடைபெறுகின்றன. மேலும், கடிகாரங்கள், கமராக்கள், ஆபரணங்கள் முதலிய விலையுயர்ந்த நுண்மையான பொருள்கள் உடனடியாக ஒப்படைக்கப்படுவதில்லை; இன்னொரிடத்தில் அவற்றைப்பெறக் காத்திருக்க வேண்டியிருக்கிறது; அவை எப்போது என்ன நிலையில் ஒப்படைக்கப்படும் என்று நிச்சயமில்லாமலிருக்கிறது. இதனால் வாடிக்கையாளர்கள் இவற்றைக் கொள்வனவு செய்யவேண்டா வெறுப்புடனிருப்பதை நாம் கவனித்தோம்.

வாடிக்கையாளர்கள் மீண்டும் விற்பதற்காகவே சாமான்களை வாங்கினார்கள் என்றும், வாடிக்கையாளர்களுக்கு விற்கப்பட்ட சாமான்களைப் பெற, பெருந்தொகையான தரகர்கள் கடைத் தொகுதிக்கு வெளியேயும் உள்ளேயும் காத்திருக்கிறார்கள் என்றும் சுங்க அதிகாரிகள் முறையிட்டதன் காரணமாக, கடைகளிலிருந்து நேரடியாக வாடிக்கையாளர்களிடம் சாமான்களை ஒப்படைப்பது நிறுத்தப்பட்டது. ஆனால், இதே நபர்கள் அனுமதிப்பத்திரங்களுடன் சுங்க வளவுக்குள் எப்படியோ வந்து விடுவதை நாம் கவனித்தோம். குளிர்ப்பெட்டி, டெலிவிஷன்கள், காற்றுச் சீராக்கிகள் முதலியனபோன்ற வாடிக்கையாளர்கள் வாங்கிய பொருள்களை வெளியே கொண்டுபோக அவர்களுக்கு உதவி செய்ய, தரகர்கள் வாகனங்களுடன் அங்கு தயாராக நின்றுகொண்டிருக்கிறார்கள். இந்நிலையில், உண்மையான வாடிக்கையாளர்களைத் தடைசெய்து கொண்டும், வியாபாரத்தைக் குறைத்துக் கொண்டுமிருக்கும். ஒரு நடைமுறையைப் பிடிவாதமாகப் பின்பற்றிக் கொண்டிருப்பது நியாயமாவென்ற கேள்வி எழும்புகிறது.

இரண்டாவது மாற்றத்தின்படி தீர்வையீட்டுப் பண்டசாலைகள் மீது இரட்டைக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அநாவசியக்கால தாமதங்கள் உண்டாகின்றன. ஏனென்றால், சுங்கசோதனை அதிகாரி வந்து சேரும்வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது. இதனால் சிலசமயங்களில் விற்பனைகள் இழக்கப்படுகின்றன. ஒரு பண்டசாலையைத் திறக்கும் செலவு இப்பொழுது வருகை ஒன்றுக்கு 100/- ரூபா. இது அதிக செலவை உண்டாக்கும் ஒரு முறையாகும். ஏனென்றால், ஒவ்வொரு கடைக்கும் ஒதுக்கப்பட்டுள்ள சிறு பரப்பில் களஞ்சியபடுத்துமிடமில்லாததால் பல முறை இத்தகைய விஜயங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

மறு தீர்வையீட்டை நிறுத்திய மூன்றாவது மாற்றம் எங்களைக் கீழ்க்கண்டபடி பாதிக்கிறது: இந்த நிறுத்துக்கு முன்பு கொள்கல பாரங்கள் போன்ற தொகையான அளவுகள் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் மூலம் கொள்வனவுகள் செய்யப்பட்டன. இந்தப் பழக்கத்தினால் சில குறிப்பிட்ட பொருள்களின் பேரில் ஆகக் குறைந்த விலைகளைப் பெற முடிந்தது. அதன்விளைவாக, இப்பிராந்தியத்திலுள்ள கடைகளில் எங்களுடைய கடைகளே தீர்வையற்ற மிக வலிவான கடைகளாயிருந்தன. இது அயல் நாடுகளிலிருந்து பல வெளிநாட்டுக் கொள்வனவாளர்களை ஈர்த்தது. நாங்கள் வியாபாரஞ் செய்யாத சரக்குகளை மறுபந்தகப்படுத்துவதன் மூலம் நாங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள முடிந்தது. அத்துடன், நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டாளர் அனுமதிக்கும் டி. ஏ. (அங்கீகரிப்பதன் மேல் ஆவணங்கள்) நிபந்தனைகள் மீது சரக்குகளுக்குக் கட்டளை கொடுக்கும் போது பெறப்படும் கடன் வசதியை மற்றவர்களுக்கும் கொடுக்க முடிந்தது. மறுபந்தகப்படுத்தும்முறை நிறுத்தப்பட்டதனால் தொகையான அளவுகளில் கொள்வனவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை நாங்கள் நடத்துவது இப்பொழுது தடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எங்கள் விலைகள் அதிகரித்து விட்டன; பிராந்தியத்திலுள்ள மற்றும் நாடுகளின் தீர்வையற்ற கடைகளுடன் போட்டியிடும் திறமை எங்களுக்குக் குறைந்து விட்டது.

'அசிட் வீச்சு' சம்பவத்துக்குப் பின் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட மேற்குறித்த மூன்று மாற்றங்களின் பாதகமான விளைவுகளுடன், எங்கள் விற்பனைகள் மீது அறவிடப்படும் மொத்த வியாபாரவரியினாலும் நாங்கள் மோசமாகப் பாதிக்கப்படுகிறோம். 10 சதவிகித மொத்த வியாபார வரியின் விளைவாக, உள்நாட்டுச் சந்தைக்கான தீர்வை செலுத்திய பொருள் மீது தீர்வையும் குறைக்கப்பட்டுள்ளதனால் எங்கள் கையிருப்புகளை அப்படியே வைத்திருக்க வேண்டியிருக்கிறது. நாங்கள் கையிருப்பில் வைத்திருக்கும் கணக்கிடும் பொறிகள் போன்ற சில பொருள்கள் உள்நாட்டுச் சந்தையில் மலிவாயிருக்கின்றன. எனவே, கடைத் தொகுதிக்கு வெளியேயுள்ள உள்நாட்டு விலைகள் வெளிநாட்டினருக்குக் கூட தெரிந்திருப்பதால், நாங்கள் வாடிக்கையாளர்களை இழந்து வருகிறோம்.

மேற்சொன்ன காரணங்களினால், நாங்கள் இப்பொழுது ஒரு மிகக்கஷ்டமான நிதிநிலைமையில் இருக்கிறோம். அந்தரங்க சுத்தியுடன் கட்டளையிட்ட பல இலட்சம் ரூபா விலையுள்ள சரக்குகளை நாங்கள் வைத்திருக்கிறோமென்பது யாவருமறிந்த விஷயம். கடைத்தொகுதி ஸ்தாபிக்கப்பட்டபோது அமுலிலிருந்த நிபந்தனைகள், நிலைமைகளில் தொடர்ந்து வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவோம் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இந்தப் புதிய கட்டுப்பாடுகள் எங்கள் வியாபாரத்துக்கான பணம் காண முடியாத நிலைக்கு எங்களைக் கொண்டுவந்துள்ளன. வர்த்தக வங்கிகள்கூட தற்போது அமுல் செய்யப்படும் தீர்வையற்ற திட்டத்தின் பொருளாதார பயன்பாட்டில் நம்பிக்கை இழந்துவிட்டன. ஏனென்றால், அவை எங்களுக்கு மேலும் எந்த உவியையோ அல்லது வசதிகளையோ வழங்க மறுக்கின்றன.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அளவு கூடுதலான உள்ளூர் வாடிக்கையாளர்கள் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்காக மாத்திரம் தமது தீர்வையற்ற கொடுப்பனவை இழக்க முன்வருவர் எனக் கருதவியலாது. சட்டரீதியற்ற வர்த்தகத்தில் ஈடுபடுவோரின் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்குக் காரணமாகும் என ஒரு சாரார் கூறுகின்றனர். வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் வீழ்ச்சிக்கு சுற்றுலாப்பயணிகளின் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும் எனவும் இவர்கள் கூறுகின்றனர்.

எனினும், தீவிர துற்பிரயோகம் இடம்பெற்றது என்பதனை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். தீர்வையற்ற வர்த்தகத் தொகுதியின் இயக்கத்தின் விளைவாக நாடு நன்மை அடைந்ததா என்பதே பிரதான கேள்வியாகும். இடம்பெற்ற துற்பிரயோகங்களின் பின்னணியில் நோக்குகையில் 1984 இல் உழைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட 51.4 சதவீத இலாபம் நாட்டுக்கு வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாக அமைந்திருக்கும் எனக் கூறுவது கடினமாகும். தீர்வை விதிக்கப்பட்டிருப்பின், இந்த இறக்குமதிகள்யாவும் மேற்கொள்ளப்பட்டிருக்க மாட்டாது. ஆனல், இந்த இறக்குமதிகள் இடம் பெற்றதனுல் நாடு தீர்வைகளை இழந்தது. 1981 - 82 இல் இது ரூபா 80 கோடியாக இருந்தது.

1985 வரையிலும் நாடு இன்னொரு வழியிலும் நட்டம் அடைந்தது; மொத்த விற்பனவு வரி இழப்பே இதுவாகும். எல்லா வர்த்தக நிலையங்களும் தமது விற்பனைகளுக்கு மொத்த விற்பனை வரியைச் செலுத்தின; ஆனல், தீர்வையற்ற வர்த்தகத் தொகுதியில் உள்ள கடைகள் இதனைச் செலுத்தவில்லை. 1985 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின்போது நிதி அமைச்சர் இவற்றின் மீது இவ்வரியை விதித்தார். இது பற்றி

**கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கு முன்னரும் பின்னரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை**

| மாதம் | இலங்கையர் | வெளிநாட்டார் | மொத்தம் |
|---|---|---|---|
| கட்டுப்பாட்டுக்கு முன்னர் | | | |
| ஜனவரி 1984 | 11,290 | 9,809 | 21,099 |
| பெப்ரவரி | 7,991 | 9,293 | 17,284 |
| மார்ச் | 7,736 | 10,247 | 17,983 |
| ஏப்ரல் | 7,313 | 6,657 | 13,970 |
| மே | 8,694 | 6,324 | 15,018 |
| ஜூன் | 9,769 | 7,532 | 17,301 |
| 6 மாத மொத்தம் | 52,787 | 49,862 | 102,655 |
| கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட பின்னர் | | | |
| ஜனவரி 1985 | 6,377 | 3,429 | 9,806 |
| பெப்ரவரி | 3,700 | 2,919 | 6,619 |
| மார்ச் | 4,400 | 3,051 | 7,451 |
| ஏப்ரல் | 4,795 | 3,600 | 8,445 |
| மே | 4,460 | 3,920 | 8,380 |
| ஜூன் | (4,025) | (2,344) | (6,369) |
| 6 மாத மொத்தம் | 27,757 | 19,263 | 47,070 |

அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''தற்போது தீர்வையற்ற வர்த்தகத் தொகுதியில் விற்பனை செய்யப்படுகின்ற பொருட்களுக்கு இறக்குமதித் தீர்வையும் மொத்த விற்பனவு வரியும் முழுமையாக விதிக்கப்படுவதில்லை. ஆகையால் இப்பொருட்களை மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்யலாம். ஏனைய தீர்வையற்ற வர்த்தக நிலையங்களின் விலைகளை விடவும், இலங்கையில் உள்ள தீர்வையற்ற வர்த்தக நிலையத்தில் விலைகள் மிகவும் குறைவாகும். தீர்வையற்ற வர்த்தகத் தொகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் ஏறக்குறைய 20 சதவீத இலாபத்துடன் மீள விற்பனை செய்யப்படுகின்றன. விற்பனைகளைத் தீவிரமாக மந்தமடையச் செய்யாத விதத்தில் ஒரு விற்பனை வரியை விதிப்பது சாத்தியமாகும் என்பது எனது கருத்தாகும். இவ்வரி விதிப்பு சில உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம் அளிக்கலாம்; இந்த உள்ளூர்த் தயாரிப்புக்கள் தீர்வையற்ற வர்த்தகத் தொகுதியில் விற்பனை செய்யப்படுகின்ற சில பொருட்களுடன் போட்டியிடுகின்றன. தீர்வையற்ற கடைத் தொகுதியின் எல்லா விற்பனைகள் மீதும் 10 சதவீதம் மொத்த விற்பனை வரியை விதிக்க வேண்டும் என நான் முன்மொழிகின்றேன். இம் மூலத்திலிருந்து நான் ரூபா 10 கோடி வருமானமாக எதிர்பார்க்கின்றேன்.''

தீர்வையற்ற கடைகளுக்கு வருகின்ற பொருட்களுள் பெரும் பகுதி ஏறக்குறைய 20 சதவீத இலாபத்தில் திறந்த சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன என்ற கருத்தை இக் கூற்று ஆதரிக்கின்றது; எனினும், இந்த இலாபம் இதனை விடவும் அதிகம் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தீர்வையற்ற விற்பனைகளில் 50 சதவீதத்திற்கும் கூடுதலானவை திறந்த சந்தையில் மீண்டும் விற்பனை செய்யப்படுகின்றன என சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பெரும்

## உலக தீர்வையற்ற வர்த்தகம்

**தீர்வையற்ற கடைகளின் மொத்த உலக விற்பனை**

| பொருள் | 500 முன்னணி கடைகள் பெறுமதி அ. டொலர் (பத்துலட்சம்) | % | அனைத்தும் பெறுமதி அ. டொலர் (பத்துலட்சம்) | % |
|---|---|---|---|---|
| பானங்கள் | 860.0 | 35% | 1,050.0 | 35% |
| நறுமணங்கள் | 515.0 | 21% | 630.0 | 21% |
| புகைத்தல் பொருட்கள் | 590.0 | 24% | 720.0 | 24% |
| ஏனையன | 485.0 | 20% | 600.0 | 20% |
| மொத்தம் | 2,450.0 | 100% | 3,000.0 | 100% |

மூலம்: 'மிகச்சிறந்தவை 1984', சுவீடன் ஆய்வு

தீர்வையற்ற கடைகள் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக உலகெங்கணும் பிரயாணஞ் செய்யும் பிரயாணிகளுக்கு பணிபுரிந்து வந்துள்ளன. இக் கடைகள் பொதுவாக, விமான நிலையங்களிலும், பயணத்தில் ஈடுபட்டிருக்கும் விமானங்களுக்குள்ளும், தேசிய எல்லைகளிலும், நகரங்களின் ஒரு பகுதியிலும் அமைந்துள்ளன. கட்டுப் படுத்தப்பட்ட "சுதந்திர வலயங்களான" விமான நிலையங்களிளும், விமானங்களுக் குள்ளும், உள்ளூர் நீர் படகுகளிலும் அமைந்துள்ள தீர்வையற்ற கடைகள், சர்வதேச நுகர்வோருக்கு, உள்நாட்டுப் பொருட்களை அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை வெளி நாட்டுச் செலாவணிக்கு விற்பனை செய்கின்றன. உலகளாவிய ரீதியிலும், பூகோள ரீதியிலும் ஐரோப்பாவே உலகின் மிகப்பெரிய தீர்வையற்ற சந்தையாக விளங்குகின்றது; உலக மொத்தத்தில் 60 சத வீதத்தை ஐரோப்பா பெறுகின்றது.

மதுசாரங்கள், நறுமணப் பூச்சுக் கள், புகையிலைப் பொருட்கள் போன் றனவே பொதுவாக "ஆடம்பரப் பொருட்களான" கருதப்பட்டு கூடிய வரிவிதிப்புக்கும், தீர்வைக்கும், கட்டணங்களுக்கும் உள்ளாகின்றன. இப் பொருட்களுக்கு வழமையாக விதிக்கப்படும் கூடிய வரி, தீர்வைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, தீர்வையற்ற கடைகளின் மொத்த வியாபாரத்தில் இவை 80 சதவீதத்தைப் பெறுகின்றன என்ற செய்தி ஆச்சரிய மூட்டுவதாக இருக்கமாட்டாது.

பல்வேறு வித்தியாசமான சுவைகளையும் நுகர்வு நாட்டங்களையும், தேர்வுகளையும் கொண்ட ஒரு பல்தேசிய நுகர்வோரின் கலவையை தீர்வையற்ற கடைகள் அடிக்கடி எதிர்கொள்கின்றன. இன்று 500 க்கும் அதிகமான இத்தகைய தீர்வையற்ற கடைத் தொகுதிகள் இயங்கி வருகின்றன. உலகின் முன்னணி 500 தீர்வையற்ற கடைகள் வருட மொன்றுக்கு 245 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான தீர்வையற்ற பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்து வருவதாக சுவீடனில் நடத்தப்பட்ட ஆய்வொன்று தெரிவிக் கின்றது. வைன்கள், மதுசாரம் போன்ற வற்றுக்கு பிரயாணிகள் 86 கோடி அ. டொலரை செலவிடுகிறார்கள்; நறு மணங்களுக்கும், அலங்கிருத பூச்சுகளுக் கும் 51.5 கோடி அ. டொலரையும், சிகரட், சுருட்டு, புகையிலை போன்றவற் றுக்காக 59 கோடி டொலரையும் அவர் கள் செலவிடுகிறார்கள். வேறும் சில மதிப் பீடுகள் சகல தீர்வையற்ற கடைத் தொகுதிகளும் வருடாந்தம் 300 கோடி டொலருக்கு கூடிய விற்பனைகளை மேற் கொள்வதாக தெரிவிக்கின்றன.

தீர்வையற்ற கடைகள் 100 க்கும் அதிகமான நாடுகளில் இயங்கி வருகின்றன. ஆனால், அனைத்து நாடு களில் இயங்கும் கடைகளிலும் சகல பொருட்களும் விற்பனைக்கு இருப் பதில்லை. விமான நிலையக் கடைகளும், பயணத்தில் ஈடுபட்டிருக்கும் விமானங் களில் இயங்கும் கடைகளும் மொத்த உலக தீர்வையற்ற வர்த்தகத்தில் 60 சதவீதத்தைப் பெறுகின்றன.

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தி லுள்ள கடைத்தொகுதியே 1984, 1985 வருடங்களில் ஆகக்கூடிய மொத்த விற்பனையை - 9 கோடி அமெரிக்க டொலர் பதிவு செய்துள்ளது. ஐக்கிய இராச்சியத்தின் கட்விக் விமான நிலையமும் - வருடாந்தம் 4 கோடி அ. டொலர் - முக்கியமான ஒரு விற்பனை மையமாக இருக்கின்றது. ஐரோப் பாவின் அடுத்த முக்கிய மையம் அம்ஸ்டர் டாம் விமான நிலையமாகும். இதன் வரு டாந்தமொத்த விற்பனைகள் 7.8 கோடி அ. டொலர்களாக இருக்கின்றன. பாரிசின் சார்ல்ஸ் டி கோல், ஓர்லி ஆகிய இரு விமான நிலைய கடைத்தொகுதிகளும் 1985 ல் 10 கோடி டொலர் பெறுமதி யான பொருட்களை விற்பனை செய் துள்ளன. பிராங்போர்ட், சூரிச், புருஸ்யல்ஸ் போன்ற ஏனைய ஐரோப்பிய விமான நிலையங்களும் பிரதான தீர்வை யற்ற வியாபார மையங்களாக இருக் கின்றன. உலக தீர்வையற்ற விற்பனை களில் ஐரோப்பாவின் பங்கு 25 சத வீதமாகும்.

"மிகச்சிறந்தவை - 1984" என்ற சுவீடிஸ் ஆய்வு, ஆசியாவில் சிங்கப்பூர், ஹொங்கொங், டோக்கியோ விமான நிலையங்கள் முன்னணி விற்பனை நிலையங்கள் எனக் குறிப்பிடுகின்றது. மேலும், உலகின் 100 முன்னணிக் கடைகளை வரிசைப்படுத்தும் போது கொழும்பு கடைத்தொகுதியை 90 ம் இடத்தில் அது வைத்துள்ளது.

**பொருள் விற்பனை - 1984 (%)**

| பிராந்தியம் | பானங்கள் % | நறுமணங்கள் % | புகையிலை % | ஏனையன % | மொத்தம் % |
|---|---|---|---|---|---|
| மொத்தம் ஐரோப்பா | 32.2 | 20.9 | 26.6 | 20.3 | 100 |
| மொத்தம் அமெரிக்கா | 40.3 | 20.5 | 19.6 | 19.6 | 100 |
| மொத்தம் ஆபிரிக்கா | 34.1 | 13.6 | 18.2 | 34.1 | 100 |
| மொத்தம் மத்திய கிழக்கு | 44.2 | 26.3 | 24.2 | 5.3 | 100 |
| மொத்தம் ஆசியா, பசுபிக் | 42.6 | 22.5 | 17.6 | 17.3 | 100 |
| உலக மொத்தம் | 35.1 | 21.0 | 24.1 | 19.8 | 100 |

மூலம்: 'மிகச்சிறந்தவை 1984', சுவீடன் ஆய்வு

பாலும் இலத்திரனியல் கருவி கள், மதுபானம், கண்ணாடிப் பாத்திரங்கள் என்பனவே இவ் வாறு மீளவும் விற்பனை செய்யப் படுகின்றன. எனினும் விஸ்கி, பிராந்தி போன்ற மதுபானங்கள் நேரடியாகத் திறந்த சந்தைக்குச் செல்லுவதில்லை; இவை தரகர் களின் ஊடாக செல்வந்தர்களைச் சென்றடைகின்றன. இதன் விளை வாக, உள்ளூர் வடிசாலைக் கைத் தொழில்கள் போன்றன பாதிக் கப்படலாம். உள்ளூர்த் தொலைக் காட்சி ஒன்றிணைப்புக் கைத் தொழில் இத்தகைய பாதிப்பிற்

குச் சிறந்த உதாரணமாகும்.

தீர்வையற்ற கடைத் தொகுதியின் விற்பனைகளின் விளைவாக, 1981, 1982 சுங்கப் புள்ளிவிபரங்களில் மேலும் சில நட்டங்களைச் சேர்க்கலாம். 1981 இல் 1 கோடி 49 லட்சம் ரூபா பெறுமதியான விஸ்கியும், ரூபா 76 லட்சம் பெறுமதியான பிராந்தியும் இறக்குமதி செய்யப்பட்டன; இவற்றிலிருந்து முறையே ரூபா 1 கோடி 98 லட்சமும், ரூபா 61 லட்சமும் இறக்குமதித் தீர்வையாகப் பெறப்பட்டது. 1982 இல் விஸ்கி இறக்குமதி ரூபா 3 கோடி 36 லட்சமாகவும், பிராந்தி இறக்குமதி ரூபா 1 கோடி 19 லட்சமாகவும் அதிகரித்தன; எனினும், இதிலிருந்து சென்ற வருடத்தில் பெற்ற வருமானத்திலும் அரைவாசி வருமானமே (விஸ்கி ரூபா 1 கோடி 60 லட்சம்; பிராந்தி 2 கோடி 80 லட்சம்) பெறப்பட்டது.

சுங்கத் திணைக்களத்தால் கட்டுப்படுத்தப்பட்ட களஞ்சிய சாலைகளிலிருந்து மதுபான வகைகளைத் தீர்வையற்ற கடைத் தொகுதிக்கு எடுத்துச் செல்கையில் அவை இடைவழியில் கடத்தப்படுகின்றன என்பதற்கு உறுதியான சான்றுகள் உள்ளன. எனினும், இவை தீர்வையற்ற கடைத் தொகுதிக்குக் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டன என்பதனை நிரூபிப்பதற்கு ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படுவதனால் எத்தகைய நடவடிக்கையும் எடுக்க இயலாதுள்ளது.

1982 இல் இலங்கைக்கான விஸ்கி விற்பனை 25,000 பெட்டிகளிலிருந்து 48,000 பெட்டிகளாக அதிகரித்திருப்பதாக ஐக்கிய இராச்சிய ஸ்கொச் விஸ்கி சங்கம் தெரிவிக்கின்றது. ஆனால், தீர்வையற்ற வர்த்தகத் தொகுதிக்கு வெளியில் உள்ள வர்த்தகர்கள் இதனையிட்டுச் சந்தோஷம் அடையவில்லை. தீர்வையற்ற கடைகளில் இத்தகைய மதுபானங்களின் விற்பனை தீவிரமாக வீழ்ச்சி அடைந்துள்ள போதிலும், இவர்களது விற்பனை அதிகரிக்கவில்லை என இவ் வர்த்தகர்களது புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

தீர்வையற்ற கடைத்தொகுதிக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் சட்டரீதியற்ற முறையில் வெளியேறுவதனால், அரசாங்கம் பல லட்ச ரூபா வருமானத்தை இழக்கின்றது. வெளிநாட்டுச் செலாவணியுடன் கடவுச் சீட்டு வைத்திருப்போரை அடைய வேண்டிய பொருட்கள் இறுதியில் திறந்த சந்தையை அடைகின்றன. இதன் விளைவாக, வழமையான இறக்குமதித் தீர்வையைச் செலுத்திப் பொருட்களை இறக்குமதி செய்த வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். சட்டரீதியற்ற வழியில் திறந்த சந்தையை அடைகின்ற தீர்வையற்ற பொருட்களிலிருந்து ஏற்படுகின்ற போட்டியே இதற்குக் காரணமாகும். இதுகாலவரையும் இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த வர்த்தகர்கள் தற்பொழுது தீர்வையற்ற பொருட்களைப் பெற்று, விற்பனை செய்வதனை இலகுவான வழி எனக் கண்டுள்ளனர்.

1984 இல், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான ரகங்களிலிருந்து கிடைக்கின்ற வரி வருமானம் குறைவடைந்துள்ளது; தீர்வையற்ற மதுபானங்களின் போட்டியே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. இதன் விளைவாக, அரசாங்கம் ரூபா 9 கோடி நட்டம் அடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, பிரதானமாக வசதி குறைந்தோரால் நுகரப்படுகின்ற தென்னஞ் சாராயத்தின் விலை வீற்றர் 3 ரூபாவிலிருந்து 6 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது; வெளிநாட்டு மதுபான வகைகளிலிருந்து பெறுகின்ற மதுபான வரியில் ஏற்பட்டுள்ள வருமான வீழ்ச்சியை சரிக்கட்டுவதற்கே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் தொலைக் காட்சிப்பெட்டியுடன் போட்டியிடவும் ஒரு சுதேச டி. வி. வன்கலக் கைத் தொழிலைக் கட்டியெழுப்பவும் முயன்று வரும் உள்நாட்டுக் கம்பெனியான சீடில்ஸ் டி. வி. கைத்தொழில் லிமிட்டெட்டின் தலைவர், தீர்வையின்றி இறக்குமதி செய்யப்படும் தொலைக்காட்சிப்பெட்டிகள் உள்நாட்டுச் சந்தையில் கிடைப்பதையும், இத்தகைய இறக்குமதிகள் உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு ஏற்படுத்தும் பயமுறுத்தலையும் சுட்டிக் காட்டியுள்ளார். தீர்வையற்ற கடைத் தொகுதியில் 1984 ம் ஆண்டு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்குச் சிறிதளவு ஆறுதல் அளித்திருப்பதாகத் தோன்றுகிறது.

சீடில்ஸ் தலைவர் மேலும் கூறுகிறார்:

"முன்பு நாங்கள் எதிர்நோக்கிய மிகப்பெரிய பிரச்சினைகளில் ஒன்று, இறக்குமதி செய்யப்பட்ட டி. வி. பெட்டிகளிலிருந்து எங்களுக்குத் தோன்றிய போட்டியாகும். இத் தொலைக்காட்சிப்பெட்டிகள் கிட்டத்தட்ட தீர்வையற்ற விலைகளில் பகிரங்க சந்தைக்கு எப்படியோ வந்து சேர்ந்துவிட்டன. இது, குறிப்பாக 1983 ம் ஆண்டின் முடிவில் சந்தைக்கு அறிமுகஞ் செய்யப்பட்ட எங்களுடைய 20" மாதிரிப்பெட்டியின் விற்பனைகளைப் பாதித்தது. ஆண்டின் ஆரம்பத்தில் எங்கள் வசமிருந்த கையிருப்புக்களில் பெரும்பகுதி இந்த மாதிரிப் பெட்டிதான்."

"இந்தச் சந்தர்ப்பத்தில், 1984 ம் ஆண்டு முடிவில் தீர்வையற்ற கடைத் தொகுதியில் அதிகாரிகள் அதிக கண்டிப்பான கட்டுப்பாடுகளை அமுல் செய்தமை உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு ஒரு தெளிவான வரப்பிரசாதமாக இருந்ததென்பதை நான் சொல்ல வேண்டும். மாறிய நிலைமைகள் எங்களுடைய விற்பனைகள் குறிப்பிடத்தக்கவாறு அதிகரிக்க உதவின."

1984 ஆண்டு தொடக்கத்தில் இந்தக் கம்பெனிக்கு 1 கோடி 33 இலட்சம் ரூபாவரை பெறுமதியுள்ள கையிருப்புகளும் 1 கோடி 13 இலட்சம் ரூபாவரை தீர்க்கப்படாதிருந்த கடன்களும் பெருஞ்சுமையாயிருந்தன. விற்பனையாகாத சாமான்கள் இப்படிக் குவிந்ததால், தொழிற்சாலையைக் குறைவாக உபயோகிக்க வேண்டிய ஒருநிலைமை தோன்றியது. அதனால் நிறுவனத்தின் மேந்தலைச் (பொதுச்) செலவுகளைச் சமாளிக்க முடியவில்லை. கடந்த வருடத்தில் 11 இலட்சம் ரூபாவாயிருந்த கடன் மீதான வட்டி இவ்வருடம் 30 இலட்சம் ரூபாவாக அதிகரித்தது. 1984 ஆண்டில் விற்பனையாகாத கையிருப்புகள் மீது செலுத்தியிருக்க வேண்டிய வட்டியின் காரணமாகவே இந்த அதிகரிப்பு ஏற்பட்டது.)

எத்தனையோ கட்டுப்பாடுகள் இருந்து வந்த போதிலும், சரக்குகள் கள்ளத்தனமாக வெளியேறுவதைத் தடுக்க முடியவில்லை. இன்று கூட தீர்வையற்ற கடைத் தொகுதிக்கென்றே வரவழைக்கப்பட்ட பல்வேறு ஆடம்பரச் சாமான்கள் உள்நாட்டுச் சந்தையில் கிடைக்கின்றன. கொழும்பு மாநகரிலுள்ள சில நேர்மையற்ற வியாபாரிகளும், கடைச் சொந்தக்காரர்களும் இக் கடைத் தொகுதியிலுள்ள எந்தக் குறிப்பிட்ட சாமானையும் சற்றே உயர்ந்த விலையில் விற்கத் தயாராயிருக்கிறார்கள். அவர்கள் கூறும் இந்த விலைகள் உத்தியோக பூர்வமாக 100 சதவிகிதத் தீர்வை கூட செலுத்தப்பட்ட அச்சாமான்களின் விலைகளைவிட அதிக கவர்ச்சியூட்டுவனவாயிருக்கின்றன. அவர்களில் சிலர் கிடைக்கக்கூடிய பொருள்களின் பட்டியலையும் பகிரங்கமாக வைத்திருக்கிறார்கள்; அப்பொருள்களில் வியாபாரஞ் செய்யும் தீர்வையற்ற கடைத்தொகுதியிலிருந்து வழங்கப்பட்ட ஒரு பற்றுச்சீட்டு (விலைப்பட்டி) யுடன் அப்பொருள்கள் ஒப்படைக்கப்படுவதற்கு ஏற்பாடு கூடச் செய்கிறார்கள். தீர்வையற்ற சாமான்களில் நடைபெறும் இந்தச் சட்ட விரோதமான கள்ளக் கடத்தலையெதிர்த்து உள் நாட்டு உற்பத்தியாளர்கள் ஆட்சேபனை கிளப்பியுள்ளனர். ஏனென்றால், இக் கள்ள வியாபாரத்தால் அவர்களுடைய வியாபாரம் பாதிக்கப்படுவதை அவர்கள் காண்கிறார்கள். இறக்குமதி செய்யப்படும் பொருட் கூறுகள் மீதும் தங்களுடைய உற்பத்திப் பொருள்கள் மீதும் தாங்கள் தீர்வை செலுத்துவதாகவும், தாங்கள் போட்டியிடுவதெனில் இந்தத் தீர்வையில் ஒரு கழிவைப் பெறத் தங்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் முறையிடுகிறார்கள்.

**ரமதா ரினையசன்ஸ் ஹோட்டலில் புதிய வளவு**

தீர்வையற்ற கடைத் தொகுதியில் சட்ட விரோத நடவடிக்கைகள் அதிகரித்து வந்ததனால், அக்கடைத் தொகுதியைப் பல்வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டுமெனக் காலத்துக்குக் காலம் பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டன. முதலாவது யோசனை கொள்ளுப்பிட்டியிலுள்ள அதன் இருப்பிடத்திலிருந்து நீட் அவெனியூவிலுள்ள பழைய ஹவ்லொக் குதிரைப் பந்தய மைதானத்துக்கு மாற்றிவிட வேண்டுமென்பது. அங்கே அதிநவீன வசதிகளுடன் ஒரு கடைத் தொகுதியை அமைக்கத் திட்டங்களும் இருந்தன. கட்டுநாயக்காவில் தீவிர விமான நிலையப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளையும் அமுல் செய்ய முடியுமாதலின், தீர்வையற்ற கடைத் தொகுதியை அங்கு மாற்றிவிட வேண்டுமென்பது இன்னொரு யோசனை. கொள்ளுப்பிட்டியில் விதிகளைக் கண்டிப்பாக அமுல் செய்ய ஒரு சுங்க அதிகாரி முயன்று, அவருடைய முகத்தில் திராவகம் வீசப்பட்ட சம்பவத்துக்குப் பின்பே இவ்விடம் பலமாகச் சிபார்சு செய்யப்பட்டது.

இதற்கிடையில் 'ரமதா ரினையஸான்ஸ்' என்னும் அமெரிக்க ஹோட்டலினதும், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினதும் ஒரு கூட்டு முயற்சியான ''டிரான்ஸ் ஏஸியன் ஹோட்டல்ஸ் லிமிட்டெட்'' டில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தீர்வையற்ற கடைத் தொகுதி ஆகிய இரண்டும் வர்த்தக-கப்பற்றுறை அமைச்சின் கீழிருப்பதால், தீர்வையற்ற கடைத் தொகுதியை இந்த ஹோட்டலின் பிரயாண நிலையத்துக்கு (இது இக்கட்டடத்திலேயே அமைந்துள்ளது) மாற்றுவதென்று முடிவு செய்யப்பட்டது. இக்கட்டடம் கிட்டத்தட்ட சுங்கப்பகுதிக்கென்றே கட்டப்பட்டதாகத் தோன்றுகிறது. ஏனெனில் காற்றைக்குளிரூட்டும் சாதனம் கட்டடத்தின் மத்தியில் அமைந்துள்ளது; நகர்படிகளைக் கொண்டுள்ளது; கொள்ளுப்பிட்டியிலுள்ள தீர்வையற்ற கடைத் தொகுதியிலுள்ளதைவிட அதிக இடவசதி இங்குள்ளது. இந்தப் புதிய வளவில் 49 கடைகளுக்குப் போதிய இடவசதி இருக்கிறது. ஆனால், 1983 ம் ஆண்டு ஜுன் மாதத்தில் இட மாற்றம் நடைபெற்றபோது கொள்ளுப்பிட்டியிலுள்ள 42 கடைகளில் 40 இவ் வளவுக்கு மாறின.

தீர்வையற்ற கடைத் தொகுதியின் முகாமைப் பொறுப்பு ''சிலோன் ஹிப்பிங் லைன்ஸ்'' என்னும் கம்பெனியின் கையிலேயே ஆரம்பத்திலிருந்து தொடர்ந்து இருந்து வருகிறது. இக்கம்பெனி உணவு-கப்பற்றுறை அமைச்சின் கீழுள்ள இலங்கைக் கப்பற்றுறை கூட்டுத்தாபனத்தின் ஓர் உப நிறுவனமாகும். புதிய வளவில் அறவிடப்படும் வாடகை ஒப்பீயல்ரீதியாக உயர்வாயுள்ளதைக் கீழே உள்ள அட்டவணையில் காணலாம்:

புதிய வளவில் அறவிடப்படும் வாடகை பழைய வளவில் அறவிடப் பட்டதைப்போல் கிட்டத்தட்ட இரு மடங்காயுள்ளது. கடைத் தொகுதியில் மின்சாரச் செலவும், கடைக்காரர்களிடையே அவர்களுடைய கடைகளின் தளப் பரப்புக்கேற்பச் சமமாகப் பிரிக்கப்படுகிறது.

பொலீஸாரும் சுங்கப் பகுதியினரும் பாதுகாப்புச் சேவைகளை வழங்குகின்றனர். இதே சமயத்தில் ஒரு தனியார் பாதுகாப்புக் கம்பெனியும் பிரவேச வாசலில் காவலாளிகளை அமர்த்துகின்றது. சிலோன் ஹிப்பிங் லைன்ஸ் நியமித்துள்ள ஒரு தொடர்பு அதிகாரியும், மற்றும் அலுவலர்களும் பிரவேசக் கட்டணங்களைப் பெறுவதுடன் கடைத் தொகுதியிலுள்ள மற்றும் நிர்வாகப் பணிகளையும் கவனிக்கின்றனர்.

(19 - ம் பக்கம் பார்க்க)

# இந்திய கொள்வனவாளர்கள்

இந்தியாவுக்குப் போய்ச் சாமான் வாங்கிக் குதூகலிக்கும் கோரிக்கையில் ஈடுபடும் சுகானுபவம் ஒரு சில அதிர்ஷ்டமுள்ள இலங்கையர்களின் வரப்பிரசாதமாகவே எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. சில வகை வியாபாரிகள் உட்படப் பல்வேறு வாழ்க்கைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் இந்த ஒருவழிப் போக்குவரத்தில் பல்லாண்டுகளாக ஈடுபட்டு வந்துள்ளனர். கொழும்பில் தீர்வையற்ற கடைத் தொகுதி திறக்கப்பட்டதன் விளைவாக, இந்தியாவுக்குச் செல்வோரின் தொகை திடீரெனக் குறைந்துவிட்டது.

கொழும்பு தீர்வையற்ற கடைத் தொகுதி திறக்கப்பட்டதற்குப்பின்பு பாக்கு நீரிணைக்கு அப்பாலிருந்து இந்தியர்கள் இடையறாது வந்து கொண்டிருந்தனர். அவர்களுடைய ஒரேநோக்கம் கொழும்பில் தீர்வையற்ற சாமான்களை வாங்குவதேயாகும். இந்தக் கடைத் தொகுதி திறக்கப்பட்ட சமயத்தில், இந்தியர்கள் சொந்தச் செலவுகளுக்காக 1,250 அமெரிக்க டொலர்களை வெளியே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆனால் 1983ம் ஆண்டு ஜூன் மாதமளவில் இத்தொகையை இந்திய அரசாங்கம் 300 அமெரிக்க டொலர்களாகக் குறைந்துவிட்டது. இதன் விளைவாக, பொருட்களை வாங்குவதற்கென இந்தியாவிலிருந்து வருவோரின் எண்ணிக்கை திடீரென வீழ்ச்சியுற்றது.

தீர்வையற்ற கடைத் தொகுதியில் சாமான் வாங்குவதற்காகக் கொழும்புக்கு வந்த இந்தியர்களை மிகவிரிவான அடிப்படையில் நாலுவகையாகப் பிரிக்கலாம். (1) மாநகரங்களிலிருந்து வந்த பணக்கார இந்தியர்கள் (2) நடுத்தர வகுப்பையும் தொழிலாளர் வகுப்பையும் சேர்ந்த இந்தியர்கள் (3) பாடசாலைக் குழந்தைகளும், ஆசிரியர்களும் (4) 'இரகசியத்தூதர்'களாகச் செயலாற்ற தென்னிந்தியாவிலுள்ள வியாபாரிகளால் கூலிக்கு அமர்த்தப் பட்டவர்கள்.

இந்தியாவிலிருந்து வந்த மிகப் பெருந்தொகையினர் நாலாவது வகையைச் சேர்ந்தவர்கள். சொற்ப தொகையான ஜீவனப் படியுடன் அவர்கள் இலங்கைக்குப் பயணமாவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. வியாபாரிகளின் இரகசியத் தூதர்களாக அவர்கள் பாக்கு நீரிணைக்கு அப்பாலிருந்து ஒன்றில் புகைவண்டி, கப்பல் மார்க்கமாக அல்லது விமான மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். வியாபாரிகள் அவர்களுக்கு ஊக்கமூட்டுவதற்காகச் சிறு தொகைப்பணத்தை வழங்கினர். அவர்கள் பொதுவாகப் பரமஏழைகளாகவும் படிப்பறிவற்றவர்களாகவுமே தோன்றினர். பலருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. மாநகர வாழ்க்கை முறைகளைச் சற்றும் அறியாதவர்கள். கொழும்பில் அவர்கள் தீர்வையற்ற கடைத் தொகுதிக்கருகிலுள்ள நடைபாதைகளிலும் சுற்றியுள்ள கூடங்களிலும் மோசமான உடைகளுடன் உட்கார்ந்திருப்பதையும், கடைத் தொகுதிக்கு அண்மையில் தங்களுடைய உணவைச் சமைத்துக் கொண்டிருப்பதையும் கூட காணக்கூடியதாயிருந்தது. அவர்களில் ஒருவர் ஏராளமான தீர்வையற்ற சாமான்களைத் தலையில் சுமந்த வண்ணம், முன்னால் வந்துகொண்டிருக்கும் சகல வாகனங்களையும் கவனிக்காதவராய், தீர்வையற்ற கடைத் தொகுதிக்கு எதிரிலுள்ள சுறுசுறுப்பான வீதியைக் கடக்க முயல்வது அந்நாட்களில் ஒரு சர்வசாதாரணமான காட்சியாக இருந்தது. உல்லாசப் பயணிகளாக இலங்கைக்கு வந்த இந்தியர்களில் பெரும்பான்மையோர் இவ்வகையைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்.

1982ம் ஆண்டின் முதல் ஏழுமாதங்களில் உல்லாசப் பயணிகளாக இங்கு வந்து சேர்ந்தவர்களைப் பற்றிய புள்ளி விவரங்களின்படி, ஆசிய உல்லாசப் பயணிகளாக 79,692 பேர் இந்நாட்டுக்கு விஜயம்செய்தனர். இதற்கு முந்திய வருடத்தின் இதே காலத்தில் இலங்கைக்கு வந்த ஆசிய உல்லாசப் பயணிகளின் தொகை 52, 406 தான் என்பது கவனிக்கத்தக்கது 1982ம் ஆண்டில் இங்கு அதிக தொகையாக வந்து சேர்ந்தவர்கள், கொழும்பு தீர்வையற்ற கடைத் தொகுதியில் சாமான் வாங்குவதற்காக இந்தியாவிலிருந்துவந்த உல்லாசப் பிரயாணிகளேயாவென இனங் காணப்பட்டது. 1981ம் ஆண்டு முழுவதும் இலங்கைக்கு ஆசிய உல்லாசப் பயணிகளாக வந்தவர்களின் தொகை 89,000; ஆனால், 1982ம் ஆண்டில் இத்தொகை 1,35,000க்கு அதிகரித்துவிட்டது. 1981ம் ஆண்டில் உல்லாசப் பயணிகளாக வந்தவர்களில் 13 சதவிகிதத்தினர் மட்டுமே இந்தியர்கள். ஆனால் 1982ம் ஆண்டில் இவர்களின் விகிதம் 21 சதவிகிதத்துக்கு உயர்ந்து விட்டது. 1983ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வந்த ஆசிய உல்லாசப்பயணிகளின் தொகை ஏறக்குறைய 1,00,000, பின்னர், இத் தொகை திடீரென வீழ்ச்சியடைந்தது.

உல்லாசப் பிரயாணிகளாக இங்கு வந்த இந்த இரகசியத் தூதர்கள் பாக்கு நீரிணையின் இருபக்கங்களிலுமுள்ள வியாபார சிண்டிகேட்டுகளுக்காகச் செயலாற்றியதில் ஒரு கிரமமான முறை இருந்தது. அவர்களுடைய கப்பல் அல்லது விமான டிக்கெட்டுகளுக்கும் சொந்தச் செலவுகளுக்குத் தேவையான பணமும் இந்திய வியாபாரிகளால் வழங்கப்பட்டன; இந்தக் கோடியில் செயற்பட்டோர் அவர்களுக்குப் போக்குவரத்து, போசனம், தங்குமிட வசதிகள் ஆகியவற்றை வழங்கினர். கொள்வனவு செய்யப்படவேண்டிய சாமான்களின் பட்டியலுடன், ஒருகுறிப்பிட்ட கடைக்குப் போகும்படி அறிவுறுத்தலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அவர்களுக்காகச் சகல நடைமுறைகளும் கவனிக்கப்பட்டன. அவர்கள் செய்ததெல்லாம் சாமான்களைச் சேகரித்துக் கொண்டு திட்டப்படி இந்தியாவுக்குத் திரும்பியதுதான். அங்கே தங்களுடைய அதிபதிகளிடம் சாமான்களைக் கையளித்துவிட்டு, தங்களுடைய சேவைகளுக்காக ஒரு சிறு தொகைப் பணத்தைப் பெற்றனர். பல சந்தர்ப்பங்களில் இந்நபர்கள் ஊழல்களில் சம்பந்தப்பட்டதாக ஒன்றில் தீர்வையற்ற கடைத் தொகுதியிலோ அல்லது துறைமுகத்திலோ சுங்கப்பகுதி அதிகாரிகளால் பிடித்து வைக்கப்பட்டனர். அவர்கள் புரிந்த மிகப்பொதுவான குற்றங்களின் சில பின்வருமாறு.

(1) கட்டுநாயக்காவிலுள்ள கொழும்பு சர்வதேச விமானநிலையத்திலிருக்கும் சுங்கப்பகுதியினர் கைவசம் கொஞ்சமும் பணமின்றி இந்தியர்கள் நாட்டுக்குள் பிரவேசிப்பதைக் கண்டனர். தங்கள் வசம் அமெரிக்க டொலர்கள் இருப்பதாகப் பொய்யான உறுதியறிக்கைகளைச் செய்துள்ளனர். அத்துடன், இந்திய, பாகிஸ்தானிய நாணயங்களை நாட்டுக்குள் கொண்டுவர அவர்கள் முயன்றதாகவும் கண்டுபிடிக்கப் பட்டது.

(2) பணம் கொடுக்கப்பட்டதென்ற பொய்யான புறக்குறிப்புக்களைக் கொண்ட கொள்வனவுகளுக்கான பற்றுச்சீட்டுக்களைக் காட்டிவிட்டு, வெளியில் கால்வைக்க முயன்ற இந்தியர்கள் தீர்வையற்ற கடைத் தொகுதிக்குள்ளே பிடிபட்டனர். விசாரணைகள் நடத்தப்பட்டபோது, பணம் கொடுக்கப்பட்டதற்கு அத்தாட்சியாகக் கள்ள முத்திரைகளை வைத்திருக்கும் தரகர்கள் கடைத் தொகுதியில் இந்தியர்களைச் சந்தித்துப் பேசி, காசாளரின் கருமபீடத்தைத் தாண்டி, விற்பனைச் சிப்பந்திகளைக் கொண்டு கொள்வனவுப் பற்றுச் சீட்டுக்களை எழுத வைத்து, பற்றுச்சீட்டுக்களின் மேல்

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வையற்ற கடைத் தொகுதியிலுள்ள கடைச் சொந்தக்காரர்களிடம் அத்தொகுதியில் நிகழும் நடவடிக்கைகளை எவ்வாறு அதிக பயனுள்ளவையாக மாற்ற முடியும் என்பது பற்றி யோசனைகளைத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டது. அவர்களில் கிட்டத்தட்ட ஒவ்வொருவரும் கூறிய யோசனை இதுதான். கடையில் வாங்கிய சாமான் உடனுக்குடன் ஒப்படைக்கப்படும் வசதியும், மறுபந்தகப் பத்திரம் பெறுவதற்கு, முன்பிருந்து வந்த வசதியும் மீண்டும் ஏற்படுத்தப்படவேண்டுமென்று அவர்கள் யோசனை கூறினர். எனினும், கடந்த கால அனுபவத்தைக் கவனிக்கும் போது, இந்தக் கட்டுப்பாடுகளில்லாமல் ஊழல் பழக்கங்களைக் கட்டுப்படுத்துவது கடினமென்றும், அத்துடன் இத்தீச் செயல்கள் வியாபாரிகளின் அல்லது அவர்களுடைய ஊழியர்களின் உதவியுடனே அல்லது தீர்வை விஷயத்தில் அவர்களுடைய பராமுகத்துடனே நடந்து வந்தனவென்றும் அதிகாரிகள் சாதிக்கின்றனர். 1981ம் ஆண்டில் தீர்வையற்ற கடைத் தொகுதியை அமைத்ததன் குறிக்கோள்களில் ஒன்று, வெளிநாடுகளிலிருந்து தாயகம் திரும்பும் இலங்கையர்களும், இலங்கைக்கு வரும் வெளிநாட்டினரும். மற்றப்படி வேறு நாடுகளில் செலவழித்திருக்கக் கூடிய அந்நிய நாணயத்தை இலங்கைக்குத் திசை திருப்பிவிடுவதாகும். இன்னொரு குறிக்கோள் வர்த்தகத்துக்கு ஆக்கம் அளிப்பதும், வெளிநாட்டு நாணயத்தில் பெரும் பகுதியைச் சம்பாதிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பேருதவியாயிருப்பதுமாகும். இக்குறிக்கோள்கள் நாளதுவரை எந்த அளவுக்குச் சாதிக்கப்பட்டுள்ளனவென்று பணக் கணக்கில் அளவிடுவது சுலபமான காரியமல்ல. ஆனால், தெளிவாகத் தெரிவதென்னவென்றால், ஆரம்பத்தில், வெளிநாடுகளிலிருந்து தாயகத்துக்குத் திரும்பிய இலங்கையர்களாலும், இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியர்களாலும் வெளிநாட்டு நாணயத்தில் பெரும்பகுதி தீர்வையற்ற கடைத் தொகுதிக்குத் திருப்பி விடப்பட்டது. எனினும், இக்கடைத் தொகுதியிலும் இந்தியாவிலும் அதிக ஒழுங்கு விதிகள் அமுல் செய்யப்பட்டதுடன் இந்நிலைமை மாறிவிட்டது. இப்போக்கு முறையே இக்கடைத் தொகுதியின் வெளிநாட்டு நாணயச் சம்பாத்தியங்களை மோசமாகப் பாதித்தது.

இன்னும் பூரணமாக மதிப்பிடப்படாதது என்னவென்றால், தீர்வையற்ற கடைத் தொகுதியின் வியாபார நடவடிக்கைகள் எந்த அளவுக்கு ஓர் அத்தியாவசிய வசதியான தாராளமாக்கப்பட்ட வர்த்தகத்தின் துஷ்பிரயோகங்களின் ஒரு பாகமாகியுள்ளன வென்பதும், இக்கடைத் தொகுதியின் வியாபாரத்தில் ஒரு பகுதி எவ்வளவு தூரத்துக்கு ''இரகசியப் பொருளாதாரத்தின்'' நடவடிக்கைகளுக்குள் உறிஞ்சப்பட்டுள்ளது என்பதுமாகும். • ஓர் ''இரகசியப்'' பொருளாதாரத்துக்குள் அல்லது ''கறுப்புப்'' பொருளாதாரத்

பணம் கொடுக்கப்பட்டதாகக் கள்ள முத்திரைகளை ஒட்டி விடுகின்றனரென்று தெரிய வந்தது.

(3) துறைமுகமொன்றின் வழியாக நாட்டைவிட்டு வெளியேற முயன்ற இந்தியர்கள் தாங்கள் வாங்கிய தீர்வையற்ற சாமான்களை வைத்திருக்கவில்லை. அபராதம் விதிக்கப்பட்டபோது, அந்த அபராதத்தைச் செலுத்த இவர்களிடம் பணம் இருக்கவில்லை.

(4) உத்தியோக பூர்வமாக அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களுடன் தங்கக்கட்டிகளையோ அல்லது இங்கு விற்பதற்காக இந்தியப் பொருள்களையோ நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற இந்தியர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

எனினும், இந்த இந்தியர்கள் மற்றும் உல்லாசப்பிரயாணிகளைப்போல நாட்டின் பொருளாதாரத்துக்கு எந்த மேலதிக நன்மைகளையும் கொண்டுவரவில்லை. தீர்வையற்ற சாமான்களுக்கு அவர்கள் செலுத்திய பணத்துக்குப் புறம்பாக அவர்கள் இங்கு செலவிட்ட பணம் மிகக்குறைவு. அவர்களில் பெரும்பாலோர் மிக மலிவான உணவுடனும் வாகனப் போக்குவரத்தோடும் இருப்பிடத்துடனும் காலந்தள்ளினர். சராசரியாக அவர்கள் நாளொன்றுக்கு 7 அமெரிக்க டொலர்களே செலவிட்டனர். ஆனால், ஆசியப்பிராந்தியத்திலிருந்து வந்த மற்றும் உல்லாசப் பயணிகள் சராசரியாக நாளொன்றுக்குச் சுமார் 50 அமெரிக்க டொலர்களைச் செலவழித்தனர்.

இந்தியப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளின்படி, 1983 ம் ஆண்டில் ஜூன்மாதம்வரை கொழும்பிலுள்ள தீர்வையற்ற கடைத்தொகுதியில் சாமான் வாங்குவதற்காகத் தினமும் சுமார் 800 பிரயாணிகள் சென்னை விமான நிலையம் வழியாகச் சென்றனர். அவர்கள் விரும்பி வாங்கிச் சென்ற பொருள்களில் ஒன்று, வீடியோ கஸட் றெகார்டர்கள். நாளொன்றுக்கு ஏறக்குறைய 100 றெகார்டர்களை இந்தியர்கள் சராசரியாக வாங்கினர். இந்தியப் பாடசாலைக் குழந்தைகள் குறிப்பாக 9 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட சிறுமியரும் தீர்வையற்ற கடைத் தொகுதியில் பெருமளவில் சாமான்களை வாங்கினர். அவர்கள் கொண்டு சென்றவை நறுமணம் பூச்சுகளும் பொம்மைகளுமாகும்; இதேவேளை பையன்கள் கைக்கடிகாரங்களையும் கமராக்களையும் வாங்கினர். மற்றும் இந்தியர்கள் பலவகையான மின்சார உபகரணங்களில் அதிக சிரத்தை காட்டினர்.

இந்திய அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவந்த கட்டுப்பாடுகளையும், பின்னர் கொழும்பில் நடைபெற்ற இனக்கலவரங்களையும் அடுத்து, ஆசிய உல்லாசப் பயணிகளின் தொகை குறைந்துவிட்டது. மே மாதத்திலிருந்த தொகையான ஏறக்குறைய 21,000 1983 செப்டம்பரில் ஏறக்குறைய 3,000 க்குக் குறைந்துவிட்டது. தீர்வையற்ற கடைத் தொகுதிக்குள் வரும் மற்றும் வெளிநாட்டினரின் தொகையும் திடீரெனக் குறைந்தது. 1983 ம் ஆண்டு முற்பகுதியில் இவர்கள் தொகை மாதமொன்றுக்கு ஏறக்குறைய 20,000 ஆக இருந்தது. இது 1984 ம் ஆண்டில் மாதமொன்றுக்கு ஏறக்குறைய 3,000 ஆக வீழ்ச்சியுற்றது: இதே வேளை தீர்வையற்ற கடைத் தொகுதியிலுள்ள 50 சதவிகிதத்துக்கு மேற்பட்ட கடைகளில் மொத்தவியாபாரம் 60 சதவிகிதத்துக்குமேல் வீழ்ச்சியடைந்தது. சாமான் வாங்கவரும் இந்தியர்களின் தொகை வீழ்ச்சியுற்றதுடன் கொழும்பிலுள்ள தீர்வையற்ற கடைத் தொகுதியின் வியாபாரத்தில் பெரும்பகுதி நின்றுவிட்டது.

துக்குள் ஈட்டப்படும் வருமானங்கள் ஒன்றில் வரி வசூல் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படாதிருக்கின்றன. அல்லது அவை நாட்டின் தேசியக் கணக்குகளில் பிரதிபலிப்பதில்லை. ''உத்தியோக சார்பற்ற'' முறையில் அல்லது ''சமாந்தரமாக'' நடைபெறும் இத்தகைய பொருளாதார நடவடிக்கைகளின் விளைவாக, நாணய மாற்றுக் கட்டுப்பாட்டு விதிகள் மீறப்படுவதுடன், வரி ஏய்ப்பும் பெருமளவில் நடைபெறுகிறது. இது முறையே கிடைக்கும் வரிச் சலுகைகளின் பெறுமதியைக் குறைத்து, முழுப் பொருளாதாரத் திட்டமிடல் முறையைக் குழப்பி, பொருளாதாரத்துக்குப் பல்வேறு பாதகங்களைச் செய்கின்றது. இந்தப் போக்கு தகவல் தொடர்புச் சாதனங்களில் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ''சன்'' பத்திரிகையின் சமீபத்திய இதழொன்றில் வெளிவந்த இந்த ஆசிரியத் தலையங்கம் கூறுவதாவது.

> ''ஆட்சியிலுள்ள அரசாங்கம் தேசியப் பாதுகாப்பு என்னும் சீழ்பிடித்த இரணத்தைக் கவனித்துக் கொண்டிருக்கையில், சீழ் பிடித்த புண்ணொன்றிலிருந்து உணவைப் பெறும் ஒட்டுண்ணிகளைப் போல, நாட்டுச் செல்வ வளத்தை அல்லது அதில் எஞ்சியுள்ளதைச் சுருட்டிக் கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள்....

ஆசியாவுக்கு வரும் பிரயாணிகள் நாட்டுக்குள் போதை வஸ்துக்களையும் மற்றும் அபாயகரமான மருந்துச் சரக்குகளையும் கடத்திக் கொண்டுவரும் அதே சமயத்தில் தங்கத்தையும் பெருந்தொகையான வெளிநாட்டு நாணயத்தையும் அத்துடன் நவரத்தினங்களையும் நாட்டுக்கு வெளியே கடத்திச் செல்லும் சம்பவங்களைச் சுங்கப் பகுதியினர் தினமும் கண்டுபிடித்து வருவதைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இதே வேளை அதிக சக்திவாய்ந்த - நல்ல கட்டுப்பாட்டுடன் செயலாற்றக் கூடிய ஸ்தாபனங்கள் - அரசாங்க சாதனத்தை ஆகக் கூடிய அளவுக்குப் பயன் படுத்திக்கொண்டு மாஃபியா பாணியில் மும்முரமாக வேலை செய்யும் சூத்திரதாரிகள் இருப்பதாகத் தோன்றுகிறது. மக்களோ மோசடிக்கார வர்த்தக அயோக்கியர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் விட புலிகளைத் தேடிப்பார்ப்பதில் அதிக சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

சுங்கப் பகுதியினர் கூறுகிறபடி, இந்தியாவுக்குத் தங்கத்தைக் கள்ளத்தனமாகக் கடத்திச் செல்லும் வேலையைப் பெரும்பாலும் புறக்கோட்டையையும் செட்டியார் தெருவையும் சேர்ந்த வியாபாரிகளே செய்கிறார்கள். இப்படிக் கடத்தப்படும் தங்கத்தை அவர்கள் தென்னிந்தியாவில் உடன் சொத்தாக மாற்றி வருகிறார்கள். ஒருவேளை அவர்கள் இன்னோர் இனக்கலவரம் மீண்டும் வெடிக்கலாமென்று அஞ்சியும், தென்னிந்தியாவில் தங்களுக்காகக் கசியும் அனுதாபத்தைப் பயன்

## இலங்கை பாஸ்போர்ட் வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் விற்கப்படவேண்டிய பொருள் அளவுகளின் பட்டியல்

| | |
|---|---|
| 1. மின்சாரப்பொருள்கள் அல்லது இலந்திரன் பொருள்கள் | 1 |
| 2. மின் விசிறிகள், மேசைகள், பரவுபலகை, அல்லது பீடம் | 1 |
| 3. கஸெட் நாடாக்கள் | 6 |
| 4. வீடியோ கஸெட் நாடாக்கள் | 3 |
| 5. பாக்கெட் ரேடியோ | 1 |
| 6. டி. வி. | 1 |
| 7. கால்குலேட்டர் | 1 |
| 8. காஸ் குக்கர் | 1 |
| 9. பிரஸர் குக்கர் | 1 |
| 10. ரைஸ் குக்கர் | 1 |
| 11. இராப்போசன அடுக்குகள் | 3 |
| 12. கிளாஸ் உவைன் அடுக்கு | 3 |
| 13. வெட்டுக்கருவிகள் அடுக்கு (கத்திகள், கரண்டிகள், முள்கரண்டிகள் கொண்ட ஒவ்வோர் அடுக்கு) (1 அடுக்கு) | 6 |
| 14. தேநீர் அடுக்கு | 3 |
| 15. பவுண்டன் பேனக்கள் | 3 |
| 16. குமிழ் முனைப் பேனக்கள் | 3 |
| 17. சுவர்க்கடிகாரங்கள் | 1 |
| 18. கடிகாரம் (மேசை அல்லது அலாரம்) | 1 |
| 19. கேமரா | 1 |
| 20. விளையாட்டுக் கருவிகள் | 6 |
| 21. குடைகள் | 3 |
| 22. ஆடைகள் துண்டுகள் | 3 |
| 23. கம்பளிகள் | 6 |
| 24. சவர அலகுகள் | 6 |
| 25. பிலிம் சுருள்கள் | 1 |
| 26. சிறுபெட்டிகள் (பிரீப் கேஸ்) | 3 |
| 27. சூட் கேஸ்கள் | 7 |
| 28. கைக்கடிகாரங்கள் | 3 |
| 29. டாய்லெட் தயாரிப்பு | 3 |
| 30. டாய்லெட் சோப்பு | 2 |
| 31. டாய்லெட் பவுடர் | 2 |
| 32. டோர்ச் | 1 |
| 33. இசைக் கருவிகள் | 1 |
| 34. சாவி வளையங்கள் | 3 |
| 35. காற்றுப்பானைகள் | 1 |
| 36. டைப்ரைட்டர | 1 |
| 37. போட்டோ ஆல்பம் | 3 |
| 38. டெலிபோன் | 1 |
| 39. பாதணி | 3 |
| 40. பதிதட்டுகள் | 3 |
| 41. நிறுக்கும் தாரசு | 1 |
| 42. வெற்றிடக் குடுவை (வேக்குவம் பிளாஸ்க்) | 1 |
| 43. மூக்குக் கண்ணாடிச் சட்டங்களும் வில்லைகளும் | 3 |
| 44. புகைக்கும் குழாய்கள் | 3 |
| 45. சவர அடுக்குகள் (மின்சார) | 1 |
| 46. சவர அடுக்குகள் (மின்சாரமல்லாதது) | 2 |
| 47. கைப்பைகள் | 3 |
| 48. சிகரெட்டுகள் | 200 அல்லது 50 கருட்டுகள் |
| 49. 2 இரமமான அளவுள்ள உவைன் போத்தல்களும் ஒன்றரைலீட்டர் ஸ்பிரிட்டுகளும் பீயர் குவளைகள் (அரைப்பெட்டி) | |
| 50. கால்லீட்டருக்கு மேற்படாத டாய்லெட் நீரும் சிறு அளவில் வாசனைத் தைலமும் | |

* பட்டியலில் சேர்க்கப்படாத சகல பொருள்களும் வாடிக்கையாளர் ஒருவருக்கு ஒன்றுவீதம் விற்கப்பட வேண்டும். இந்த அளவுகளுக்குமேல் விற்கப்படும் சகல பொருள்களும் வாடிக்கையாளர் கப்பலேறும் அல்லது விமான மேறும் இடத்தில் மட்டும் ஒப்படைக்கப்பட வேண்டும்.

படுத்திக் கொண்டும், இந்த வியாபாரிகள் அங்கு கடைகளைத் 'திறந்திருக்கிறார்கள்; வீடுகளை வாங்கியிருக்கிறார்கள்; தென்னிந்தியாவுக்குக் கிரமமாக விஜயம் செய்கிறார்கள். அவர்களுடைய 'தூதர்கள்' அங்கு கொண்டு செல்வதில் ஒரு பங்கைப் பெறுகிறார்கள். இதற்காக அவர்களுடைய தூதர்களுக்கு வேடிக்கை விநோதங்களையும், வனப்புமிக்க இயற்கைக் காட்சிகளையும் கண்டு களிப்பதற்கான சுற்றுப் பயணங்கள் தென்னிந்தியாவுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன. இம் முயற்சியிலிருந்து கிடைக்கும் இலாபங்களில் எவ்வளவு நாடறிந்த பயங்கரவாத இயக்கத்துக்குப் போய்ச் சேர்கிறதென்பது வேறு விஷயம்.

வெளிநாட்டு நாணய மோசடியைப் பொறுத்தவரை, அதில் சம்பந்தப்பட்டவர்கள் வேறு வகையான வியாபாரிகளாவர். அவர்கள் இலங்கையர்கள்; தென்னிந்தியாவுடனல்ல, இங்குள்ள செல்வாக்குப்படைத்த அரசியல் பிரமுகர்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர்கள். இந்த வியாபாரிகளும் அரசியல்வாதிகளும் தொடர்ந்து ஒருவர் முதுகை மற்றவர் சொறிந்து வருகிறார்கள்.

பகிரங்க நடனக் கூத்துகளும், சூதாட்டங்களும் நடைபெறும் காஸினோக்கள் இந்த வெளிநாட்டு நாணய மோசடிகளுக்கு உபயோகிக்கப்பட்டு வருவதாகச் சுங்கப் பகுதியினர் தொடர்ந்து செய்தித் தொடர்புச் சாதனங்களுக்குச் சொல்லி வருகிறார்கள். எனினும், ஏன் சூழ்ச்சிக்கார வியாபாரிகளான எந்தத் திமிங்கிலங்களும், அல்லது ஊழல் மிகுந்திருந்த போதிலும் சக்தி

சதுர மீட்டர் ஒன்றின் வாடகை

| | பழைய வளவு (ஏறக்குறைய) | புதிய வளவு |
|---|---|---|
| அடித்தளம் | ரூ. 753.00 | ரூ. 1,300.00 |
| முதல் மாடி | ரூ. 550.00 | ரூ. 975.00 |
| 2ம் மாடி | ரூ. 403.00 | ரூ. 875.00 |
| 3ம் மாடி | ரூ. 387.00 | — |
| 4ம் மாடி | ரூ. 387.00 | — |

வாய்ந்தன வாயிருக்கும் இந்த ஸ்தாபனங்களுக்குப் பின்னாலுள்ள ஆட்களும் இன்னும் பிடிபடாமலிருக்கிறார்கள் என்ற 6 கோடி 40 இலட்சம் டொலர் பெறுமதியான கேள்வி எழுந்து நிற்கின்றது. நாணயப் பரிவர்த்தனைச் சட்டங்கள் இவ்விதம் மிகப் பகிரங்கமாய் மீறப்பட்டு வருமானால், இந்தக் காஸினோக்கள் தொடர்ந்திருந்து வர ஏன் அனுமதிக்கப்படுகின்றன? வரிகளிலும் மற்றும் சுங்க வருமானத்திலும் இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை அரசாங்கம் இழந்து வருகிறது. இந்தப்பணம் நீர் வசதியோ குடியிருப்பு வசதியோ மின்சார வசதியோ நல்ல பாதைகளோ ஆஸ்பத்திரிகளில் காயங்களுக்கும் புண்களுக்கும் கட்டும் துணிகளோ இல்லாது வருந்தும் சாதாரண மக்களின் நன்மைக்காகச் செலவிடப்பட வேண்டிய பணமல்லவா? இந்நிலையில் காஸினோக்கள் தொடர்வதேன் என்று கேட்கப்படுகிறது.

இது எமது சமூக - பொருளாதார - அரசியல் முறை முழுவதையும் ஒரு கேலிக் கூத்தாக்க வில்லையா? ஒரு பக்கத்தில் நேர்மையான, சட்டத்துக்குப் பணிந்து நடக்கும் குடிமக்கள் தங்கள் அன்றாட உணவுக்கு நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்க வேண்டியிருக்கிறது; வரிகளைச் செலுத்த வேண்டியிருக்கிறது; செலுத்த வேண்டியதை நேர காலத்தில் செலுத்தாவிட்டால் நீதிமன்றங்களில் தண்டிக்கப்படுகிறார்கள். மறுபக்கத்தில், மற்றவர்கள் - பெரும்புள்ளிகள் - சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, ஹொங்கொங் போன்ற இடங்களிலுள்ள வங்கிகளுக்கு வழியெல்லாம் சிரித்துக் கொண்டே போகிறார்கள். ஏன் இந்நிலை?

முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில், அரசாங்கம் ஒரு புறமிருக்க, விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில வியாபாரிகள் உற்பத்தி, பரிவர்த்தனை, விநியோகம் ஆகியவற்றுக்கான சாதனத்தைக் கட்டுப்படுத்த அனுமதிக்கப்பட்டார்கள். மக்கள் அந்த ஆட்சி முறையைத் தூக்கி எறிந்தார்கள். ஏனென்றால், நுகர்வோராகிய பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை. ஆனால், இப்பொழுது 1977ம் வருட சுதந்திர தொழில் - வர்த்தக முயற்சி முறை மித மீறிய ஊழல்கள் நிறைந்ததாக வளர்ந்து, மக்களில் பெரும்பாலோரிடையே சமூக அதிருப்தியை உண்டாக்கி வருவதுடன், முன்னைய பிரிட்டிஷ் பிரதமர் திரு. எட்வர்ட் ஹீத் பொருத்தமாக வர்ணித்த ''ஏற்றுக் கொள்ள முடியாத முதலாளித்துவத்தின் முகத்''தைப் பகிரங்கமாக வெளிக்காட்டிக் கொண்டுமிருக்கிறது.

'சன்' ஆகஸ்ட் 1985

பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்தியமைக்கும் நடவடிக்கை

கள் அதிகரிக்கும்போது, வரி விதிப்பு மட்டங்கள் உயரும் போது, அதிகாரிகளின் துரைத்தனத்திலும் மற்றும் வழிகளிலும் ஊழல்கள் பெருகும்போது, அவற்றுடன் ஓர் ''இரகசியப் பொருளாதாரத்தின்'' நடவடிக்கைகளும் வளருகின்றன என்பதில் துளியும் சந்தேகமில்லை, இலங்கையைப் பொறுத்தமட்டில், பொருளாதாரம் தாராளமாக்கப்பட்ட அதே சமயத்தில், கட்டுப்பாடுகளை அல்லது ஒழுங்கு விதிகளை ஓரளவுக்கு அமுல் செய்வது அவசியமாயிருந்தது. அதன் விளைவாக, நேர்மையற்ற வியாபாரிகள் இந்த ஒழுங்கு விதிகளுக்கு 'டிமிக்கி' கொடுக்கச் சகல முயற்சிகளையும் செய்துள்ளனர்.

இந்த நிகழ்வுப் போக்கில், உத்தியோக பூர்வமாகக் கட்டுப்படுத்துவது கடினமாயுள்ள நடவடிக்கைகள் ஆரம்பமாகி, எந்தக் குறிக்கோள்களுக்காக ஒழுங்குவிதிகள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டனவோ அந்தக் குறிக்கோள்களையே செல்லாக் காசாக்கி விட்டன. உதாரணமாக, நிதிச் சந்தைகளில் உறுதிப்பாடு நிலவுவதற்காக நிதி அதிகாரிகள் ஓரளவுக்கு ஒழுங்கு விதிகளை அமுல் செய்வது அவசியமாகின்றது. ஆதலால், வட்டி விகிதங்கள், கொடுகடன் வழங்கல்கள் ஆகியவற்றின் மீது கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படுகின்றன. இத்தகைய கட்டுப்பாடுகள், பணம் சம்பந்தமாக ஒரு ''கறுப்புச் சந்தை''யைத் தோற்றுவித்துள்ளன. இந்தக் கறுப்புச் சந்தை சில சமயங்களில் 'நடைபாதைச் சந்தை' என்று அழைக்கப்படுகிறது. இந்த நடைபாதைச் சந்தையில், கடன் கொடுப்போர் பெறும் வட்டி விகிதங்கள் உத்தியோக பூர்வமான வட்டிவிகிதங்களை விட மிக அதிகமாயிருக்கின்றன. இந்தச் சம்பாத்தியங்கள் பொதுவாக வரிவசூல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை. இப்படி வெளிநாட்டு நாணயச் சந்தையிலும் நடைபெற்று வருகிறது. இதனாலேயே வெளிநாட்டு நாணயச் சந்தையில் ஒங்கு விதிகளை அமுல் செய்ய வேண்டிய அவசியம் இருந்து வந்துள்ளது. இங்கு நாணயமாற்று விகிதங்கள் புரட்டப்பட்டதனாலும் கட்டுப்பாடுகள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதனாலும், இறக்குமதிகளின் வார்நாமா (கிரயப்பட்டியல்) அதிக பெறுமதியுடையதாகவும், ஏற்றுமதிகளின் வார்நாமா குறைந்த பெறுமதியுடையதாகவும் குறிக்கப்படுவதுடன், வெளிநாட்டு நாணயத்தில் உத்தியோக சார்பற்ற முறையில் பேரம் நடத்துவது அதிக இலாபந் தருவதாகவுமுள்ளது. இதைவிட மோசமான தீச்செயல், தங்கம், நவரத்தினங்கள், வெளிநாட்டு நாணயங்கள் ஆகியன சட்ட விரோதமாகக் கள்ளக்கடத்தல் செய்யப்படுவதாகும். இவையாவும் வெளிநாட்டில் வெளிநாட்டு நாணயத்தைப் பெருமளவுக்குத் திரட்டுவதற்குக் கள்ளக்கடத்தல்காரர்களுக்கு உதவுகின்றன. சிலதனி நபர்கள் தங்களுடைய சொத்துக்களை நாட்டுக்கு வெளியே மாற்றுவதற்கு இது ஒரு வழியாக அமைவதுடன், வெளிநாட்டு நாணயத்தை உள்நாட்டுக் கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு விற்பதற்கும் ஏதுவாயுள்ளது. இங்கும் உத்தியோக பூர்வமான சந்தைக்கு இணையாக ஒரு 'கறுப்புச் சந்தை' வெளிநாட்டு நாணயத்தில் நடந்து வருகிறது. மேலும், வரிக்குட்படாத பெருந்தொகையான வருமானங்களும் சிருஷ்டிக்கப்படுகின்றன. இந்நிலைமை மோசமடைவதுமுண்டு. எப்படியெனில், அரசாங்க சேவையிலுள்ள சில நபர்கள் தனிப்பட்ட இலாபங்களை ஈட்டுவதற்கு உபயோகிக்கத்தக்க அதிகாரங்கள் தங்கள் கட்டுப்பாட்டிலிருப்பதைக் காணும்போது, இத்தகைய சட்டவிரோதமான பேரங்கள் செழித்தோங்குகின்றன. அரசாங்க அதிகாரத்தை இவ்விதம் பிரத்தியேக நோக்கத்துக்கு உபயோகிப்பது முறையற்ற, சட்டவிரோதமான செயல் என்பது தெளிவு. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இது, தங்கள் பொருளாதாரங்களில் ஓரளவுக்கு ஒழுங்கு விதிகளையும் கட்டுப்பாடுகளையும் கட்டாயமாக அமுல் செய்ய வேண்டிய நிலையிலுள்ள பலநாடுகளில் இன்று வாழ்க்கையின் ஒரு பாகமாகிவிட்டது.

பொருளாதாரத்தைத் தாராளமாக்கியதன் நோக்கம் இந்தத் தீமைகளை ஆகக் குறைந்த அளவுக்குக் குறைப்பதும், இவற்றில் பலவற்றை ஒழிப்பதாகக் கூட இருந்தபோதிலும், அந்நடவடிக்கை கள்ளக்கடத்தல்காரர்களுக்கும் அவர்களைப் போன்ற புல்லுருவிகளுக்கும் அதிக சந்தர்ப்பங்களையும் உண்டாக்கியுள்ளது. எனவே, நேர்மையற்ற வியாபாரிகள் தங்களுடைய ''இரகசிய'' நடவடிக்கைகளில் அதிக இலாபமிருப்பதைக் காணும்போது, எவ்வளவு தூரத்துக்குக் கட்டுப்பாடுகள் அமுல் செய்யப்பட வேண்டும்? அல்லது தாராளமாக்கிய வசதிகள் வழங்கப்பட வேண்டும்? என்னும் பரந்த பிரச்சினைகள் எழுகின்றன. கட்டுப்பாடான முறையில் கள்ளக் கடத்தல் நடவடிக்கைகள் நடைபெற்று வருவதைப் பற்றிப் பத்திரிகைகளில் நாள் தவறாமல் வெளிவரும் செய்திகளையும், (இதன் ஒரு மாதிரி 2ம் பக்கத்தில் ''நிகழ்ச்சிக் குறிப்பேடு'' என்னும் தலைப்பின் கீழ் தரப்படுகிறது) தீர்வையற்ற கடைத் தொகுதியின் வரலாற்றைக் கறைப்படுத்தியுள்ள துர்ப்பாக்கிய சம்பவங்களையும் பாதகமான பிரசித்தத்தையும் கவனிக்குமிடத்து, நாம் எதிர்நோக்க வேண்டிய பிரச்சினை தெளிவாகத் தெரிகிறது. அதாவது, தீர்வையற்ற கடைத் தொகுதியிலிருந்தும், அது ஒரு பாகமாக அமைந்துள்ள தாராளமாக்கிய வர்த்தகத்திலிருந்தும் கிடைக்கும் ஆதாயங்கள் எவ்வளவு தூரத்துக்கு இலங்கையின் பொருளாதாரத்துக்கு அதிக இலாபகரமாக நலம் பயக்க முடியுமென்பதேயாகும்.

(மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதியைச் சேர்ந்த டப். ஜீ. எஸ். வைத்தியநாதவின் ஆய்வுப் பரிசீலனையொன்றிலிருந்து இவ் விசேஷ அறிக்கை தயாரிக்கப்பட்டது.)

## நெல் விளைச்சல் போக்கு

முப்பதாண்டுகளுக்கு முன் 1950 ன் நடுப்பகுதி அளவில் நெல் உற்பத்தி 1,650,000 தொன்னாக இருந்தது. அந்நேரத்தில் நாட்டின் 50 வீத அரிசித் தேவை இறக்குமதியால் நிரப்பப்பட்டது. 1948 இல் சுதந்திரம் கிடைத்த காலம்முதல் அடுத்தடுத்து பதவியேற்ற எல்லா அரசாங்கங்களும், நெல் உற்பத்தியை அதிகரிக்கவே கொள்கைகளை உருவாக்கியும், திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் வந்தன. மேற்படி நடவடிக்கைகளால் கடந்த முப்பதாண்டுகளில் இலங்கை நெல் உற்பத்தியில் மும்மடங்கு அதிகரிப்பைக் காட்டியுள்ளது. 1983 இல் அடையப்பட்ட உற்பத்தியான் 2,484,000 மெ. தொன், தன்னிறைவுக்கு வெகு சமீபத்தில் எம்மை கொண்டுவந்து விட்டது.

நெல் விளைச்சலில் ஏற்பட்ட இந்த அதிகரிப்பு ஹெக்டயாருக்கான சராசரி விளைச்சலதிகரிப்பும், விளைநிலப்பரப்பு அதிகரிப்பினாலுமே ஏற்பட்டதாகும். சராசரி விளைச்சல் சுமார் 85 வீதத்தாலும், நிலப்பரப்பு 75 வீதத்தாலும் இக்காலத்தில் அதிகரித்துள்ளது. சராசரி விளைவு அதிகரிப்பு, 1950 களில் தொடங்கிய பழைய விருத்தியுற்ற நெல் இனங்களாலும், பிந்திய 1960 க்களில் தொடங்கிய புதிய விருத்தியுற்ற வகைகளாலும் ஏற்பட்டது. உதாரணமாக, 1950 ம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் ஏறக்குறைய முழு நிலப்பரப்பும் பாரம்பரிய விதை வகைகளையே விதைத்தது. இப்பொழுது 85 வீதம் விளைச்சல் நிலப்பரப்பு புதிய விருத்தியுற்ற வகைகளிலும், 10 வீதம் பழைய விருத்தியுற்ற வகைகளுடனும் இயங்குகின்றன.

சராசரி விளைச்சலில் அதிகரிப்பை கொண்டுவந்த இரண்டாவது காரணி நீர்ப்பாசனத்திற்குள் கொண்டு வரப்பட்ட அதிக விளைச்சல் பரப்புடனும், புதிய விருத்தியுற்ற வகை விதைகளுடனும் இணைந்து இரசாயண உரப்பாவனை அதிகரித்ததாகும். 1950ம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட இரசாயண உர உபயோகம் இப்பொழுது 198,000 மெற்றிக் தொன் அளவாக உள்ளது. விளைச்சல் நிலப்பரப்பு அதிகரித்தமைக்கு முக்கிய காரணம் நீர்ப்பாசனத்தின் கீழ் மேலும் நிலப்பரப்பு கொண்டு வரப்பட்டமையே. இத்துடன் விஸ்தரிப்புச் சேவை, நீர் முகாமை, நாற்று நடும் முறைகள், விவசாய இரசாயனப் பொருட்கள் போன்றவற்றிலேற்பட்ட முன்னேற்றமும் பெருமளவுக்கு மொத்த நெல் உற்பத்திக்கு பங்களிப்புச் செய்துள்ளது.

இருந்தும் 1984 ம் ஆண்டின் உத்தேச விளைச்சலான 2,420,000 மெ. தொன், 1983 இன் விளைச்சலான 2,484,000 மெ. தொன்னிலும் பார்க்க ஏறக்குறைய 64,000 மெ. தொன் குறைவாகும். இந்த வீழ்ச்சி இலங்கையின் விளைச்சல் எவ்வளவு தூரம் காலநிலைத் திடீர் மாற்றங்களால் பாதிக்கப்படுகிறதென்பதை எடுத்துக் காட்டுகிறது. 1983/84 பெரும் போகத்தில் விளைச்சல் 14 இலட்சம் மெ. தொன் என மதிப்பீடு செய்யப்பட்டது. இது அதற்கு முந்திய ஆண்டிலும் 24 சதவீதம் குறைவு; ஆனால் 1984 சிறு போகத்தையெடுத்துப் பார்த்தால் 1983 ம் ஆண்டின் விளைச்சலான 7 இலட்சம் மெ. தொன் 11 இலட்சம் மெட்ரிக் தொன்னாக (52% ஆல்) அதிகரித்துள்ளது, இதுவரை சிறுபோகத்தில் பெறப்பட்ட மிகக்கூடிய உற்பத்தி இதுவாகும்.

இந்த அதிகரிப்புக்குரிய முக்கிய காரணம் சீரான காலநிலையும், பிரதான நெல் உற்பத்தி மாவட்டங்களில் அதிக நிலப் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதுமாகும். (1983 ல் 24,000 ஹெக்டயார்கள், 1984 ல் 383,000 ஹெக்.) 1983 பெரும் போக இழப்பை நிவர்த்தி செய்யும் நோக்குடன் நெல் விளைச்சல் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டமையே 1984 ல் மிகக்கூடிய அதிகரிப்புக் குக்காரணமாகும்.

1984 பெரும் போக சராசரி விளைச்சல் ஹெக்டயார் ஒன்றுக்கு 1983 இல் காணப்பட்ட 3606 கிலோவிலிருந்து 1984 இல் 3076 கிலோவாக வீழ்ச்சியடைந்ததற்கு முக்கிய காரணம் மோசமான காலநிலையேயாகும். இரு போகங்களிலும் இந்த வீழ்ச்சி காணப்பட்டதற்கு காரணங்கள் சீரற்ற காலநிலையும், பசளை சராசரியாக குறைத்து பாவிக்கப்பட்டமையுமாகும். சராசரி உரப்பாவனை விகிதாசாரம் 1983/84 பெரும்போகத்தில் 9 சதவீதமாகக் குறைந்தது; இது 1984 சிறு போகத்தில் 11 சதவீதமாகும். 1984 சிறு போக விளைச்சல் வீழ்ச்சிக்கு பூச்சிகளின் நாசவேலையும், பயிர் நோயும், நெல்விளைச்சலுக்கு உகந்ததல்லாத நிலப்பரப்பு விளைச்சலுக்கு உட்படுத்தப்பட்டதும் காரணங்களாகும்.

நெல் விளைச்சலுக்கு பாவிக்கப்பட்ட மொத்த பசளை 1983 ம் ஆண்டின் 160,000 மெ. தொன்னிலிருந்து, 11, 000 மெ. தொன்னால் அதிகரித்து 1984 ம் ஆண்டில் 171,000 மெ. தொன்னாக இருந்தது. இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணம், 1984 பெரும் போகத்திலும் பார்க்க சிறு போகத்திற்கு 17,000 மெ. தொன் கூடுதலாகப் பாவிக்கப்பட்டதாகும். இருந்தும் 1983/84 பெரும் போகத்திலும் 1984 சிறு போகத்திலும் விளைச்சலுக்குட்படுத்தப்பட்ட நிலப்பரப்பு அதிகரித்தமையால் சராசரி பசளைப்பாவனை முந்திய ஆண்டிலும் பார்க்க அதிகம் குறைந்துள்ளது.

# அபிவிருத்தி நிதிப்படுத்தலின் வளர்ச்சியும் பிரச்சினைகளும்

அரசாங்கத்தின் இடைக் காலப் (1980 - 1990) பொருளாதாரத்திட்டம் பிரதானமாக நாட்டின் உற்பத்தி இயலளவின் கட்டமைப்பினை முற்றுமுழுதாக மாற்றியமைப்பதனை கருத்தில் கொண்டதாக விளங்குகிறது. பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் வாயிலாக அரசாங்க நிதியம் பொதுத் துறைச் செய்திட்டங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றது. இக் கட்டமைப்பு மாற்றத்திற்கு உதவுவதே இதன் நோக்கமாகும். இதேவேளை தனியார்துறையினர் இந்த இலக்கினை நிறைவேற்றுவதற்கு அபிவிருத்தி வங்கிகளும், ஏனைய நிதி நிறுவனங்களும் உதவ வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடைக் கால கட்டமைப்பு மாற்றத் தந்திரோபாயத்தில் தனியார் துறைக்கு மிகப் பிரதான பங்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் அண்மைக் காலத்தில் தனியார் துறையின் அபிவிருத்திக்குப் பல்வேறு ஊக்குவிப்புக்களை அளித்துள்ளது. எனினும், இதுவரையிலும் இதன் விளைவுகள் எதிர்பார்த்தது போன்று அமையவில்லை. நெல், நிருமாணம், சுற்றுலா ஆகிய துறைகளில் இந்த ஊக்குவிப்புக்களுக்குச் சாதகமான விளைவுகள் கிடைத்துள்ளன. எனினும், கைத்தொழில்துறை (ஆடை, பெற்றோலியத் தயாரிப்புக்கள் தவிர) ஒப்பீட்டு ரீதியில் மெதுவாகவே அசைந்துள்ளது. கைத்தொழில் துறையின் இந்த மெதுவான அபிவிருத்திக்கு, 1980 க்களின் பிற்பகுதியில் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்வாங்கல் போன்ற வெளிநாட்டுக் காரணிகளும், பொருளாதாரத்தில் ஊக்குவிப்புக் கட்டமைப்பில் காணப்படுகின்ற பக்கச்சார்பும் காரணமாகக் கூறப்படுகின்றன.

பாரம்பரியமற்ற கைத்தொழில்களில் கூடுதலான இயல்திறன் உண்டு என்பதனை அரசாங்கம் 1985 - 1989 இற்கான முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் அங்கீகரித்துள்ளது. குறிப்பாகத் தொழிற்சாலைக் கைத்தொழில்கள், சிற்றளவு கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் என்பனவே இவையாகும். இதற்காகத் தனியார்துறை முயற்சியில் அரசாங்கம் தங்கியிருக்கின்ற அதேவேளை, இவர்களுக்கு அடிப்படைப் பொது வசதிகளை அளித்தலும், பொருத்தமான ஊக்குவிப்புக்களை அளித்தலுமே அரசாங்கத்தின் பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கைகளாக விளங்குகின்றன. ''எஞ்சியுள்ள திறமையான இறக்குமதிப் பதிலீட்டு மார்க்கங்கள்யாவும் துரிதமாக அற்றுப்போகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் மூலவளங்களுடன் நெருங்கிய தொடர்புடைய ஏற்றுமதி சார்ந்த உற்பத்தியைக் கட்டியெழுப்ப வேண்டி உள்ளது...... நாட்டின் முதலீட்டு மாதிரியை மீள ஒழுங்குபடுத்துவதே மிக முக்கியமான அம்சமாகும். 1985 ல் மொத்த உள்ளூர் உற்பத்தியில் 14.9 சதவீதமாக இருந்த பொதுமுதலீட்டு மட்டம், 1989 இல் 12 சதவீதமாக வீழ்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதே காலப்பகுதியில், மொத்த உள்ளூர் உற்பத்தியில் 10.3 சதவீதமாகவிருந்த தனியார் முதலீட்டின் ஒப்பீட்டு ரீதியான பங்கு 13.3 சதவீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.''

இப்பின்னணியில், இந்நோக்கங்களை அடைவதற்கென அரசாங்கத்தால் தாபிக்கப்பட்ட நிதி நிறுவனங்களின் செயற்றிறனைப் பற்றி ஆராய்வது பொருத்தமானதாகும். அண்மையில் தேசிய அபிவிருத்தி வங்கி தனது ஐந்தாண்டு நிறைவினைக் கொண்டாடியது. இதன் நோக்கங்கள், அபிவிருத்தி, சாதனைகள் செயற்றிறன் என்பன பற்றி இங்கு ஆராய்வது மிகப் பொருத்தமானதாகும்.

இவ்வங்கி ஜனவரி 1979 இல் ஸ்தாபிக்கப்பட்டபோது அது அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கை, அபிவிருத்தித் தந்திரோபாயம் என்பவற்றின் ஒரு பிரதான தூணாக விளங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. (தேசிய அபிவிருத்தி வங்கியின் மொத்த முதலீடு 600 கோடி ரூபா, அரசாங்கம் 67%, இலங்கை மத்திய வங்கி 17%, மக்கள் வங்கி 8%, இலங்கை வங்கி 8%.) கடன், பங்குடைமை என்பவற்றின் வாயிலாகத் தனியார்துறையை நிதிப்படுத்தல் இதன் விரிவான நோக்கமாகும். இதன் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு.

(1) தவணை நிதிப்படுத்தல், ஒப்புரவு என்பவற்றிற்குக் குறிப்பிடத்தக்க ஒரு மூலமாக விளங்குதல்.

(2) மூலதனச் சந்தையின் அபிவிருத்தியை ஊக்குவித்தல்.

(3) சிற்றளவு, நடுத்தர கைத்தொழில் நிகழ்ச்சித் திட்டங்களை விரிவாக மீள நிதிப்படுத்துவதன் மூலம் கிராமியத் துறைக்கு உதவுதல்.

(4) செய்திட்ட ஊக்குவிப்பில் ஈடுபடுதல்.

(5) நவீன, நெகிழ்ச்சியான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதன் மூலம், வர்த்தக வங்கிகளை விடவும் கூடுதலாக இடரை ஏற்க விரும்புதல்.

அபிவிருத்தி நிதியில் குறிப்பிடத்தக்க அளவு பங்கெடுத்ததன் மூலம் வங்கி அதன் விரிவான நோக்கத்தை அடைந்துள்ளது எனலாம். வங்கி தனது ஆரம்ப வருடங்களில் 179 செய்திட்டங்களை நிதிப்படுத்த அங்கிகாரம் அளித்துள்ளது. இதன் பெறுமதி ரூபா 178. 4 கோடியாகும். பங்குடைமை, தனியார் முதலீடுகள், பாரிய தனியார் துறை, பொதுத்துறைக் கம்பனிகள் போன்ற பல்வேறு அளவிலான முயற்சிகளும் இதனுள் அடங்குகின்றன. இதன் விளைவாக மொத்தம் ரூபா 682.3 கோடி முதலீடு செய்யப்பட்டு, 10,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இந்த ஐந்து வருடங்களுள் இதன் நடவடிக்கை உறுதியாக வளர்ச்சி அடைந்துள்ளது. 1980 இல் 17 ஆக விருந்த அங்கீகரிக்கப்பட்ட செய்திட்டங்களின் எண்ணிக்கை, 1984 இல் 73 ஆக அதிகரித்துள்ளது.

புதியனவற்றை கண்டறிதல், கூடுதலான இடரை ஏற்றல் ஆகிய அதன் நோக்கங்களுக்கு அமைய வங்கி இயங்குகின்றது எனலாம். சில வகைத் திட்டங்களுக்கு முன்னேடியாக விளங்குவதில் வங்கி கூடிய சிரத்தை எடுக்கின்றது. ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெற முடியாததனுல் அமுலாக்க இயலாதுள்ள திட்டங்களை நிதிப்படுத்துவதிலும் வங்கி அக்கறை செலுத்துகின்றது. இறல் வளர்ப்பு, விவசாயக் கைத்தொழில்கள், இரத்தினக்கல் பட்டை தீட்டுதல், கம்பியூட்டர்கள், ஏற்றுமதிக்குரிய மலர்த்தாவரம் போன்ற வெற்றிகரமான பொருளாதார முயற்சிகளை இது உள்ளடக்குகின்றது. கூட்டுக்கடன், திட்டங்களை இணைந்து நிதிப்படுத்தல், கருவி நிதிப்படுத்தல் (இத்திட்டத்தின் கீழ் முயற்சியாளர்களுக்குத் தேவையான உபகரணங்களை வங்கி கொள்வனவு செய்து வழங்கும். அதற்கான கிரயத்தை அவர்கள் தவணை முறையில் செலுத்த வேண்டும்.) என்பன நவீன நிதிப்படுத்தற் துறைகளாகும். கருவி நிதிப்படுத்தலில் குறுகிய காலத்திற்குள் 3 கோடியே 16 லட்சம் ரூபா முற்பணமாகச் செலுத்தப்பட்டுள்ளது. இத்துறையில் வங்கி பெற்ற வெற்றியினுல் கவரப்பட்ட ஏனைய நிதி நிறுவனங்களும் இத்தகை குத்தகை முறை நிதிப்படுத்தலில் போட்டி போட்டுக்கொண்டு ஈடுபட்டு வருகின்றன.

உற்பத்தித் துறை சார்ந்ததும், காரியசாத்தியமானதுமான செய்திட்டங்களில் முதலீட்டினை ஊக்குவிக்க முயற்சிக்கையில், தேசிய அபிவிருத்தி வங்கி, நிதிப்படுத்தலில் பல நேரடிப் பிரச்சினைகளையும், பொருளாதாரம், ஊக்குவிப்பு முறைமை என்பவற்றில் உள்ள குறைபாடுகளின் விளைவாக பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. உதாரணமாக, 1980 க்களில் விவசாயம், கைத்தொழில் வெளியீடு, ஏற்றுமதி, முதலீடு என்பன ஏன் உறுதியாக வளர்ச்சி அடையவில்லை என்ற பிரச்சினை உண்டு. தேசிய அபிவிருத்தி வங்கியின் நோக்கில் இத்துறைகளின் ஒப்பீட்டு ரீதியான விலைகள், மெய்ச் செலவுகள் என்பவற்றின் நடத்தையே நாணயமாற்று விகிதாசாரம், சுங்கத் தீர்வை என்பவற்ருல் தீர்மானிக்கப்படுகின்றன. உலக சந்தையில் இலங்கையின் ஏற்றுமதிகள் மீதான போட்டியில் ஏற்படுகின்ற மாற்றத்தைப் பல்வேறு ஏற்றுமதிச் சுட்டெண்களதும் அசைவு காட்டுகின்றது. தேசிய பொருளாதாரத்திற்குள் ஒப்பீட்டு ரீதியில் ஏற்றுமதி சாராத பொருளாதார நடவடிக்கைகளை விடவும் ஏற்றுமதி சார்ந்த நடவடிக்கைகள் கவர்ச்சிகரமாக இருப்பதனை இவை இரண்டினதும் ஒப்பீட்டுச் சுட்டெண்கள் காட்டுகின்றன. உள்ளூர் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளில் இலாபம் அதிகரிக்கையில், ஏற்றுமதி முயற்சிகளிலிருந்து, ஏற்றுமதி சாராத துறைகளை நோக்கி மூலவளப் பாய்ச்சல் ஏற்பட இடமுண்டு. இதன் விளைவாக ஏற்றுமதி வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன், நாடு பெறுமதி மிக்க வெளிநாட்டுச் செலாவணியையும் இழக்கலாம்.

மேலும், 1979 - 1982 வரை ஏற்றுமதித் துறையில் மெய்ச் செலவுகள் தீவிரமாக அதிகரித்துள்ளன, 1983 - 84 இல் இது வீழ்ச்சியடைந்த போதிலும், 1978 மட்டத்திற்குக் கூடுதலாகவே இருந்தது. ஏற்றுமதி சாராத உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் மெய்ச் செலவுகள் மிதமாகவே அதிகரித்துள்ளன. இதன் விளைவாக இத்துறை ஏற்றுமதித் துறையை விடவும் இலாபகரமானதாக உள்ளது.

ஏற்றுமதித் துறையில் மெய் மூலதனச் செலவுகளும் உயர்வாக உள்ளன. 1979 இலிருந்து சாதாரண வட்டி வீதம் தீவிரமாக அதிகரித்துள்ளது. 1981 இலும் 1982 இலும் சராசரி விகிதாசாரம் முறையே 19.1%, 29.3% ஆக இருந்தன. 1983-84 இல் ஏற்றுமதி விலைச் செழிப்பு ஏற்படும் வரையிலும் வட்டி வீதங்கள் மிதமாகவேயிருந்தன. சில சமயங்களில் இவை வர்த்தகம் சாராத துறையில் இதனை விடவும் கூடுதலாக இருந்தன. உள்ளூர்ப் பொருட்களுக்கும், பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளுக்கும் இடையிலான மெய்க் கூலியையும், மெய் வட்டியையும் ஒப்பிட்டால், 1977 இல் நாணய மதிப்பிறக்கம் செய்யப்பட்டதற்கு மேலாக, பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளுக்குச் சார்பாக உற்பத்திச் செலவு அமைப்பினை மாற்றி அமைப்பதற்கு எத்தகைய விசேட முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை காண முடிகிறது.

உற்பத்தி அடிப்படையில் ஒப்பிடின், இறக்குமதி நட

வடிக்கைகள் எதிர்கணிய விகிதாசாரங்களையே பெற்றன. 1979 - 1983 இடையில் இறக்குமதி வர்த்தகத்திற்குக் கடன் பெறுவது, உள்ளூர் உற்பத்திக்கு அல்லது ஏற்றுமதி உற்பத்திக்குக் கடன் பெறுவதை விடவும் இலாபகரமானதாக விளங்கியது.

குறைந்த வட்டி விகிதாசாரத்தின் விளைவாக, வர்த்தகத் துறையில் அதிகரித்த கடன் கேள்வி ஏற்படுவதனை வர்த்தக வங்கிகளின் வர்த்தகம் சார்ந்த நடவடிக்கைகள் பிரதிபலிக்கின்றன. வட்டி வீதத்தைக் குறைப்பது இதற்குத் தீர்வு அல்ல என தே. அ. வ. கூறுகின்றது. வைப்பாளர்களுக்கான மெய் வட்டி வீதத்தை இலங்கையில் இன்னும் ஓரளவிற்குக் கடைப்பிடிக்கலாம். ஏற்றுமதிக்கு எதிரான பிரச்சினையை நீக்காது, வட்டி வீதம் குறைக்கப்பட்டால், அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமாக நிதித் துறையின் அபிவிருத்தியைப் பாதிக்கும் நாணயமாற்றுச் சரிக்கட்டல்கள், தீர்வைச் சீர்திருத்தம் என்பவற்றின் மூலம் ஏற்றுமதிகளின் ஒப்பீட்டு விலையை அதிகரிப்பதே இதற்குரிய தீர்வாகும் என தே. அ. வ. தலைவர் கருதுகின்றார். இவ்வாறு செய்யின் ஏற்றுமதி பாதிக்கப்படமாட்டாது.

ஐந்து வருட காலப் பொருளாதாரம் தொடர்பான தலைவரின் கருத்துரை இலங்கையின் சென்மதி நிலுவை, கடன் சேவை நிலைமை என்பன பற்றியும் குறிப்பிடுகின்றது. 1977 இன் பின்னர் நாட்டில் இடம் பெற்றுள்ள முதலீட்டில் பெரும் பகுதி வெளிநாட்டு நிதியாகும் எனவும், மெய் வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள போதிலும், உள்நாட்டுச் சேமிப்பினை திரட்டுவதில் உள்ள தடங்கல்களை இது பிரதிபலிக்கின்றது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

அண்மைக் காலத்தில் பண்டங்களதும், சேவைகளதும் மொத்த வெளிநாட்டுக் கடன் சேவை விகிதாசாரத்தில் அதிகரிப்பு ஏற்பட்டமை இதன் விளைவாகும். சிறப்பற்ற ஏற்றுமதி போன்று அதிகரித்த கடன் பெறுதலும் இலங்கையின் உயர் கடன் சேவை விகிதாசாரத்திற்குக் காரணமாகும். வெளிநாட்டுக் கடன் உயர் நுகர்வு அல்லது அதிகரித்த வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறை என்பவற்றுக்குச் செல்லாது, முதலீட்டு அதிகரிப்பிற்குச் சென்றுள்ளது என நாம் திருப்தியடைய இயலாது. எதிர்காலச் சென்மதி நிலுவையின் திறமை மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீட்டின் தரத்திலேயே தங்கியுள்ளது. விரைவாக வெளிநாட்டு செலாவணியை உழைக்கின்ற செய்திட்டங்கள், வெளிநாட்டு நிதி முகாமையில் அதிகரித்த நெகிழ்ச்சிக்கு உதவுவதுடன், நாட்டை அதிகரித்த முதலீட்டிலும் அதிகரித்த வளர்ச்சிப் பாதையிலும் வைத்திருப்பதற்குரிய வெளிநாட்டுச் சேமிப்பிற்கு வழிகாட்டவும் செய்கின்றன. எதிர்காலத்தில் வர்த்தகப் பொருள் உற்பத்தி விஸ்தரிப்பிற்கு அத்திவாரம் இடுகின்ற, மின்சாரம், நீர்ப்பாசனம், போக்குவரத்து, செய்திப் பரிமாற்றம் போன்ற பொது வசதிகளுக்கான அவசரத் தேவை, வெளிநாட்டுக் கடன் முகாமையில் தீவிர மட்டுப்பாடுகளை ஏற்படுத்துகின்றது. இவை நீண்ட காலத்தில் பயன் பெறத்தக்க திட்டங்களாகும். இவை அளிக்கின்ற நேரடிச் சேவைகள் விற்பனை செய்யக் கூடியன அல்ல. இவை உற்பத்தி செய்ய உதவுகின்ற வர்த்தகப் பொருட்களின் வாயிலாக மறைமுகமாக வெளிநாட்டுச் செலாவணியை உழைப்பதற்கு உதவுகின்றன. இலங்கையின் மரபு ரீதியான தேயிலையின் வெளிநாட்டுச் செலாவணி உழைக்கக் கூடிய திறமை இதற்கிடையில் முக்கியம் பெறுகின்றது. தற்காலிகமாகப் பெற்ற அதிகரித்த தேயிலை விலைகளின் விளைவாக, 1984 இன் பெரும் பாகப் பொருளாதாரம் தீவிரமாக வளர்ச்சி அடைந்தது. நாட்டின் சிறந்த பொருளாதாரத்திற்கு உறுதியான ஒரு ஏற்றுமதித் துறையின் அவசியத்தை இது மிகத் தெளிவாகக் காட்டுகின்றது.

வருமானம், சேமிப்பு உருவாக்கம் என்பவற்றுக்கு மேலாக, பிரதான ஏற்றுமதிப் பயிர்களின் மோசமான வெளியீடு, 1980 க்களில் இடம் பெற்ற ஒழுங்கற்ற வளர்ச்சி மாதிரி என்பனவும் தீவிரமாகக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியனவாகும்.

ஐந்து வருட இயக்கத்தின் பின்னர் வங்கி பின்வரும் தேவைகளின் அவசியத்தை உணர்த்தியுள்ளது.

- குறிப்பாகத் தேயிலைப் பயிர்த்துறையிலும் ஏற்றுமதி சார்ந்த துறைகளிலும் அதிகரித்த முதலீடு.
- கைத்தொழில் வெளியீட்டைப் பன்முகப்படுத்தல், குறிப்பாக அதிகரித்த பெறுமதிச் சேர்க்கை நடவடிக்கைகள்.
- ஏற்றுமதிக்குச் சார்பாக கூலி, வட்டி வீதம், தீர்வை போன்ற உற்பத்திச் செலவினங்களை மீளமைத்தல்.
- தனியார்துறை அபிவிருத்திக்கு நியாயமான வட்டி வீதத்தில் நீண்டகாலக்கடன் வசதிகளை அளித்தல்.
- நாணயமாற்று விகிதாசாரத்தை யதார்த்தமாகவும் உரிய நேரத்திலும் சரிக்கட்டுதல்.
- அதிகரித்த உள்நாட்டுச் சேமிப்பு.
- சுறுசுறுப்பான பணச்சந்தை.

– ஒப்பீட்டு ரீதியில் கூடிய கதியில் வெளிநாட்டுச் செலாவாணி உழைக்கின்ற சேமிக்கின்ற திட்டங்களில் பொது, தனியார் துறையின் அதிகரித்த முதலீடு.

சிறப்பாக ஆராயப்பட்டு, முறையாகத் திட்டமிடப்பட்ட செய்திட்டங்களின் பற்றுக்குறை, தே. அ. வ. உற்பத்தி சார்ந்த துறையில் முதலீட்டினை ஊக்குவிப்பதற்கு முயற்சித்த போது எதிர்நோக்கிய நேரடிப் பிரச்சனைகளுள் ஒன்ருகும். தனியார், பொதுத்துறைத் தாபனங்களுக்கு அடிப்படைத் தொழிற்துறையில் தேர்ச்சி இன்மையே இதற்குக் காரணமாகும். அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் கிடைக்கின்ற புதிய வாய்ப்புக்களை அடையாளம் கண்டு, பயன்படுத்த விரும்புகின்ற புதிய முயற்சித் திறமை இன்மையும் இதற்குரிய இன்னெரு காரணமாகும்.

கடன்பெற்ருேர் திறமையாகவும் உரிய நேரத்திலும் செய்திட்டங்களை அமுலாக்குவதற்கு போதிய முகாமைத்துவ ஏற்பாடுகளைச் செய்யாமை கவனத்தை ஈர்த்த இன்னெரு அம்சமாகும். குறிப்பாகத் தொழினுட்ப மாற்றத்தைச் செய்வதிலேயே இது இடம் பெற்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த அம்சம் இயந்திரத்தை வழங்குபவர்களின் அல்லது வெளிநாட்டு முதலீட்டுப் பங்காளர்களின் கைகளில் முழுமையாக விடப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் இயந்திரங்களை வழங்குவது தொடர்பான சட்ட ஏற்பாடுகள், தொழினுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள், கூட்டு முயற்சி ஒப்பந்தங்கள் என்பன பின்பற்றப் படாததனல் உள்ளூர்க் கம்பனி குறிப்பிடத்தக்க நட்டம் அடைந்தது.

பெரும்பாலான கம்பனிகளிடம் போதிய கணக்கீட்டு, நிதிக் கட்டுப்பாட்டு முறைமை இல்லாதிருந்தமை வியப்பிற்குரியதாகும். இதன் விளைவாக ஒழுங்கு முறையான கால இடைவெளியில் கணக்குகள் தயாரிக்கப்படவில்லை. ஆகையால் முயற்சியின் நிலைமை தொடர்பாக முகாமைத்துவத்திற்குப் போதிய தகவல்கள் கிடைக்கவில்லை. ஆகையால் நிதி அல்லது இயக்கப் பிரச்சினைகள் தொடர்பாக உரிய நேரத்தில் நடவடிக்கைகளை எடுக்க முடியவில்லை.

பெருந்தொகையான பொருளாதார முயற்சிகள் ஒன்றிணைக்கப்பட்ட மாதிரியிலான ''பொதுக்'' கம்பனியாகவிருந்த போதிலும், உண்மையில் அவை ''குடும்ப முயற்சிகளாகவே'' விளங்கின. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவற்றின் முகாமைத்துவம் சிறப்பாக ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கவில்லை. ஒப்புரவுப் பங்குடைமையின் விளைவாக, இவற்றின் வர்த்தகம் தீவிரமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மூலதனச் செலவுகள் பெரும்பாலும் குறுங்காலக் கடன்களின் மூலமே நிதிப்படுத்தப்பட்டன. இதன் விளைவாக நிலுவைப்படுத்தப்படாத மூலதன அமைப்பு ஏற்பட்டது. இது திரவத்தன்மையின் மீது தீவிரமான மட்டுப்பாட்டைத் தோற்றுவித்தது.

உற்பத்திச் செய்திட்டங்களுக்கு ஒப்புரவு நிதிப்படுத்தல் பற்றுக்குறையாக இருந்தமை, முதலீட்டை ஊக்குவிப்பதில் எதிர்நோக்கிய இன்னெரு மட்டுப்பாடாகும். இது கம்பனியின் வளர்ச்சியைப் பாதிக்கின்றது. மேலும், தமது முயற்சிகளை நிதிப்படுத்துவதற்குப் பெருமளவிற்குக் கடனில் தங்கியுள்ள நிறுவனங்களுக்கு நிதிப் பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது. மூலதனச் சந்தை அபிவிருத்தி இலங்கையில் பங்குடைமையின் அடிப்படையை விஸ்தரித்தல் என்பவற்றுக்கு உதவுகின்ற தே. அ. வ. நோக்கம் மிக அண்மைக்காலத்திலேயே அமுலாக்கப்பட்டது. ஜனவரி 1984 இல் மட்டுப்படுத்தப்பட்ட மூலதன அபிவிருத்தி முதலீட்டுக் கம்பனியின் உருவாக்கத்துடன் இது ஆரம்பித்தது. தே. அ. வங்கியினுல் நிறுவப்பட்ட இக்கம்பனி போதிய முதலீடு இல்லாத முயற்சிகளில் ஒப்புரவு முதலீட்டினை மேற்கொள்ள உள்ளது.

இந்த அபிவிருத்தி நிதிப்படுத்தல் அனுபவம், இலங்கையின் பொருளாதாரத்தில் நிலவுகின்ற மட்டுப்பாடுகளையும் முரண்பாடுகளையும் வெளிக்கொணர்ந்துள்ளது. ஒரு புறத்தில், அரசாங்கம் தனியார் துறைக்கு உதவுகின்ற கொள்கைகளைக் கொண்டுள்ளது. மறுபுறத்தில், தனியார் துறைக்குச் சாதகமான சூழலை அபிவிருத்தி செய்வதற்குரிய தெளிவற்ற சைகைகளால் இந்நிதிப்படுத்தல் பாதிக்கப்பட்டுள்ளது. தனியார் துறைக்குரிய இச்சைகைகளுள் மிகவும் சக்தி வாய்ந்தது வட்டி வீதமாகும். இது தொடர்ந்தும் அதி உயர் மட்டத்தில் இருக்கின்றது. குறிப்பாக, கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான கொள்கை தெளிவாக வரைவிலக்கணப்படுத்தப்பட வேண்டும் எனவும் தலைவர் இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் பொருளாதாரக் குறிக்கோள்கள் சாதிக்கப்படுவதற்கு, பின்வரும் விரிவான பிரச்சினைகள் ஆராயப்பட்டுத் தீர்க்கப்பட வேண்டும் என அவர் கருதுகின்ருர்.

– நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியின் மீது, அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் தாக்கம் என்ன?

– ஒப்பீட்டு நீதியில் இலங்கைக்கு வாய்ப்பான கைத்

(33- ம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் பொருளாதார தாராளமயமாக்கல் தொடர்பான கொள்கைச் சீர்திருத்தங்கள்

## அவற்றின் தாக்கம் பற்றிய ஒரு பரிசீலனை

பிரேமசந்திர அத்துகோரளை

'யூனிசெப்' கொழும்புக்கிளையின் வேண்டுகோளுக்கிணங்க அதன் நிதியுதவியுடன் தயார் செய்யப்பட்டு, இலங்கை பொருளியலாளர் கழகத்தின் கருத்தரங்கு கட்டுரைகள் தொடரின் கீழ் வெளியிடப்பட்ட ''1977ன் கொள்கைச் சீர்திருத்தங்கள் உள்நாட்டுக் கைத்தொழிலில் ஏற்படுத்திய தாக்கம்'' என்னும் விரிவான ஆய்வறிக்கையிலிருந்து. (குறிப்பாக, எமது இந்த இதழுக்கான விசேஷ அறிக்கையுடன் தொடர்பான) தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன. சமீப காலம் வரை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வர்த்தகப்பிரிவில் விரிவுரையாளராக பணியாற்றிய கலாநிதி அத்துகோரளை, தற்பொழுது அவுஸ்திரேலியாவின் லா ட்ரோப் பல்கலைக் கழகத்தின் பொருளியல் கல்லூரியில் பணி புரிகிறார்.

முன்னுரை

பெரும்பாலான குறைவிருத்தி நாடுகள், ''அரசியல் சுதந்திரத்தை'' அடுத்து ''பொருளாதாரத் தங்கியிருத்தலை'' ஒரு முடிவிற்கு கொண்டுவரும் நோக்கில் தங்கள் பொருளாதாரங்களை மறுசீரமைப்பதற்கு ஒரு வழியாக கைத்தொழில் மயமாக்கலை ஆர்வத்துடன் மேற்கொண்டன. சுதந்திரம் பெற்ற முதல் பத்து ஆண்டுகளில் நிலவிய இலங்கையின் கொள்கை இத்தகைய பொதுப் போக்கிலிருந்து விலகிச் செல்லும் அமைப்பினைக் கொண்டிருந்தது. இக்கால கட்டத்தில் இலங்கை அரசாங்கமானது முறைமையான ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கட்டமைப்பு அம்சங்களைப் பேணும் பொருட்டு தலையிடாக் கொள்கைகளைப் பின்பற்றி வந்தது. 1950 களின் பிற்பகுதியிலேயே கைத்தொழில் மயமாக்குவதற்கு வேண்டிய ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அப்போது அனைத்து குறைவிருத்தி நாடுகளிலும் நிலவிய பக்கச் சார்பான அபிவிருத்திச் சிந்தனைப் போக்குடனும், கொள்கை வகுப்பு முறையுடனும் ஒத்துச் செல்லக்கூடியவாறு தெரிந்தெடுக்கப்பட்ட அபிவிருத்தி உபாயம் யாதெனில், கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள், உற்பத்தி நடவடிக்கைகளிலுள்ள முக்கியபகுதிகளில் அரசாங்கத்தின் நேரடி ஈடுபாடு, வர்த்தகம், நிதி என்பவற்றின் மீது அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாடுகள் என்பவற்றூடாக ''கட்டாயப் படுத்திய'' இறக்குமதிப் பிரதியீடு போன்றவற்றை உள்ளடக்கிய பொருளாதார நடைமுறைகளை இலங்கை பின்பற்றியதாகும். சில குறிப்பிட்ட சீர்திருத்த முயற்சிகள் இருந்த போதிலும், இத் ''தன்னிறைவுக்'' கொள்கை நிலைமையானது 1977 ம் ஆண்டின் கொள்கைச் சீர்திருத்தங்கள்வரை தொடர்ந்து இருந்து வந்தன.

இறக்குமதிப் பிரதியீட்டு கைத்தொழில் மயமாக்கல் உபாயமானது காலனித்துவக் காலத்திலிருந்து பாரம்பரியமாக இருந்து வந்த முறைமையான ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் கணிசமான கட்டமைப்பு மாற்றங்களைக் கொண்டு வந்தது. சுதந்திரம் பெற்ற காலத்தில் முதன்மையான ஏற்றுமதிப்பயிர்களின் பதப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளைத்தவிர சிறியளவு கைத்தொழில் நடவடிக்கைகளே காணப்பட்டன. காலப் போக்கில் உற்பத்தி பன்முகப்படுத்தல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், முதலீட்டுநடுத்தரப்பொருட்களை உள்ளிட்ட பெருந்தொகையான பொருட்கள் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டன.

இத்தகைய மாற்றங்களின் பின்பும், இறக்குமதிப் பிரதியீட்டு கைத்தொழில்மயமாக்கல் உபாயத்தின் நிகர பிரதிபலன் முற்று முழுதான மதிப்பீட்டில் எதிர்மறையானதாகவே இருந்தது. இக் காலகட்டத்தில் உருவான கைத்தொழில் கட்டமைப்பானது, உறுதியான கைத்தொழில் விஸ்தரிப்பினைத் தடை செய்தபல்வேறு பிரச்சினைகளால் சூழப்பட்டிருந்தது. கைத்தொழில்கள் மிகவும் உயர்ந்த முதலீட்டுச் செறிவினைக் கொண்டிருந்தமையினால் வேலையில்லாப் பிரச்சினையைத்தீர்ப்பதற்குசிறிய அளவிலேயே உதவின. உற்பத்தி 1963 ல் 6 வீதத்திலிருந்து 1972 ல் 10 வீதத்திற்கு அதிகரித்த அதே வேளையில், இதே பிரிவில் தொழில் வாய்ப்பின் பங்கானது இவ்விருவருட இடைவெளியில் 9.2 வீதத்திலிருந்து 9.6 வீதத்திற்கு மட்டுமே அதிகரித்தது. இறக்குமதி உள்ளீடுகளில் பெரிதும் தங்கியிருப்பதன் காரணமாக பொருளாதாரத்தில் மிகவும் குறைந்த அளவு எதிர் விளைவுகளைக் கொண்ட ஒரு ''தனித்த பகுதியாகவே'' கைத்தொழில்துறை இருந்து வந்தது. இறக்குமதி நுகர்வுப் பொருட்களுக்காக முன்னர் நிலவிய சந்தையினைப் பிடித்து வைத்துக் கொள்ளும் நோக்கில் பெரிய வர்த்தக நிலையங்களே ஆரம்ப இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில்களை ஸ்தாபித்தன.

இத்தகைய போக்கிலிருந்து உருவான ஒரு அடிப்படைக் குறைபாடு யாதெனில் ஸ்தாபிக்கப்பட்ட கைத்தொழில் ஆற்றலானது உயர்ந்த வருமானம் பெறும் உள்ளூர் நுகர்ச்சியாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தைக் கொண்டதாக இருந்ததாகும். உயர்ந்த சத்திவாய்ந்த பாதுகாப்பினுல், செலவுகளைக் குறைப்பதற்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புகள் மந்தப்படுத்தப்பட்டபடியினுல் கணிசமான திறமையின்மைகளும், நிதி இழப்பீடுகளும் ஏற்பட்டதுடன், அவை நுகர்வோனின் நலன் பாதிக்கப்படுவதற்கும் காரணமாயின. இதைத்தவிர, தற்செயலான திட்டயிடுதலினிமித்தமும், நாளாந்த முகாமையிலுள்ள பல்வேறுபட்ட குறைபாடுகளினிமித்தமும் அரச கைத்தொழில்களின் செயற்பாட்டினைத் தடுக்கக்கூடிய மேலதிக கட்டமைப்பு கட்டுப்பாடுகளும் இருந்தன. உயர்ந்த உற்பத்திக் கைத்தொழில்களைக் கொண்ட அரசின் முயற்சிகளுக்கு போதிய முன்னுரிமை கொடுக்குமிடத்து, அது மூலவள ஒதுக்கீட்டிலும், நுகர்வோன் நலனிலும் பாரிய நட்டத்தினை ஏற்படுத்திவதுடன் பொதுச் சேமிப்புகளில் பாரிய சுமையினை உருவாக்கி ஈற்றில் வரவு - செலவுத் திட்டப் பிரச்னையையும் ஏற்படுத்துகிறது.

இவ்வெல்லாக் கட்டுப்பாடுகளையும்விட, இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில் மயமாக்கத்தின் நீண்டகால வாழ்தகவினைப் பாதித்த முக்கிய காரணி, சென்மதி நிலுவைக் கொடுப்பனவுகளுக்கான நிவாரணத்தினைப் பூர்த்தி செய்வதில் கைத்தொழில் துறை தோல்வி கண்டமையாகும். நடைமுறையில் இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில் மயமாக்கலானது, பொருளாதாரத்தின் (வெளிநாட்டில்) தங்கியிருத்தல் நிலையைக் குறைக்கவில்லை; அதன் அமைப்பினை மாத்திரமே மாற்றியது. நுகர்வுப் பொருள் இறக்குமதி கணிசமான அளவில் குறைக்கப்பட்ட வேளையில், மூலப்பொருட்களுக்கும், முதன்மைப் பொருட்களுக்கும் இறக்குமதியில் தங்கியிருப்பதன் மூலமே இதைச் செயற்படுத்தக்கூடியதாக இருந்ததால், எதிர்பார்ப்பிற்கு மாருக, இறக்குமதிகளில் மேலும் மேலும் தங்கியிருக்க வேண்டிய நிலைமையினை உருவாக்கியது. இதற்கு மேலாக, கைத்தொழில் உற்புத்தியின் பெரும் பங்கானது உலகச் சந்தை விலைகளைப் பொறுத்து, போட்டியற்ற விலைப்பெறுமதிகளிலேயே இடம்பெற்றது. இதனுல் சில நிறுவனங்கள் சேமிப்புகளைவிட மேலதிக அந்நியச் செலாவணியை உபயோகித்ததை சாதாரணமாகக் காண முடிந்தது.

மறுபக்கத்தில், 1960 களின் நடுப்பகுதியில் சில கொள்கை முயற்சிகள் இருந்தபோதிலும், அவை கைத்தொழில் ஏற்றுமதிச் சந்தைகளை ஊக்கப்படுத்தவில்லை. 1970 களின் நடுப்பகுதியிலும் கூட ஏற்றுமதி உற்பத்திகளின் மொத்த வருமானமானது (மொத்த ஏற்றுமதிகளின் 3%) கைத்தொழிற் பிரிவிற்கு வேண்டிய வருடாந்த மொத்த இறக்குமதித் தேவையின் 6 வீதத்தினையே பூர்த்திசெய்தது. பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களுக்கான சந்தை நிலைமைகள் வாய்ப்பாக இல்லாதிருந்தமையும், வர்த்தக் மாற்று வீத நிலை மோசமாக இருந்தமையும் சேர்ந்து இறக்குமதிப் பாய்ச்சலைப் பாதித்தமை, 1970 க்களின் முதலரைப்பகுதியில் கைத்தொழில் துறை விஸ்தரிப்பு எதிர்நோக்கிய பிரதான தடங்கலாக இருந்தது. இத்தருணத்தில் கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஒரு குறிப்பிடத்தக்க செழிப்பு நிலை ஏற்பட்டால் அன்றி இவ்விறக்குமதித் தடை தொடர்ந்து கைத்தொழில் ஸ்தம்பிதநிலையை ஏற்படுத்தக்கூடும் என்பது தெளிவாக விளங்கியது.

இப்பின்னணியின் மத்தியிலேயே, 1977 ம் ஆண்டு, முந்திய இரு தசாப்தங்களாக இருந்து வந்த தன்னிறைவுக் கொள்கை நிலைமையிலிருந்து முற்றிலும் விலகிய ஒரு புதிய கொள்கைத் தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டது.

### அடிப்படை அம்சங்கள்

குறைவிருத்தி நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில் மயமாக்கலின் பாரிய தோல்விக்கான, தற்போது பிரபல்யம் அடைந்துள்ள நவீன முறைமைப் பரிகாரத்தின் அடிப்படையில், கைத்தொழில் மயமாக்க உபாயம் இப்புதிய கொள்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் போதிய பாதுகாப்பும் அரசாங்கத் தலையீடும் நிலவியமையினுல் உற்பத்திச் சந்தையில் திரிபுகள் ஏற்பட்டு, மூலவளங்களை ஒதுக்கீடு செய்வதில் திறமையின்மை காணப்பட்டதன் காரணமாக இது தோல்வியடைந்தது என வலியுறுத்திக் கூறப்படுகிறது. ஒப்பீட்டு அநுகூல அடிப்படையில் நாட்டினது உற்பத்திக் கட்டமைப்பினைக் கொண்டுவரக்கூடிய வகையிலும், மூலவளங்களை ஒதுக்கீடு செய்வதில் ஒரு வழிகாட்டியாக இருக்கும் வண்ணமும் சந்தை உதைப்புகளில் பெரிதும் நம்பியிருக்கும் நடவடிக்கைகளை (''கட்டுப்பாடற்ற முறைகள்'') எடுக்க வேண்டுமென இக்கொள்கை விளக்கம் கூறுகிறது. இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இலங்கையின் கொள்கைத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன. இவ் அமுலாக்கல் படிமுறையின் ஆரம்ப கட்டத்திலேயே சில கொள்கை அம்சங்கள் அவற்றின் மூல அமைப்பிலிருந்து குறிப்பிடத்தக்க அளவுக்கு விலகிச் சென்றுள்ளன என்பது இங்கு கவனிக்கப்படவேண்டும். இக் கொள்கைச் சீர்திருத்தத்தி

ளுண்டான விளைவுபற்றிய எமது ஆய்விற்கு இவ்விலகல்களைப்பற்றிய தெளிவான விளக்கம் இருக்க வேண்டியது முதல் முக்கியமான தேவையாகும்.

(அ) நாணயமாற்றுவீத சீர்திருத்தம், தீர்வைச் சீர்திருத்தம் என்பவற்றோடிணைந்த இறக்குமதி வர்த்தக தாராளமயமாக்கலும், நாணய மாற்றுக் கொடுப்பனவுகளும்

மட்டுப்படுத்தப்பட்ட சில பொருட்களுக்கு மாத்திரம் குறிப்பிட்ட உத்தரவுப்பத்திரம் பெறவேண்டிய அவசியம் தொடர்ந்து அமுலில் இருக்க, இறக்குமதி வர்த்தகத்தின் பெரும்பகுதியானது திறந்து விடப்பட்ட பொது உத்தரவுப் பத்திரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. பின்னைய பிரிவினைப் பொறுத்த வரையில், இது வரையிலும் இருந்துவந்த நேரடிக் கட்டுப்பாடுகளுக்குப் பதிலாக, உள்ளூர் உற்பத்திக்கு நியாயமான பாதுகாப்பினை அளிக்கக்கூடிய வகையில் ஆறு வீத தீர்வைக்கட்டமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இத்தீர்வை நிர்ணய சீர்திருத்தத்தினைத் தொடர்ந்து உடனடியாக தீர்வைச் சீர்திருத்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது. (1980 ல் இது ஜனாதிபதி தீர்வைநிர்ணய ஆணைக்குழுவாக மாற்றப்பட்டது.) பலதரப்பட்ட கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதில் ஒரு நடுநிலைமைத் தன்மையைப் பேணும் வண்ணமும், முழுதளந்த பாதுகாப்பு மட்டத்தினை குறைக்கும் வண்ணமும், முழுதளந்த தீர்வைக் கட்டமைப்பினை மீளாய்வு செய்வதே இந்த ஆணைக்குழுவிற்கு கொடுக்கப்பட்ட பொறுப்பாகும்.

செலாவணி வீத சீர்திருத்தமானது, வர்த்தக தாராளமயமாக்கல் முயற்சியின் அத்தியாவசிய அங்கமொன்றாகும். இலங்கையின் செலாவணி வீத அமைப்பு (1968 மே மாதத்திலிருந்து அமுல் படுத்தப்பட்டு வந்த 'பீக்ஸ்' திட்டத்தின் பின்) இரட்டைத்தன்மை கொண்டதாக இருந்து வந்தது. 1977 ன் சீர்திருத்தம் இவ் விரட்டைத் தன்மையை ஒழித்து நாணயத்தை மிதக்கவிடும் முறையை அமுலுக்கு கொண்டு வந்தது. இதன் விளைவாக ('பீக்ஸ்' கட்டண முறை நீக்கப்பட்டதனால்) இலங்கை ரூபாவின் பெறுமதி அமெரிக்க டொலருக்கெதிராக 46.2 சதவீதம் வீழ்ச்சியடைந்தது.

உள்ளூர்க் கைத்தொழில்களின் ஆற்றல் பயன்பாட்டினை முன்னேற்றவும், ஊழல், நிச்சயமற்ற தன்மை, தனியாரின் ஊக்கத்தினை அதைரியப்படுத்திய வீண்தாமதங்கள் என்பவற்றுக்குக் காரணமான நிர்வாகச் சட்டதிட்டங்களை இல்லாதொழிக்கவும், இறக்குமதிப் பிரதியீட்டு உற்பத்தியில், உயர் அநுமதிப்பங்குக் கட்டணங்களால் உருவாக்கப்பட்ட ஏற்றுமதி உற்பத்திக்கெதிரான சார்புத் தன்மையினை அகற்றவும், சர்வதேச ஒப்பீட்டு நய அடிப்படையில் உள்நாட்டு கைத்தொழில்களுக்கு ஒரு சரியான அமைப்பினை ஊக்கப்படுத்தவும் ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்டு வர்த்தகச்சீர்திருத்தங்களும், தீர்வைவரிச் சீர்திருத்தங்களும் அமைந்திருந்தன. உள்நாட்டு உற்பத்திகளின் போது உயர்ந்த முதலீடுகள், உயர்ந்த இறக்குமதிச் செறிவு ஆகியவற்றுக்கான தூண்டற்திட்டத்தின் சார்புத்தன்மையைக் குறைப்பதும், வர்த்தகமற்ற நடவடிக்கைகளுக்கெதிராக ஏற்றுமதிகளினதும், ஏனைய (இறக்குமதி பிரதியீடு) வர்த்தகப் பொருட்களினதும் உற்பத்தியின் லாபத்தன்மையினை அதிகரிப்பதும் நாணயமாற்று வீத சீர்திருத்தங்களின் சில முக்கிய நோக்கங்களாகும்.

சீர்திருத்தங்களுக்குப் பின்னுள்ள காலப்பகுதியில் இத்தீர்வை மீளாய்வுகளும், நாணய மாற்றுவீதக் கொள்கையும், அதன் தாராளமயமாக்கற் கொள்கையுடன் ஒத்துப்போகவில்லையென உலகவங்கியுட்பட இக் கொள்கைச் சீர்திருத்தத்தினைக் கொண்டுவந்தவர்கள் சமீபகாலமாக கருத்துத்தெரிவித்து வந்துள்ளனர். ''ஒரு நடுநிலை வர்த்தக போக்கை'' உருவாக்கும் அதன் மூல நோக்கத்திற்கெதிராக, ஒவ்வொரு தனிப்பட்ட தொகுதிகளுக்கும் வழங்கப்பட்ட பாதுகாப்பு அளவிலுள்ள பேதமானது 1979 ற்கும் 1981 ற்குமிடைப்பட்ட காலப்பகுதியில் அதிகரித்துள்ளதென இதேகாலப்பகுதிக்கான துறைரீதியிலான பயன்படு பாதுகாப்புக் குணகங்களின் ஒப்பீடு தெரிவிக்கிறது. (அதாவது துறைகளிடையே மூலவளங்களை ஒதுக்கீடு செய்யும்போது கொள்கை சற்திரிபுகளை நீக்கல்) மேலும், பெரும்பாலான பகுதிகளில் பயன்படு பாதுகாப்புக் குணகத்தின் பருமனானது, 1979 ஐ விட 1981 ல் குறிப்பிடத்தக்க அளவு உயர்வாக இருந்தது. தீர்வை வீதங்களில் மேற்கொண்ட அடுத்த நடவடிக்கைகளின்போது, கொள்கை வகுப்போர் காப்புமுறையில் நடுநிலைத் தன்மையை எய்தும் அதன் மூல நோக்கிலிருந்து விலகி தெரிந்தெடுத்த அடிப்படையில், உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு பாதுகாப்பு வழங்க முற்பட்டனர். அரசியல் காரணங்களினால் இவ்வாறு நிகழ்ந்துள்ளது போல் தோன்றுகிறது. கொள்கைச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டு அடுத்துவந்த வருடங்களில் பதியப்பட்ட சார்புரீதியான உயர் மட்ட ஏற்றுமதிகள், இறக்குமதிகள் ஆகிய இரண்டிற்குமான மெய்ப் பயன்படு நாணயமாற்று வீதமானது கடந்த மூன்று வருடங்களில் வீழ்ச்சியடைந்துள்ளது. மிதக்கும் நாணய மாற்றுவீதத் திட்டத்தின் மூலமும், பலதரப்பட்ட தூண்டுதற் திட்டங்களின் குறிக்

கப்பட்டுள்ள மறைமுக மதிப்பிறக்கத்தின் மூலமும் எய்தப்பட்ட நேரடி மதிப்பிறக்க அளவானது உள்நாட்டு பணவீக்க அளவிலும்பார்க்க (மொ. உ'. உ சுருக்கிகளினால் கணிக்கப்பட்டது). பின்தங்கிய நிலையிலுள்ள தென இந்த அமைப்பு தெரிவிக்கிறது. எனினும், இக்கால கட்டம் முழுவதும், ஏற்றுமதி உற்பத்திகளுக்கான மெய்ப் பயன்படு நாணயமாற்று வீதமானது மொத்த ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுமிடத்து ஓர் உயர் மட்டத்தில் நிலைத்திருந்ததுடன், தெரிந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதி தூண்டுகைத் திட்டத்தின்கீழ், ஏற்றுமதி உற்பத்திக்கு வழங்கப்பட்ட சாதகமான நிலைமையினையும் பிரதிபலிக்கிறது. இறக்குமதிகளுடன் ஒப்பிடுமிடத்தும், ஏற்றுமதி உற்பத்திகளுக்கான மெய்ப் பயன்படு நாணய மாற்று வீதமானது ஓர் உயர்மட்டத்தில் நிலைத்திருந்ததுடன், உள்நாட்டு சந்தையைவிட ஏற்றுமதிச் சந்தைக்கென உற்பத்தியாக்கப்படும் பொருட்களுக்குச் சாதகமான ஒருபக்க சார்புத்தன்மையினையும் தெரிவிக்கிறது. எனினும், இவ் ஒருபக்கச்சார்பானது கடந்த சில வருடங்களாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன், இறக்குமதி வரிகளின் மேனோக்கிய சீர்ப்படுத்தல்களின் தாக்கத்தினையும் பிரதிபலிக்கிறது. இறக்குமதிகளுக்கான மெய்ப் பயன்படு நாணயமாற்று வீதமானது தெரிவிப்பது யாதெனில், இறக்குமதித் தீர்வைகளில் மேனோக்கிய சீர்திருத்தல்கள் இருந்த போதிலும், சராசரியாக, இறக்குமதிகள் அவற்றின் உள்நாட்டுப் பிரதியீடுகளைவிட மலிவானதென்பதாகும்.

(ஆ) விலைக்கட்டுப்பாடுகளை அகற்றுதல்

சில முக்கிய ''அத்தியாவசிய'' நுகர்வுப் பொருட்களைத்தவிர, ஏனைய பலதரப்பட்ட உற்பத்திப் பொருட்களுக்கு விலைக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. அரசாங்கத்தின் நிர்வாக தீர்மானங்களைவிட திறமைக்கும், சந்தை ஒழுங்கமைப்பிற்கும் அதிக விளைவினைக் கொடுத்து இலாபத்தினை ஈட்டுவதே இக் கட்டுப்பாடற்ற முறையினது நோக்கமாக இருந்தது. எனினும், அநேக பொதுக் கூட்டுத்தாபனங்களின் உற்பத்திகளுக்கு ''நிர்ணயிக்கப்பட்ட விலையே'' இன்னும் நிலவி வருகிறது.

(இ) நேரடி வெளிநாட்டு முதலீட்டினை கவரும் வழிமுறைகளை கைக்கொள்ளல்

மிகவும் அரிதாகவுள்ள உள்நாட்டு முதலீடு தொழில் நுட்பம், முகாமைத்திறன்கள் என்பவற்றை ஈடு செய்யும் முகமாக, நேரடி வெளிநாட்டு முதலீடானது, கைத்தொழில் மயமாக்கத்தில் முக்கிய பங்கினை வகிப்பதற்கு இப் புதிய கொள்கை வழிவகுக்கிறது. குறிப்பாக, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தொழில் நுட்பத்திறமை, சந்தைப்படுத்தும் திறமை, தங்கள் நாட்டுப் பொருளாதாரங்களிடையேயுள்ள பாதுகாப்பு அமுக்கங்களைத் தாக்குப்பிடிக்கக் கூடிய திறமை என்பவற்றினைக் கருத்திற்கொண்டு, இவர்கள் ஏற்றுமதி உற்பத்திக்கான சர்வதேச சந்தைகளை ஊடுருவுவதில் ஒரு முக்கிய கருவியாக இருப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஈ) கைத்தொழிலில் பொதுத்துறை ஈடுபாட்டினை கட்டுப்படுத்துதல்

''பாரிய முதலீட்டுத்தேவை காரணமாகவோ அல்லது நிதிவிளைவுவீதம் கவர்ச்சிகர மாற்றதாக இருக்கும் என்பதாலோ தனி முயற்சியாளர்களைக் கவராத முக்கிய பகுதிகளில் பொதுத்துறையானது தனது கவனத்தினைச் செலுத்தும்'' என்று புதிய கொள்கை தெரிவிக்கிறது. (வரவுசெலவுத்திட்ட உரை 1978) பொதுத்துறை முயற்சியினை மேலும் திறமையான ஒரு துறையாக மாற்றவும், வர்த்தக ரீதியிலே வாழ்தகவு கொண்டதாய் நீடிப்பதற்கும், இவற்றின் இயக்கத்தினால் பொருளாதாரத்தின் ஏனைய பிரிவுகளில் ஏற்றுபடுகின்ற திரிபுத்தாக்கத்தினை நீக்கிவிடவும், நாலு அம்சங்களைக் கொண்ட விவேகமான திட்டமொன்று 1978 ம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

(அ) நிதிசார் வாழ்தகவு குறித்து இழிவு நியமங்களை குறைந்த பட்சமட்டங்களை நிர்ணயித்தல்.

(ஆ) தனியார் பிரிவுடன் சமனாகவும், பாரபட்சம் இன்றியும் போட்டியிடும் தகைமை.

(இ) மேல்மட்ட முகாமையின் உயர்தொழிற்றிறன்.

(ஈ) சிக்கனமற்ற, திறமையற்ற திட்டங்களை தனியார் மயமாக்கல் அல்லது மூடிவிடுதல். சில குறிப்பிட்ட கைத்தொழில் பிரிவுகளை, பொது முதலீட்டிற்கான ஒதுக்கும் முன்னைய நடைமுறை (1957 லிருந்து நடைமுறையிலிருந்தது) மாத்திரம் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

1977ன் இச் சிக்கனவொழுங்குத் திட்டமானது, அதன் அமுலாக்கல் நடைமுறையின் போது, அதன் வேகத்தை இழந்துவிட்டதாக கடந்த ஏழு வருடகால அனுபவம் தெரிவிக்கிறது. பல்வேறு பொது முயற்சிகளில் மிக்வும் பரவலாக திறமையீனம் காணப்பட்டபோதிலும், புடவைக் கைத்தொழிலில் மாத்திரமே தனியார் மயமாக்கலில் ஒரு பெரிய இடத்தினைப் பிடித்துக் கொண்டது. 1933 ல் அரசாங்கம் பல கூட்டுத்தாபனங்களின் திட்டங்களில் (மட்பாண்ட, தோல்பொருள்,

அரச சுரங்க, கனிப்பொருள் அபிவிருத்தி, பெற்ரோலியம், இரும்பு, கனிப்பொருள் மணல் ஆகியன உட்பட) தனியாரின் பங்குபற்றுதலுக்கு அங்கீகாரம் அளித்தது. ஆனல், இன்றுவரை இவை திடமான விளைவுகளைத் தரவில்லை. ஏற்கனவே கூறப்பட்ட மூலக்கொள்கைக்கு முரணுக, பல கூட்டுத்தாபனங்களுக்கு உயர்ந்த முன்னுரிமைப் பாதுகாப்பு உட்பட முன்னுரிமை வசதிகள் அளிக்கப்பட்டது. மேலும், சில இறக்குமதிகளுக்கு உத்தரவுப்பத்திரம் தேவையென்ற தொடர்ச்சியான நடைமுறையானது அரசின் சில கைத்தொழில்களுக்கு மறைமுகப் பாதுகாப்பினை வழங்கியது. இக்கொள்கைச் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டு ஆறு வருடங்கள் சென்றபின்பும்கூட, நிதியமைச்சர் 1985 ம் ஆண்டின் வரவு - செலவுத்திட்ட உரையில் பின்வரும் எச்சரிக்கைக்குறிப்பினைக் கூறவேண்டியிருந்தது. ''துரதிர்ஷ்டவசமாக, சில அரச கூட்டுத்தாபனங்கள் வரவு - செலவு திட்டத்திற்கும், இந் நாட்டு மக்களுக்கும் ஒரு சகிக்க முடியாத சுமையாக இருந்து வருகின்றன .......... இவைகளின் திறமையினை அதிகரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்காவிடில், எதிர்காலத்தில் இதன் விளைவுகள் மிகவும் பாரதூரமாக இருக்கும்.''

(உ) ஏற்றுமதி அபிவிருத்திக்கான முக்கியத்துவம்

ஏற்றுமதி அபிவிருத்திக்கு ஒரு ஸ்திரமான நிருவக பின்னணியினை வழங்குவதற்காக 1979 ம் ஆண்டு 40 ம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்திச் சட்ட மூலம் அமுலாக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டங்களை உருவாக்கவும், அவற்றின் அமுலாக்கலை மேற்பார்வை செய்யவும் பலதரப்பட்ட அரசயாக்கங்களின் ஏனைய ஏற்றுமதி அபிவிருத்தி முயற்சிகளை ஆந்துப்படுத்தவும் 1980 ம் ஆண்டு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அமைக்கப்பட்டது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் அனுசரணையின் கீழ் நேரடி நிதி மானியங்கள், இறக்குமதித் தீர்வைகளை மீளப்பெறும் திட்டம், பிணைஒப்பந்த உற்பத்தி, சந்தை அபிவிருத்தியினையும் உற்பத்தி அபிவிருத்தியினையும் நோக்காகக்கொண்ட ஏனைய வழிமுறைகள் ஆகிய அம்சங்களைக் கொண்ட குறிப்பிட்ட ஏற்றுமதி அபிவிருத்திக் கொள்கைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, மத்தியவங்கி, தேசிய வர்த்தக வங்கிகள் என்பவற்ருேடிணைந்து, நிறுவனங்களின் ஏற்றுமதிச் சத்தியினை ஆராய்ந்து அவற்றுக்கு வேண்டிய செயற்படு மூலதனத்தினையும், ஒழுக்காற்றினையும் வழங்குகிறது. 1977 இலிருந்து அரசாங்கம் கட்டம்கட்டமாக ஏற்றுமதி உற்பத்திக்கான நிதிசார் தூண்டுதல்களை விருத்தி செய்ததோடு, இறுதியாக, இவ்வனுகூலங்கள் ஏற்றுமதித்துறைக்கான வரி விடுதலையாக (1983 வரவு செலவுத்திட்டம் மூலம்) மட்டுப்படுத்தப்பட்டது.

இத்தகைய தெளிவான வழிமுறைகளை விடவும் அரசாங்கமானது, தொழிற்சந்தையிலிருந்த விட்டுக்கொடாத்தன்மையினை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்ததுடன், தீவிர தன்மை கொண்ட தொழிற் சங்கங்களை அடக்குமுறையூடாக மட்டுப்படுத்தியும் வந்துள்ளது. குறிப்பாக 1980 ல் இடம்பெற்ற வேலை நிறுத்தத்தில் பங்குபற்றிய பெருந்தொகையாளரை ஒரேயடியாக வேலை நீக்கம் செய்ததன் மூலமாக தொழிற்சங்கங்களின் வல்லமை அழிக்கப்பட்டமை மெய்வருமான வளர்ச்சியை தடுத்து நிறுத்திய காரணியாக இருந்தது. (லால், ராஜபத்திரன, 1985)

ஒட்டு மொத்தமாக நோக்கும்போது இக்கொள்கைத் திட்டத்தின் உண்மையான அமுலாக்கல் படிமுறையின் போது, முழுதளந்த கைத்தொழில் தூண்டற் கட்டமைப்பில் நடுநிலைமையை எய்தும் அதன் மூல நோக்கத்தினைக் கருத்திற்கொண்டு பார்க்கையில், இக் கொள்கையின் அநேக அம்சங்கள் இன்னும் பூர்த்தியாக்கப்படாத நிலைமையிலேயேயுள்ளதைக்காண முடிகிறது. இப்புதிய உபாயத்தின் சீராக்கல் வரம்புக்குள் ஒத்துப்போகாது, கடந்தகாலத்திலிருந்து தொடர்ந்துவரும் சில கொள்கை அம்சங்கள் இன்றும் இருக்கின்றன. நிகழ்ச்சித்திட்டத்தின்படி முற்றுப்பெறுததன்மை இருந்தபோதிலும், முழுதளந்த கொள்கைச் சீர்திருத்தமானது, முன்னைய ஆட்சியில் இருந்த கட்டுப்பாட்டுமுறை கைத்தொழில் மயமாக்கற் கொள்கையிலிருந்து ஒரு கணிசமான திருப்பத்தினை ஏற்படுத்தியதென்று சந்தேகமின்றிக் குறிப்பிடக்கூடியதாகவுள்ளது. இப்புதிய கொள்கைத் திசை கோட்பாட்டின்படி, கைத்தொழில் மயமாக்கலின்போது போக்குகள், மாதிரிகள், அபிவிருத்தியின் பின்விளைவுகள் என்பவற்றில் ஏற்பட்ட தாக்கங்கள்பற்றி ஆராய்வோம்.

புதிய நிறுவனங்களின் துறைவாரியான பகுப்பு

அண்மைக்காலமாக, புடவை, ஆடைத்துறையே வெளிநாட்டு உள்நாட்டு மூலதனங்களைக் கவரும் முக்கிய துறையாக இருந்து வந்துள்ளது. எனினும், ஆடைப்பகுதியிலும் பார்க்க புடவைப்பகுதியிலேயே செறிவு வீதம் கூடுதலாகவுள்ளது. பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் திட்டங்களில் 50 வீதத்திற்கு மேற்பட்டவை (65 திட்டங்களில் 35) இப்பிரிவினைச் சார்ந்ததாக இருந்தன. இதிலிருந்து, இலங்கைக்குள் நேரடி முதலீட்டுப் பாய்ச்சலின் துரித அதிகரிப்பிற்கான முக்கிய காரணியாக ''கோட்டாக்களை வளைத்துப்பிடிக்கும்'' நோக்கம் (முதலீட்டாளர்கள் தங்கள்

நாடுகளில் எதிர்நோக்கிய கடுமையான கோட்டாக் கட்டுப்பாடுகளினால் வெளிநாட்டுச் சந்தைகளில் இலங்கையின் ஏற்றுமதி கோட்டாக்களை உபயோகிக்கும் விருப்புடன்) இருந்ததென்ற எண்ணத்தினை இது தெரிவிக்கிறது. வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழுவினது திட்டங்களில் 62 வீதத்திற்கு மேற்பட்டவை (114 திட்டங்களில் 71) புடவை, ஆடை, அணிகலன் பகுதிகளைத் தவிர்ந்த பிரிவுகளைச் சார்ந்தவையாகும். இத் திட்டங்களில் அநேகமானவை ''இறக்குமதிப் பிரதியீட்டு'' வகையினைச் சார்ந்தவையாகும். அண்மையில் நடாத்தப்பட்ட வெளிக்களக் கணிப்பீட்டின்படி வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் மொத்த வெளியீட்டில் 44 வீதம் மாத்திரமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதென்றும், மொத்த நிறுவனங்களில் 36 வீதம் மாத்திரமே வெளியீட்டில் ஒரு சிறிய வீதத்தினையாவது ஏற்றுமதி செய்யக்கூடியதாக இருந்ததென்றும் அறியப்படுகிறது. (நிதித், திட்டமிடல் அமைச்சு 1984.)

ஒப்பீட்டு ரீதியில் மூலதனப் பொருட் கைத்தொழில்களும், மென் உற்பத்திக் கைத்தொழில்களும் ஏனைய பிரிவுகளைவிட குறைந்த எண்ணிக்கையான புதிய திட்டங்களைக் கொண்டிருந்தன. இப்பிரிவுகளே இந்த வர்த்தக தாராளமயமாக்கலினால் அதிகமாக பாதிக்கப்பட்டவையென இறக்குமதி கட்டமைப்புகளில் ஏற்பட்ட மாற்றம் பற்றிய ஆய்வு தெரிவிக்கிறது. புடவைக்கடுத்ததாக, கவர்ச்சியைக் கொண்ட பிரிவுகளாக, உணவுற்பத்திகள், இரசாயன, ரப்பர் என்பவற்றைக் கொண்ட உற்பத்திகள் (முக்கியமாக பிவிசி உற்பத்திகள், கூரைத்தகடுகள், பெயின்ட், நிர்மாணக் கைத்தொழிலுக்கு வேண்டிய ஏனைய உள்ளீடுகள்) உலோகமற்ற கனிப்பொருள் உற்பத்திகள் (களிமண், மணல், சீமேந்து உற்பத்திகள், செங்கற்கள் என்பன) ஆகியவை இருக்கின்றன. பலதரப்பட்ட உணவுற்பத்திகளைப் பொறுத்த வரையில், உள்நாட்டு நுகர்ச்சியாளர்களின் குறைந்த கொள்வனவுச் சத்தியுடன் இணைந்த பாதுகாப்பு விலை நிர்ணயம் ஆனது, உள்நாட்டு உற்பத்திகளுக்கு தொடர்ச்சியாக அதிக விலையுள்ள இறக்குமதிப்பொருட்களிலும் பார்க்க இலாபரமான சந்தையினை உறுதிப்படுத்தியது. இரசாயன, ரப்பர் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தித் தொகுதிகள் இறக்குமதியிலேயே அதிகமாக தங்கியிருந்தமையினால் இறக்குமதித் தாராளமயமாக்கல் மூலம் நன்மையடைந்தன.

(மிகுதி அடுத்த இதழில் முடியும்)

(27 - ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்துறைகள் யாவை? இவற்றுக்கு எத்தகைய உதவி அளிக்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

- மலிவாகக் கிடைக்கின்ற ஊழியமும், இறப்பர், ஏனைய விவசாயப் பொருட்கள் போன்ற கைத்தொழில் மூலப் பொருட்களும், ஊழியச் செறிவு, மூலவளம் என்பவற்றின் அடிப்படையில் அமைந்த கைத்தொழில்களை நோக்கி இலங்கையின் முதலீட்டைக் கவரக் கூடிய காரணிகளாகும் எனப்படுகின்றன. அதிகரித்த உற்பத்திச் செலவின் விளைவாகக் கைத்தொழில் நாடுகளிலிருந்து நழுவிச் செல்கின்ற கைத்தொழில்களிலிருந்தும் இலங்கை நன்மை அடைய வேண்டும் எனவும் கூறப்படுகின்றது. இவ்வாறுயின், இது ஆடைத் தயாரிப்பு போன்ற கைத்தொழிலுக்கு மாத்திரம் ஏன் மட்டுப்படுத்தப்பட வேண்டும்?

- ஏனைய கைத்தொழில்களில் இலங்கையின் ஒப்பீட்டு ரீதியான வாய்ப்பினை அதிகரிப்பதற்கு என்ன செய்யலாம்?

தற்போது பின்பற்றப்படுகின்ற ஊக்குவிப்புத் தந்திரோபாயம் செலவுத்தாக்கமானதா? வெளிநாட்டுத் தலைநகரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கருத்தரங்கு வடிவிலான பிரசாரம், ஆங்காங்கே மேற்கொள்ளப்படுகின்ற முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கை என்பவற்றிலிருந்து, ஒப்பீட்டு ரீதியில் எமக்கு வாய்ப்பாக உள்ள காரணிகளிலிருந்து நன்மை அடையக் கூடிய முதலீட்டாளர்களை நோக்கிய நேரடி அணுகு முறைகளாக இது விளங்க வேண்டுமா? இத்தகைய முதலீட்டாளர்களை எவ்வாறு அடையாளம் காணலாம்?

- உள்ளூர் கைத்தொழில் அபிவிருத்திக்கு மிகப் பொருத்தமான ஊக்குவிப்புக் கட்டமைப்பு யாது?

- தற்போது அளிக்கப்படுகின்ற ஏற்றுமதி ஊக்குவிப்புக்கள் போதுமானதா? தாக்கம் மிக்கதா?

- போட்டி மிக்க ஏற்றுமதி முயற்சிகளை ஸ்தாபிப்பதற்கு எமது சமூகப் பொது முதலீட்டு வசதிகளும், செலவுகளும் ஊக்கம் அளிப்பனவாக இருக்கின்றனவா?

முதலீட்டு நடவடிக்கைகளில் தனியார்துறை மிக முக்கியமான பங்கு வகிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டு, அதற்குத் தேவையான நிதியமும் இருந்த போதிலும், கூடுதலான உற்பத்தி நிதியத்தைக் கவருவதற்குரிய இயலளவும் மூலவளங்களும் தனியார் துறைக்கு இல்லாமலிருப்பது, அபிவிருத்தி நிதி நிறுவனங்களின் கூடிய கவனத்தை ஈர்த்துள்ளது.

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50
வருட சந்தா ரூ. 40.00

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள
இன்டர் நெஸனல் கிரபிக் மெகசின் லிமிடட் அச்சுயந்திரசாலையில்
அச்சிடப்பட்டது.